பக்கங்கள்: இருபத்துதெட்டு +I,II

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆடி 02 ஞாயிற்றுக்கிழமை (18.07.2010)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 234

# பான் கீ-மூன் - மஹிந்த கூட்டறிக்கையை விரைந்து செயற்படுத்த வலியுறுத்து

## மீண்டும் கொழும்பு வரும் புஹுனே எடுத்துரைப்பார்

நியூயோர்க்,ஜூலை18

2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் இலங்கை ஜனாதிபதியும் தாமும் சேர்ந்து வெளியிட்ட கூட்டறிக்கைகளில் இனங் காணப்பட்ட மூன்று முக்கிய விடயங் களையும் விரைந்து செயற்படுத்துமாறு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் வலியுறுத்த உள் ளார்.



ஐக்கிய நாடுகள் சபையின் கொழும்பு அலுவலகத்திலிருந்து திருப்பி அழைக் கப்பட்ட ஐ.நா.வதிவிடப் பிரதிநிதி நீல் புஹுனே ஊடாக செயலாளர் நாயகம் பான் கீ மூன் ஜனாதிபதி மஹிந்தவை இதுகுறித்து வற்புறுத்துவார்.

ஐக்கிய நாடுகள் சபையின் இணைப் பேச்சாளர் பர் ஹான் ஹக் இதனை நேற்றுத் தெரிவித்தார்

இலங்கையில் பணிபுரியும் ஐ.நா. அலுவலர்களை மிக நல்ல முறையில் நடத்த வேண்டும் என்பதனையும் பான் கீ-மூன் கனதியுடன் வலியுறுத்துவார் என்றும் பர்ஹான் மேலும் தகவல் வெளியிட்டார்.

இலங்கையிலிருந்து ஐ.நா. நிர்வாகத்தினால் திருப்பி அழைக்கப்பட்ட நீல் புஹுனே மீண்டும் அங்கு பணிக்கு அனுப்பப்படுவதேன் என்று கேட்டதற்கு -

ஐ.நா. அதிகாரிகள், அலுவலர்களுக்கு இடைஞ்சல் விளை வித்த நிலைமையில் இப்போது முன்னேற்றம் ஏற்பட்டுள் ளது. முந்திய சூழ்நிலை பெரிதும் மாறிவிட்டது. அதனால் அவர் கொழும்புக்கு அனுப்பப்படுகிறார் - என்று பர்ஹான் பதிலளித்தார்.

2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் ஐ.நா. பொதுச் செயலாளர் நாயகம் பான் கீ-மூனும் வெளியிட்ட கூட்டறிக்கையில் -

★ இடம்பெயர்ந்த மக்களை (28ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைத் தமிழருக்கான புனர்வாழ்வுப் பணிகளை மதிப்பீடு செய்ய சிறப்புத் தூதுவரைஅனுப்பவேண்டும்

## கருணாநிதி பிரதமர் மன்மோகனுக்குக் கடிதம்

சென்னை,ஜூலை18

இலங்கைத் தமிழர்களுக்கு அந்த நாட்டு அரசாங்கம் வழங்கும் புனர்வாழ்வுப் பணி கள் எந்தளவில், எந்த வகையில் உள்ளன என்பதனை மதிப்பீடு செய்வதற்கு மத்திய அரசு சிறப்புத் தூதுவர் ஒருவரை அனுப்ப வேண்டும். தமிழக முதல்வர் மு.கருணா நிதி, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கி டம் இவ்வாறு கேட்டுள்ளார்.

இலங்கையில் போரினால் பாதிக்கப் பட்ட தமிழ்மக்களுக்கான புனர்வாழ்வுப் பணிகள் எதிர்பார்த்த அளவில் நடைபெற வில்லை. ஆகையால் உண்மை நிலை களைக் கண்டறியவும் மதிப்பீடு செய்ய வும் இந்திய அரசு ராஜீக வழியில் சிறப்புத் தூதுவர் ஒருவரை அனுப்பவேண்டும் என்று நேற்று (17ஆம் திகதி) பிரதமருக்கு

(28ஆம் பக்கம் பார்க்க)

## 'லங்கா' பத்திரிகை நிறுவனம் முற்றுகை

கொழும்பு,ஜூலை18

நுகேகொடையில் உள்ள 'லங்கா' சிங் களப் பத்திரிகையின் அலுவலகம் நேற்று முன்தினம் குற்றப் புலனாய்வுப் பொலிஸா ரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத் தப்பட்டது.

அதன் பின் அப்பத்திரிகையின் ஆசிரியர் சந்தன சிறிமல்வத்த மற்றும் செய்தியாளர் பிரியந்த ஆகியோர் குற்றப்புலனாய்வுப் பொலிஸ் அலுவலகத்துக்கு அழைக்கப் பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின் றனர்.

(28ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றக் குழுக் கூட்டங்களில் பொன்சேகா பங்குபற்ற அனுமதி மறுப்பு

### இது நீதிமன்ற உத்தரவை மீறும் செயல் என்கிறார் அனுரகுமார எம்.பி.

கொழும்பு,ஜூலை18

ஜனநாயக தேசிய முன்னணியின் நாடாளு மன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சரத் பொன்சேகா நாடாளுமன்றக் குழுக் கூட்டங்களில் பங்குபற்றுவதற்கு அனுமதி மறுக்கப்பட் டுள்ளது.

இந்தச் செயற்பாட்டுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக அந்த முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றக் குழுக் கூட்டங்கள் நடந்தன. அக்கூட்டங்களில் பங்கேற்க சரத் பொன்சேகாவுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த அனுரகுமார திஸநாயக்க, கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் உத்தரவை மீறும் செயலா கும் இது. நாடாளுமன்றத்தின் சகல செயற் பாடுகளிலும் சரத் பொன்சேகா பங்குபற்ற நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தது. அந்த அனுமதியை மீறும் செயற்பாட்டுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க விருக் கிறோம் - என்றார்.

அடுத்த வாரம் நாடாளுமன்றம் கூடும்

(28ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் மற்றும் பொலிஸ் ஆணைக் குழுக்களை நியமிப்பதற்கு அரசு - எதிரணி இணக்கம்

கொழும்பு,ஜூலை18

உத்தேச அரசமைப்புத் தொடர்பான பேச்சுவார்த்தைகளின் போது அரசமைப் பின் 17 ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்தி தேர்தல் ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு ஆகியவற்றை நிறுவுவது தொடர்பாக அரசும் எதிர்க்கட்சியும் விரை வில் இணக்கம் காணவுள்ளன என்று தெரி விக்கப்படுகிறது.

உத்தேச அரசமைப்புத் தொடர்பாக ஜனாதிபதியும் எதிர்க்கட்சித் தலைவரும்

(28ஆம் பக்கம் பார்க்க)

### நாடு முழுவதும் வெகு தீவிரமாகப் பரவிவரும்

# டெங்கு நோயைக் கட்டுப்படுத்தி ஒழிப்பதற்கு படையினர், பொலிஸார் அடங்கிய செயலணி

### சுகாதார அமைச்சு அவசர நடவடிக்கை

கொழும்பு,ஜூலை18

நாடு முழுவதும் தீவிரமாகப் பரவி வரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தி அதனை ஒழித்துக்கட்ட படையினர் மற்றும் பொலி ஸாரைக் கொண்ட விழிப்புணர்வுச் செய லணி ஒன்றை அரசாங்கம் அவசரமாக - உடனடியாக உருவாக்கவிருக்கிறது.

நாடு முழுவதும் செயற்படத்தக்க வகை யில் ஆயிரம் பேரைக் கொண்டதாக இந்தச் செயலணி உருவாக்கப்படும் எனத் தெரி விக்கப்பட்டுள்ளது.

படை அதிகாரிகள், சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள், சிப்பாய்கள், பொலிஸார் ஆகி யோர் அங்கம் பெறும் இந்தச் செயலணி டெங்கு ஒழிப்புச் செயற்பாட்டு நடவடிக் கைகளை முன்னெடுக்கும்.

டெங்கு தீவிரமாகப் பரவிவருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்ததை அடுத்தே இந்தச் செயலணி உருவாக்கப்படுவதாக

(28ஆம் பக்கம் பார்க்க)



நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி வழங்கும் அடகுச்சேவை

- 365 நாள் வங்கிச் சேவை
- நீடித்த வங்கி நேரங்கள்
- அதிகபட்ச பாதுகாப்பும் நம்பகத்தன்மையும்
- முன்னறிவித்தல் இன்றி மீட்கலாம்
- பகுதி பகுதியான மீட்பு வசதி

யாழ்ப்பாணக் கிளை: 35, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 4 920 283 - 5

அடகுச்சேவை வவுனியா மற்றும் மட்டக்களப்பிலும் பெற்றுக்கொள்ளலாம்

Nations Trust Bank
Nations
Gold Advances

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வீடு விற்பனைக்கு

யாழ். மானிப்பாய் வீதியில், மாநகர சபை எல்லைக்குள் வீடு விற்பனைக் குண்டு. தொடர்பு : 0776991795

## ஆண், பெண்களுக்கான பயிற்சிகள்

Bereau கட்டுதல் என்பன நடைபெறுவதுடன் கடன், புலமைப்பரிசில், நட்டஈடு விண்ணப் பங்கள், முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப் படுகின்றன.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்,
யாழ்ப்பாணக் கிளை
61/6, குறுக்கு வீதி, (மாநகரசபை முன்வீதி),
நல்லூர், யாழ்ப்பாணம். (101154)

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்ப்பாணத்தில் சிறிய குடும்பத்துக்கு சகல வசதிகளுடனும் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு : 0777 179461

## யா/ கொக்குவில் இந்துக் கல்லூரியை வாழ்த்துகின்றோம்



பெருமையும், புகழும், புதுப் பொலிவும் பெற்று நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் எம் அன்னையாம் யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி மேலும் பன் மடங்கு புகழ் பெற்று பார்போற்ற வாழ்த்துகின்றோம்.

கொக்குவில் சனசமூக நிலையம்,
(பிரம்படி)

## மாபெரும் ஆடித்தள்ளுபடி
## குமரன் சில்க்ஸ்

இந்தியன் சிக்கின்ஸ் சாறி வகைகள், துணி வகைகள், இந்தியன் கொற்ரின் சாறி வகைகள், பட்டுச்சாறி வகைகள், சல்வார் வகைகள், சர்வார் துணி, சிறியோர்களுக்கான சூட் வகைகள், கவுண் வகைகள், ஸ்கேட் அன் பிளவுஸ் வகைகள், ஆண்கள், பெண்களுக்கான ஜீன்ஸ் வகைகள், டெனிம் ஜீன்ஸ் வகைகள், சூட்டிங் ஆண், பெண்களுக்கான ரீசேட் வகைகள் அனைத்தையும் 15% இருந்து 35% வரை விலைக் கழிவுடன் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.



★இச்சலுகை
19.07.2010 முதல்
10.08.2010 வரை
மட்டுமே!

குமரன் சில்க்ஸ், இல-02A, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். (101153)

## கோப்பாய் கலைவாணி ஆங்கில & கணனி
## பயிற்சி நிறுவனம்
### முறைசாரா கணனி பயிற்சிநெறி

யாழ். கல்வி வலய அனுசரணையுடன் மேற்படி பயிற்சி நெறி நாளை (19.07.2010) திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு ஆரம்பமாக உள்ளது. ஆர்வமுள்ளவர்கள் பதிவு களை இன்று (18.07.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மேற்கொள்ளவும்.

மானிப்பாய் வீதி,
கோப்பாய். (சி/569332)

## உடனடி வேலைவாய்ப்பு

***UK***யை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் பிரபல ***UK VISA Consultant*** நிறுவனத்தின் யாழ்.காரியாலயத்திற்கு ஆங்கிலத்தில் நன்கு தேர்ச்சி பெற்ற 20-28 வயதுக்குட்பட்ட ***Consultant*** பெண் ஒருவர் தேவை. குறைந்தபட்சம் ***GCE (A/L)*** சித்தியெய்தியிருக்க வேண்டும்.

நேர்முகப் பரீட்சை எமது யாழ்.காரியாலயத்தில் நடைபெறும்.

**கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.**

மேலதிக தொடர்புகளுக்கு எமது நிறுவனத்துடன் தொடர்புகொள்ளவும்.



EXPONET
Overseas Consultants
(Group of Exponet (Pvt) Ltd.)

***Exponet Overseas Consultants***
*102-2/2, Navalar Road,*
*(Luxman Plaza Building) Jaffna.*
*To Contact: 0117555514*
*Hotline: 0714150995*
*email: nimal@expogroup.lk*

## மத்தியஸ்தர் தினவிழா இன்று

தேசிய மத்தியஸ்த தின விழா வலி.கிழக் குப் பிரதேச மத்தியஸ்த சபையால் இன்று காலை 9 மணிக்கு பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினர்களாக யாழ்.மாவட்ட நீதிபதி அ. பிறேமசங்கர், மல்லாகம் மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் ஆகியோர் கலந்துகொள்வர்.

## நவக்கிரி எல்லாளன் விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி

**காலம் :**
இன்று (18.07.2010) ஞாயிற்றுக்கிழமை.
**நேரம் :**
பிற்பகல் 1 மணி.
**இடம் :**
நீர்வேலி சவாரித்திடல்.
நிர்வாகம். (101136)

## கணனிக் கல்வி

* Ms office * DTP * Hardware * Web design
* Computerized Accounting
* Graphic Design * Internet & E-mail* Kids Program

அனைத்துக் கற்கை நெறிகளும் தனிப்பட்ட கவனிப்புடன் கற்பிக்கப்படும்.

**Sky Computer (pvt.) Ltd.**
162, Main street, Jaffna. Tel: 0212221417 (101138)

## வேலைக்கு ஆள் தேவை

↓ சப்பிளேயர்
↓ றோல் சுற்றுபவர்
↓ சமையலாளி (குக்)

போன்றவர்கள் உடன் தேவை.

குறிப்பு :- வேலை பழக விரும்புவோரும் ஏற்றுக்கொள்ளப்படும்.

பழமுதிர்ச்சோலை,
624 A, பருத்தித்துறை வீதி, நல்லூர். (101117)

## நிழல் அல்ல! நிஜம்!

ஒரு வாரத்தில் ..........
என்றும் இளமையுடனும் அழகிய நிறத்துடனும்
**திகழ்வதற்கும்,**
கருமை நிறம், கரும்புள்ளிகள், கருவளையம், தோற்சுருக்கம்
**நீங்குவதற்கும்**
உடற்பருமன் கூட்டுவதற்கும், குறைப்பதற்கும்
**அழையுங்கள்**
0774011129 (WE CARE ALWAYS!) (101138)

## வேலையாள்கள் தேவை

*சிட்டை எழுதுநர்
*காசாளர்
*கணக்குப் பதிவாளர் (கணனி)
*கணக்காளர்
*விற்பனையாளர்
*விற்பனை உதவியாளர்
*களஞ்சியப் பொறுப்பாளர்
*பொதி செய்வோர்
*சாரதி

காலம்: நாளை (19.07.2010) திங்கட்கிழமை
நேரம்: முற்பகல் 11 மணி

தகைமை உடையவர்கள் உரிய ஆவ ணங்களுடன் நேர்முகத் தேர்விற்கு சமுகம் அளிக்கவும்.

**AMT றேட் சென்ரர்**
காக்கா கடைச் சந்தி,
A9 றோட், கிளிநொச்சி.
T.P.: 0214920950

## விற்பனையாளர்கள் தேவை

கண்ணாடி வியாபாரத்திற்கும் புடைவை வியாபாரத்திற்கும் ஆண, பெண் இருபா லாரும் உடனடியாகத் தேவை. அனுபவமுள் ளவர்களும் பழக விரும்புபவர்களும் நேரில் வரவும்.

தொடர்பு : த.குமாரசாமி அன் சன்ஸ்,
248/1, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (இ/569323)

## விற்பனைக்கு

ஒரு வயது நிரம்பிய அல்சேசன் ஆண் / பெண் நாயும், 8 மாத பூர்த்தியான பொமேரியன் ஆண் / பெண் நாயும், 3 மாதம் நிரம்பிய பொக்சர் பெண் நாயும், டாசோன் பெண் நாயும், பொக்கட் பெனியர் பெண் நாயும் வான் கோழியும் விற்பனைக்கு.

தொடர்பு:
வி.மயூரன்
இல.209, பலாலி றோட்,
ராஜ பிளாசா முன்பாக,
கோண்டாவில்.

## SHAMROCK

* A/L கலை வர்த்தக கணிதவியல் பிரிவுகளுடன் ஆங்கிலம், G.I.T. வகுப்புகள்.
* Gr I முதல் வரை O/L
* O/L Repeat.
* Eng.MED 6 - 11
* புலமைப்பரிசில் (5)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு : ஜோர்ஜ் ராஜன்,
70/2, பழைய பூங்கா வீதி,
கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (101142)

## வேலையாள்கள் தேவை

*கணனி இயக்குநர்
*மேற்பார்வையாளர்
*கணக்காளர்
*கணக்குப் பதிவாளர் (கணனி)
*சிட்டை எழுதுநர்
*விற்பனையாளர்
*விற்பனை உதவியாளர்
*காசாளர்
*பொதி செய்வோர்
*களஞ்சியப் பொறுப்பாளர்
*சாரதிகள்
*பண வசூலிப்பாளர்
*சமையலாளர்

காலம்: 20.07.2010
நேரம்: மு.ப. 10 மணி

தகைமை உடையவர்கள் உரிய ஆவ ணங்களுடன் நேர்முகத் தேர்விற்கு சமுகம் அளிக்கவும்.

**ராம் சுப்பா சிற்றி**
306, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021222 1252 / 0212221262

## *1st year Remembrance In Loving Memory of*
## *Augustine Crishan*

| Born | Entered Glory |
|---|---|
| 12.06.1987 | 18.07.2009 |

"I have written your name on the palms of my hands"
Isaiah 49:16

*Most Gracious Father,*

*Admit your son Augustine Crishan, to the fellowship of your saints and may he enjoy the happiness of everlasting life. Eternal rest grant unto him O'Lord and let perpetual light shine upon him. May he rest in peace, Amen.*

*A Holy mass will be offered on Monday 19th July 2010, at 4.00 p.m at st.Mary's Cathederal Jaffna. Your presence and prayers are solicited.*

Mr. & Mrs. A.Augustine
18,Kandy Rd,
Chundukuli,
Jaffna.
T.P.:0212226927

*Fondly remembered and sadly missed by*
Appah, Ammah, Brother, Sisters, Ammamah & near ones.

## மாசடைந்த கிணறுகள் விவரம் சேகரிக்கப்படுகிறது

நாவற்குழி,ஜூலை18

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ். மாவட்ட அலுவலகம் மாசடைந்த கிணறுகளின் விவரங்களைத் தருமாறு பிரதேச செயலர்களுக்குக் கோரிக்கை விடுத்துள்ளது.

கிராம அலுவலர்களின் மூலமாக இத்தரவுகளைத் திரட்டும் நடவடிக்கைகளில் பிரதேச செயலர்கள் ஈடுபட்டுள்ளனர்.

நிலத்தடி நீர் வளத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஒன்றாகவே மாசடைந்த கிணறுகளின் விவரங்களைத் திரட்டுவதாக சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

(1-121)

## தேவை

காகிதாதிகள், பாடசாலை உபகரணங்கள் விற்பனையில் அனுபவமுள்ள ஆண்/ பெண் தேவை.

* கணக்காளர்
* பில் கிளார்க்
* A -AD

*(மாநகர எல்லைக் குட்பட்டவர்கள்)*

தொடர்பு:
**பேப்பர் ஹவுஸ்**
100, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
077 8393973

## மரண அறிவித்தல்கள்

### *சந்திரலிங்கம் ஷைலேந்திரன் (சயிலன்)*



இல. 38, கோணாவளை வீதி, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரலிங்கம் ஷைலேந்திரன் (சயிலன்) 17.07.2010 சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் சந்திரலிங்கம் - கலாவதி தம்பதி களின் அன்பு மகனும் ரம்ஜாவின் பாசமிகு கணவனும் காலஞ்சென்ற அசோக்குமாரின் அன்புத் தம்பியும் அகிலனின் அன்பு அண்ணனும் சற்குணம்-குணமணி தம்பதிகளின் அன்பு மருமகனும் கலைமதியின் மைத்துனரும், பகிசுயனின் அன்புப் பெரியப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.38, கோணாவளை வீதி,*
*கொக்குவில்.*
*T.P.: 0776950048*
*0213006603*
(101156)

தகவல்:
**க.சந்திரலிங்கம்**
*(தந்தை).*

### *சுப்பிரமணியம் கமலாம்பிகை*



சிங்கப்பூரை பிறப்பிடமாகவும் வட்டுக் கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கமலாம்பிகை நேற்று (17.07.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாரு சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் சாரதா தேவி, நடராஜமூர்த்தி (கனடா), காலஞ்சென்ற கணேசமூர்த்தி ஆகியோரின் அன்புத் தாயாரும் மேரிதாசன் (ஆங்கில ஆசிரியர்), தயாநிதி (கனடா) ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (18.07.2010) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அடைக்கலந்தோட்டம்*
*கந்தசாமி கோயிலடி, வட்டுக்கோட்டை.*
(101157)

தகவல்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிந்துபோகும் தமிழர் கலாசாரத்தைக் காக்கும் ஆரம்பப் புள்ளியிடும் நல்லூர்த்திருவிழா



யாழ்ப்பாணத்திலுள்ள ஆரம்பப் பாடசாலை ஒன்றில் ஆசிரியர் மாணவர்களுக்கு அக்கறையோடு பாடம் நடத்திக் கொண்டிருக்கிறார். பாடம் முடிவில் மாணவர்களை நோக்கி கேள்விகளைக் கேட்கிறார்.

''தமிழர்கள் கொண்டாடும் பண்டிகைகள் எவை?''

ஆசிரியரின் கேள்விக்கு மாணவர்கள் ஒவ்வொருவராக எழுந்து தமக்குத் தெரிந்த பண்டிகைகளைப் பட்டியலிடுகிறார்கள்.

''தீபாவளி''

''தைப்பொங்கல்''

''சித்திரை வருடப்பிறப்பு''

இப்படி சொல்லிக் கொண்டு வருகையில் திடீரென்று ஒரு மாணவன் சொன்ன பதிலைக் கேட்டு ஆசிரியருக்கு சிரிப்பை அடக்க முடியவில்லை. அவன் சொன்ன பதில் இது தான்-

''நல்லூர்த் திருவிழா சேர்''.

இது நகைச்சுவையாக இருந்தாலும் கூட இன்னொரு உண்மையையும் சொல்கிறது. தைப்பொங்கல், தீபாவளி போன்ற தமிழர் திருநாள்களில் ஒன்றாக நல்லூர்த் திருவிழாவும் யாழ்ப்பாணத்தவரிடையே முக்கியத்துவம் பெற்ற ஒன்றாக மாறியிருக்கிறது என்பதே அது.

யாழ்ப்பாணம், என்றவுடனேயே பனைக்கு அடுத்த படியாக ஞாபகத்துக்கு வருவது நல்லூர் தான். யாழ்ப்பாணம் வருகின்ற எல்லோருமே ஏதோ கட்டாயக் கடமைபோல நல்லூர் முருகனையும் தரிசிக்கச் செல்வது வாடிக்கையாகிவிட்டது. இன, மத பேதமின்றி சகலருமே நல்லூர் முருகன் மீது பற்றுடையவர்களாகவே இருக்கிறார்கள். யாழ்ப்பாணத்துக்கு ஜனாதிபதி வந்தாலோ அல்லது அமைச்சர்கள் வந்தாலோ கூட நல்லூருக்குச் செல்வதையே தமது நிகழ்ச்சி நிரலில் முதலாவதாக வைத்திருக்கிறார்கள். அந்தளவுக்கு யாழ்ப்பாணத்தவர்களுக்கு மட்டுமன்றில்லாது எல்லோருக்குமே முக்கியமான தலமாக நல்லூர் மாறியிருக்கிறது.

பொதுவாகவே யாழ்ப்பாணத்தவர்கள் பற்றியும், இங்குள்ள ஆலய திருவிழாக்கள் பற்றியும் 'எதுவுமே சொன்ன நேரத்துக்கு நடப்பதில்லை' என்ற ஒரு கணிப்பு உண்டு. ஆனால் அந்தக் கணிப்பு நல்லூரில் தலைகீழாக இருக்கிறது. எதுவுமே அட்சரம் பிசகாது குறித்த நேரத்துக்குள் நிகழ்ந்து முடிவதால் நல்லூரைத் தரிசிக்க வருவோருக்கு வீண் காலதாமதங்கள் ஒருபோதுமே ஏற்பட்டதில்லை. நல்லூரின் மகோன்னத எழுச்சிக்கு நேரம் தவறாமையும் ஒரு முக்கிய காரணம் தான்.

அந்நியர்களின் ஆட்சியிலேயே அவர்களின் எதிர்ப்புகளையும் மீறி, பல படையெடுப்புகளையும் தாண்டி, எங்கள் மக்கள் போர்க்காலத்திலே தங்கள் சொந்த நிலங்களை இழந்து இடம்பெயர்ந்தது போல தானும் இடம் பெயர்ந்து பல இன்னல்கள் மத்தியிலும் தழைத்தோங்கி யாழ்ப்பாணத்தின் குறியீடாக மாறிப் போகும் அளவுக்கு இன்று எழுச்சி பெற்றிருப்பது நல்லூரின் வரலாற்று முக்கிய்த்துவத்தையும் சொல்லி நிற்கிறது.

இப்படியெல்லாம் யாழ்ப்பாணத்துக்கும் இங்குள்ள மக்களுக்கும் ஒரு ஆதர்ச அடையாள மாக மாறியிருக்கும் நல்லூர்க் கந்தனின் பெருந்திருவிழாவை ஒரு பண்டிகை போல யாழ். மக்கள் கொண்டாடி வருவது ஆச்சரியத்துக்குரிய விடயமல்லவே. நல்லூர்த் திருவிழா என்றாலே அடுத்த கணம் எல்லோர் கண்ணிலும் தோன்றுவது அங்கு திரள்கின்ற சனக்கூட்டம் தான். குடாநாட்டில் உள்ள ஒட்டுமொத்த மக்களும் ஒன்றாகத் திரண்டு வந்துவிட்டார்களோ என்று எண்ணும் அளவுக்கு நல்லூர்ப் பெருந்திருவிழாவில் 25 நாள்களும் மக்கள் கூட்டம் அலைமோதும்.

விளையாட்டுப் பொருள்கள், பாத்திர பண்டங்கள், ஐஸ்கிறீம் வகைகள், கச்சான், கடலை போன்றவற்றை விற்பனை செய்வோர் நல்லூர் ஆலயத்தில் இருந்து மிக நீண்ட தொலைவு வரை கடை பரப்பி

உண்டுவிட்டு அதன் எச்சங்களை அவ்விடத்திலேயே போட்டுவிட்டு அகன்று விடும் சம்பவங்களும் தாராளமாக நிகழ்ந்திருக்கின்றன. இதனால் அப்பகுதியெங்கும் மாமிச எச்சங்கள் நிறைந்திருந்து ஆலயச் சூழலின் புனிதத்தையே கேள்விக் குறியாக்குகின்றன. இது தவிர ஒவ்வொரு உடல் உறுப்பையும் கூறு போட்டுக் காட்டுவது போல மிகச் சொற்பமான - ஆபாச உணர்வைத் தூண்டுகின்ற - ஆடைகளோடு ஆலயத் தரிசனம் செய்கின்ற சுற்றுலாப் பயணிகளை அவதானிக்கும் நம்மர்கள் மட்டும் சும்மா இருப்பார்களா? 'கானமயிலாடக் கண்ட வான் கோழி போல' அவர்களும் யாழ். நகரில் மூலைக்கு மூலை முளைத்திருக்கும் நடைபாதைக் கடைகளுக்கு ஓடிச் சென்று இத்தகைய கவர்ச்சிகரமான ஆடைகளை வாங்கிக் கொழுவிக் கொண்டு - நல்லூரைக் கும்பிட வந்துவிடுகிறார்கள். அங்கிருந்தவர்கள் யாராவது ''உங்களுக்கு வேட்டி கட்டிக் கொண்டு வரத் தெரியாதா?''

என்றோ அல்லது

ஆலயத்துக்குள் சென்று வழிபாடு செய்யலாம் என்று மிக இறுக்கமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதனால் நல்லூருக்குச் செல்லும் எல்லோருமே தமிழர் கலாசாரத்தை பிரதி பலிக்கும் உடைகளிலேயே செல்ல வேண்டிய நிலை தோன்றியுள்ளது.

யாழ்ப்பாணத்தவர்கள் மாத்திரமன்றி, தென்னிலங்கைப் பயணிகள், புலம் பெயர்ந்தவர்கள், வெளிநாட்டவர்கள் என எல்லோருமே இத்தகைய உடைகளை அணிந்தால் மாத்திரமே ஆலயத்தக்குள் சென்று வழிபடும் வாய்ப்பைப் பெற முடியும். இல்லாவிட்டால் வெளியே நின்று கும்பிட்டு விட்டுப் போக வேண்டியது தான். இவ்வாறு தமிழர் பாரம்பரியத்தைப் பேணுகின்ற நடைமுறையை அறிவித்த அதிகாரிகளை யாழ்ப்பாணத்தவர்கள் சார்பில் நிச்சயம் பாராட்டத்தான் வேண்டும்.

அதே வேளை வெளிநாட்டவர்கள், சுற்றுலாப் பயணிகள் விடயத்தில் இந்த நடைமுறை தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் சொல்லப்படுகின்றது. நல்லூர் ஒரு தெய்வீக ஸ்தலம் என்பதையும்

## தமிழ்க் கடவுளின் இன்னுமொரு திருவிளையாடல் அரைகுறை ஆடைகளுக்கு வருகிறது தடை!

இருப்பார்கள். இது தவிர நான்கு வீதிகளிலும் சமயப் பிரசங்கங்கள், அன்னதானம், தாக சாந்தி நிலையங்கள், கண்காட்சிகள் என்பனவெல் லாம் பலமாக நடந்தேறும்.

ஓளண்யன்

இப்படியெல்லாம் ஒரு பண்டிகையாக கொண்டாடப்பட்ட நல்லூர்த் திருவிழாவில் கலந்து கொள்ளவெனப் புலம் பெயர்ந்த மக்களும், தென்னிலங்கை மக்களும், வெளிநாட்டவர்களும் வந்து செல்வது வழமை. பொதுவாகவே ஓகஸ்ட் மாதத்தில் ஐரோப்பிய நாடுகளிலுள்ள பாடசாலைகளுக்கு விடுமுறை என்பதால் புலம் பெயர் மக்கள் பெருமளவில் வருவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இது போலவே இலங்கையிலும் ஓகஸ்ட் மாதத்தில் இரண்டாம் தவணை விடுமுறை விடப்படுவதால் இங்குள்ள இளையவர்களும் பள்ளிக் கூடப் பயமின்றி திருவிழாக்களில் கலந்து கொள்ள முடிந்தது. இவற்றினால் எப்போதுமே நல்லூர்த் திருவிழா 'ஜே....ஜே.!' என்று களைகட்டியது.

போர் ஓய்ந்து, மீண்டும் இயல்பு நிலை திரும்பியுள்ள சூழலில் இம்முறை வழமைமய்க் காட்டிலும் பன்மடங்கு அதிகமானோர் நல்லூர்த்திருவிழாவில் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப் படுகின்றது. வழமையாக நல்லூர்த்திரு விழாவை ஒட்டி சில விஷேட நடை முறைகளை மாநகர சபை நடை முறைப்படுத்துகூது வழமை. ஆனால் அவற்றில் உடைபற்றி கட்டுப்பாடுகள் எதுவுமே இருந்ததில்லை. யாரும் எத்தகைய உடையை அணிந்த படியும் நல்லூருக்குள் சென்று முருகனைத் தரிசிக்கலாம் என்ற நிலையே இது நாள் வரையும் இருந்தது. ஆனால் ஏ9 வீதியின் திறப்போடு மீண்டும் குடாநாட்டுக்குள் சாரி சாரியாக உள்நுழையத் தொடங்கிய சுற்றுலாப் பயணிகளின் அத்துமீறிய செயற்பாடுகள் ஆடை பற்றிய கட்டுப்பாடுகளையும் கொண்டு வர வைத்துவிட்டது.

### ஆடைக் கலாசாரத்தின் அழிவு

நவ நாகரிக ஆடைகளோடு வந்திறங்குகின்ற சுற்றுலாப் பயணிகள் சில வேளைகளில் காலணிகளோடும் நல்லூருக்குள் உள்நுழைய முயன்ற சம்பவங்களும், இறைச்சி, மீன் முதலான மாமிச உணவுகளையும் நல்லூர் ஆலய வீதியில் வைத்து

''உங்களுக்கு தாவணி இல்லாட்டி சாறி கட்டிக் கொண்டு வரத் தெரியாதோ?''

என்று கேட்டுவிட்டால் போதும். உடனேயே

''வெளிநாட்டில இருந்து வாற ஆக்களும், கொழும்பில இருந்து வாற ஆக்களும் இப்படியான உடுப்புகளப் போட்டுக் கொண்டு வந்தால் ஒண்டும் சொல்ல மாட்டீங்கள். எங்கள மட்டும் ஏன் இப்பிடிக் கேட்கிறீர்கள்?'' என்று வரிந்து கட்டிக் கொண்டு வந்துவிடுவார்கள்.



இவ்வாறாக நம்முடைய ஆடைக் கலாசாரத்தின் அழிவு மெல்ல மெல்ல நல்லூரை மையமாகக் கொண்டு அரங்கேறத் தொடங்கியிருந்தது.

இந்த நிலையில் தான் இம்முறை நல்லூர்ப் பெருந்திருவிழாவின் போது பெண்கள் சேலை, தாவணி, நீளப்பாவடை சட்டை என்பவற்றையும், ஆண்கள் வேட்டியும் அணிந்து வந்தால் மாத்திரமே

தாண்டி மிக முக்கியமான சுற்றுலா மையமாகவும் மாறியிருக்கிறது. யாழ்ப்பாணத்துக்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளை அதிகம் ஈர்க்கின்ற நல்லூரில் - அதுவும் பெருந்திருவிழாக் காலத்தில் - இத்தகைய ஆடைக் கட்டுப்பாடு கொண்டு வரப்பட்டுள்ளதால் பயணிகளின் வருகையில் வீழ்ச்சி ஏற்படவும் கூடும். இது தவிர எல்லா சுற்றுலாப் பயணிகளுக்கும் இத்தகைய ஆடைகளை அணியும் முறைமை தெரிந்திருக்கப் போவதில்லை. எனவே அவர்களுக்கு இந்த விதிமுறைகளில் சில தளர்வுகளை ஏற்படுத்த வேண்டும் என அவர்கள் எதிர் பார்க்கக்கூடும். (22 ஆம் பக்கம் பார்க்க)

இந்திய உயர் ஸ்தானிகரகம் கொழும்பு

யாழ்ப்பாணத்தின் மத்திய பகுதியில் 9000 இல் இருந்து 10000 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட கட்டடம் ஒன்று இந்திய துணைத் தூதரக ஸ்தானிகரகம் நிறுவுவதற்குத்தேவை.

தொடர்புகொள்ள:
Head of chancery
36, 38, Galle Road,
Colombo - 3
Telephone No: 011-2439278, Fax No: 011-2446403
E-mail: hoc.colombo@mea.gov.in

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



லண்டன் மாநகரில்
09.07.2010இல் சிவன்
பாதங்களில்
அடைக்கலமடைந்த எங்கள்
அன்புச் செல்வன்

**கந்தையா சிவகுமார்**


அவர்களின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். இன்று (18.07.2010) ஞாயிற்றுக்கிழமை இலண்டனில் இறுதிக் கிரியைகள் நடைபெறும்.

*சுதந்திரபுரம்*
*மட்டுவில் வடக்கு,*
*சாவகச்சேரி.* (சி-569328)

**அன்புச் செல்வத்தின்**
**உறவுகள்.**

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

*பிறப்பு*
*30 . 10 . 1953*



*இறப்பு*
*18 . 07 . 2000*

**அமரர் கந்தசாமி தர்மேசன்**

**(திட்டமிடல் உதவியாளர், வலிகாமம் கல்வி வலயம், மாவட்ட உதவிச் சாரண ஆணையாளர் - காங்கேசன்துறை)**

*வெயில் குளிர் உமை வாட்டினாலும்*
*மழை உமை நனைத்தாலும்*
*அத்தனையும் வென்றெடுத்து*
*எமக்காக உழைத்தீரே! - உமைப்*
*பிரிந்தோம் வருடங்கள் பத்து*
*துடிக்கின்றோம் உம் பிரிவால்.*

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

பிரிவால் துயருறும்
**மனைவி, புத்திரர்கள்,**
**ராசா - ராணி.**

*"தரன் இல்லம்"*
*சேர்ச் லேன், மூளாய்.*


# SPONSOR

**UK EMBASSY** யின் அங்கீகாரம்
பெற்ற வங்கியினூடாக மூன்றே நாட்களில்
**Sponsor** வசதி மற்றும்
UK, France, Italy, Holand Visit / Student Visa

100% GUARANTEED VISA

Riza - 0779 305 990
Riyas - 0724 853 354
Priya - 0778 170 616
Rizan - 0729 295 367
(அனுபவமுள்ள சட்டத்தரணிகளால்)

MMW



## திருமண சேவை

துரிதமான-சுலபமான வாழ்க்கைத்துணை சுயதேர்வு முறையே! சுயதேர்வு முறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலையிலோ சனி, ஞாயிறு நண்பகலிலோ மூத்த - புகழ் பூத்த - சுயதேர்வு முறை முன்னோடி - தனி மனித நிறுவுநர் - சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர் மாயெழுவேல் அமுதனுடன் தொடர்புகொள்ளுக.

தொலைபேசி: 2360488, 2360694, 4873929



## தேவை

*கச்சேரி, நல்லூர் பகுதிகளில் அரச உத்தியோக குடும்பத்தினருக்கு வாடகைக்கு வீடு தேவை.*

*(101151)* **தொடர்பு: 0779334897**



## காவலாளி தேவை

கிளிநொச்சி நகரில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றிற்கு இரவு நேர காவலாளி தேவை. வன்னியில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
**0777917813**

(சி-569331)



## அலுவலக பராமரிப்பாளர்கள் தேவை.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் வங்கிகள், அலுவலகங்களைப் பராமரிக்கும் பிரபல கொழும்பு தனியார் நிறுவனம் ஒன்றிற்கு அலுவலக பராமரிப்பாளர்கள் உடன் தேவை.
மானிப்பாய் நகரை அண்டிய பகுதிகளிலும், யாழ் நகரை அண்டிய பகுதிகளிலும் வசிப்போர் விரும்பத்தக்கது.
ஏனைய பகுதிகளில் இருப்பவர்களும் தெரிவுசெய்யப்படுவர்.

தொடர்புகட்கு:
0774528818
148, கோவில் வீதி, (யுனிசெவ் முன்பாக), யாழ்ப்பாணம்.



## காசாளர் தேவை

*5 வருடங்களுக்கு மேல் காசாளராக கடமையாற்றிய முன்அனுபவமும் நற்பண்புமுள்ள காசாளர் (ஆண்) தேவை. G.C.E.A/L கணித பாடத்தில் சித்தியடைந்தவராக இருப்பதோடு இரத்த உறவினர் அல்லாத இரு வியாபார முகவர்களின் சிபாரிசுடனும் உங்கள் கிராமசேவகரின் சிபாரிசுக் கடிதத்துடனும் சுயகையெழுத்தில் தயாரித்த விண்ணப்பத்துடனும் கல்வித் தராதரப்பத்திரத்தின் மூலப் பிரதியுடனும் வார நாள்களில் பி.ப3-4 மணி வரை நேரில் சமுகம் கொடுக்கவும்.*

**சிவா நகைமாளிகை (?)** 
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.இல. 2567


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

*தோற்றம்*
*25 . 03 . 1931*



*மறைவு*
*18 . 06 . 2010*

**அமரர் தம்பு மார்க்கண்டு** - *(பலாலி)*

*பண்பின் பிறப்பிடமாய் பிறந்து*
*பாசத்தின் உறைவிடமாய் வாழ்ந்து*
*எமையெல்லாம் அன்புடனும் பாசத்துடனும்*
*- வளர்த்த தந்தையே*
*நாள்கள் முப்பத்தியொன்று ஆயினும்*
*உங்கள் நினைவுகள் எப்படி ஐயா மறையும்.*

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இன்று (18.07.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்
**மா.குணசேகரன்**
(பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ்.பல்கலைக்கழகம்)

இல.465, மாம்பழம் சந்தி,
நாவலர் வீதி, அரியாலை.

(101114)

## மரண அறிவித்தல்கள்

### *செல்லையா சதானந்தன்*



இருபாலை கிழக்கு, கோட்டைப்புற வளவைப் பிறப்பிடமாகவும் இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சதானந்தன் 16.07.2010 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா மற்றும் செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை மற்றும் சிவபாக்கியம் தம்பதிகளின் மருமகனும் சந்திராதேவியின் அன்புக் கணவரும் லக்சன், லக்சிகா, லக்சா, லதுசன் (மாணவர்கள் - யா/இணுவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சச்சிதானந்தம், புனிதவதி, புஸ்பராணி, செல்வராணி, விஜயராணி, மாலினி, சிவானந்தம், கமலினி, காலஞ்சென்றவர்களான சண்முகானந்தம், சற்குணானந்தம் மற்றும் கௌரிதேவி, செல்வானந்தம், சுகானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சரஸ்வதி, சகுந்தலாதேவி, கணேசலிங்கம், சிவனேசலிங்கம், சறோஜினிதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (18.07.2010) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இணுவில் தெற்கு,*
*இணுவில்.* (101117)

தகவல்:
**குடும்பத்தினர்.**

### *திருமதி இராசதுரை இராசலட்சுமி*



இணுவில், கண்ணகி அம்மன் கோயிலடி, வட்டுவினியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசதுரை இராசலட்சுமி (இராசம்மா) நேற்று (17.07.2010) சனிக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - சிதம்பரம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற வல்லிபுரம் இராசதுரையின் அன்பு மனைவியும் தெய்வேந்திரம், இராசேந்திரம் (மாவனெல்லை), காலஞ்சென்ற யோகேந்திரம் (டென்மார்க்) மற்றும் சுவேஸ்வரி, இராஜேஸ்வரி, அனுஷா (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான தியாகராஜா, பஞ்சலிங்கம், கணேஸ்வரி மற்றும் கணேசலிங்கம், சின்ராசா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் செல்வராணி, கேதீஸ்வரி, பரமேஸ்வரன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), பாலச்சந்திரன் (ஓய்வூதியர், கச்சேரி), உருத்திரானந்தன் (கொழும்பு மாநகரசபை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் யசந்தன் (ஆசிரியர்), சுதன் (லண்டன்), சோபனா (கனடா), உதயன், ஜீவன், சுரேஸ், தனுஷா, சுவேசினி, ஜெயந்தன், நிசாந்தி (ஆஸ்திரேலியா), கஜயரா (நியூசிலாந்து), சுஜீவன், ஜந்துஜன், ஆர்த்திகன், கஜானன், கயனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2010) ஞாயிற்றுக்கிழமை பி.ப.1.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கண்ணகி அம்மன் கோயிலடி,*
*இணுவில் மேற்கு.* *0217900492* (101150)

தகவல்:
**பிள்ளைகள்**



# 'ஆசைகொண்டேன் கந்தவனக்குமரா'

## ஒலிப்பேழை வெளியீட்டு விழா

ஈழத் திருநாட்டின் புகழ்பூத்த முருகன் திருத்தலங்களில் ஒன்றாக விளங்குவது பொலிகண்டி கந்தவனக் கடவை ஆலயம்.
இங்கே வள்ளி தெய்வயானை சகிதம் வீற்றிருக்கும்

**கல்யாண வேலவரின்**

அழகும் அருளும் வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாதவை.
நிகழும் சுப மங்களகரமான விகிர்தி வருடம் ஜூலை மாதம்
இன்று (18.07.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணியளவில்
அருள்மிகு பொலிகண்டி கந்தவனக்கடவை கல்யாண வேலவனின்
புகழ்கூறும் 'ஆசைகொண்டேன் கந்தவனக் குமரா'
எனும் ஒலிப்பேழை வெளியீட்டு நிகழ்வு ஆலய மண்டபத்தில்
நடைபெறவுள்ளதால் அனைத்துப் பக்த அடியார்களையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

**வெளியீட்டாளர்கள்**

(98216)

## ஏகாதசி தீர்த்தம்

அளவெட்டி தெற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை மறுதினம்செவ்வாய்க் கிழமை ஸ்மார்த்த ஏகாதசி தீர்த்தம் பக்தி பூர்வமாக நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு விசேட அபிசேக ஆராதனையுடன் பூசை ஆரம்பமாகும். 9 மணிக்கு சிறப்புச் சமயச் சொற்பொழிவு இடம்பெறும்.

முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெறும். அதனை அடுத்து ஸ்ரீமத் நாராயணர் ஸ்ரீ தேவி பூமாதேவி சகிதராக திருவீதி எழுந்தருள்வார்.

நண்பகல் 12 மணிக்கு மகேஸ்வர பூசை இடம்பெறும்.
(1-160)

## வரவேற்பு விழா

ஆஸ்திரேலியாவில் இடம்பெற்ற சர்வதேச லயன்ஸ் கழகத்தின் மாவட்ட ஆளுநர்கள் பதவியேற்பு நிகழ்வில் 306 பி1, மாவட்ட ஆளுநராக பதவிப் பிரமாணம் செய்த லயன் எஸ்.ஜெயவத்சலனுக்கு நீர்கொழும்பு வெஸ்ரேர்ஸ் சிற்றி லயன்ஸ் கழகத்தினரால் வரவேற்பு விழா நடத்தப்பட்டது.

நீர்கொழும்பு கோல்டன் பீச் ஸ்ரார் ஹொட்டலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கழகத்தலைவி சீமாட்டி தஷ்யந்தினி தலைமையில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் உயர் பாதுகாப்பு வலய இழுபறி

# திரிசங்கு நிலையில் இடம் பெயர்ந்த மக்கள்

## முரண்பாடான கருத்துக்களால் பிரச்சினைக்குத் தீர்வு கிட்டாது

-அதிரன்

'எங்கட வீட்டுக்கு எப்ப விடுவினம்.......' என்று எதிர்பார்த்து அங்கலாய்ப்புடன் காத்திருந்த வலி வடக்கு மக்களின் முகங்கள் இப்போது கறுத்துப் போய் விட்டன. கடந்த சில



வாரங்களாக அவர்களிடம் இருந்த சந்தோஷம் இப்போது இல்லை. நாம் எதைச் சொல்ல வருகின்றோம் என்பது இப்போது உங்களுக்குப் புரிந்திருக்கும்.

அமைச்சரவையின் பேச்சாளரும், அரசாங்கத்தின் பிரதான அமைச்சர்களுள் ஒருவருமான கெஹலிய ரம்புக்வெல கடந்த 15ஆம் திகதி வெளியிட்ட கருத்தே இந்த மக்களின் மனங்களில் கொதிப்பையும் பெரும் ஏமாற்றத்தையும் உண்டு பண்ணியிருக்கிறது.

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல ஜனாதிபதி மகிந்தவின் அரசாங்கத்தில் இருந்து கொண்டு அடிக்கடி சில கோமாளித்தனமான கருத்துக்களை வெளியிட்டு சில தடவைகளில் வேண்டிக் கட்டிக் கொண்டவரும் கூட. தேவையற்ற - முரண்பாடான கருத்துக்களை வெளியிடுவதில் வல்லவரான இந்த அமைச்சர் இப்போது உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான புதியதொரு கருத்தை வெளியிட்டு இடம் பெயர்ந்த மக்களின் மனங்களில் பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறார்.

''இந்த நாட்டின் பாதுகாப்புக்கே முதலாவது, இரண்டாவது, மூன்றாவது இடங்கள் வழங்கப்படும். ஒரு நாட்டின் பாதுகாப்புக்காக பாதுகாப்பு வலயங்கள் அமைக்கப்பட வேண்டியது கட்டாயம். எனவே உயர் பாதுகாப்பு வலயங்களில் உள்ள மக்களின் காணிகள் உறுதிப்பத்திரங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டாலும் கூட நாட்டின் பாதுகாப்பைக் கருதி அவற்றை அவர்களுக்கு வழங்க முடியாது'' என்று தெரிவித்துள்ளார் ஊடக அமைச்சரான கெஹலிய.

சொந்த மண்ணில் இருந்து இடம் பெயர்ந்து 20 ஆண்டுகளுக்கு மேலாக அகதி - அவல வாழ்வை சுமந்து கொண்டு உறவினர், நண்பர்கள் வீடுகளிலும், முகாம்களிலும், குடியேறியுள்ள இந்த மக்கள் தமது சொந்த இடத்தை விட்டு வெளியேறியதால் மன உளைச்சலுக்கும் - மன வேதனைக்கும் உள்ளாகினார்கள். அது தவிர பொருளாதார ரீதியிலும் பின்னடைந்து இன்னல்களையும் எதிர்நோக்கியதுடன் அரசாங்கம் மாதம் ஒரு முறை வழங்கும் (திடீரென சில மாதங்களில் வழங்கப்படாமலும் விடுவதுண்டு) நிவாரண உணவுப்பொருள்களை நம்பியவர்களாக வாழ்ந்து வருகின்றனர். சொந்த இடங்களில் தமது மீன்பிடி, விவசாயம், கைத்தொழில் என அனைத்து வசதிகளையுமே இழந்து அவர்கள் எதுவுமற்ற ஏதிலிகளாக அந்தரித்து நிற்கின்றனர்.

வலி.வடக்கில் பெரும் பகுதி விவசாய நிலங்களால் சூழப்பெற்றது. காய்கறிகள் முதல் பல்வேறு பயிர்கள் அந்த நிலங்களில் விவசாயிகளால் முன்னர் செய்கை பண்ணப்பட்டு வந்தன. யாழ்ப்பாணத்தின் விவசாய உற்பத் தியில் பெரும் பகுதியை வலி வடக்கு விவசாயிகளே நிறைவு செய்து வந்தனர். யாழ்ப்பாணத்தின் பொருளாதார வளர்ச்சியிலும் இவர்களின் பங்கு முக்கியமாக இருந்தது. அதே போன்று தான் கடற்றொழிலும். இப்பகுதிக் கரையோரங்களில் வசித்த பெரும் எண்ணிக்கையான மீனவர்களினால் குடாநாட்டின் கடல் உணவுத் தேவைகளில் ஒரு பகுதி பூர்த்தி செய்யப்பட்டது. அத்துடன் பெருந் தொகையான கடல் உணவுகள் தென் பகுதிக்கும் ஏற்றுமதியாகின. அப்பகுதி மக்களின் இடம் பெயர்வின் பின்னர் இந்த நிலைமைகள் அனைத்தும் அடியோடு அற்றுப்போய்விட்டன. அத்துடன் இடம்பெயர்ந்த மக்களின் வாழ்க்கையும் மிகவும் பின்னடைந்து விட்டது. பொருளாதார ரீதியில் இவர்கள் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்துள்ளனர்.

தற்போதுள்ள அமைதி நிலையைப் பயன்படுத்தி தம்மை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வர அவர்கள் முயன்று வருகின்றனர். அதன் ஒரு கட்டமாகவே தமது சொந்த இடங்களில் மீளக் குடியமரும் நாளை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

தமது சொந்த இடங்களில் குடியமர்ந்து பழைய பொருளாதார நிலையை அடைந்துவிட முடியும் என்ற நம்பிக்கையுடன் இருந்த இந்த மக்களுக்கு கெஹலிய ரம்புக்வெலவின் கருத்து அவர்களது உள்ளத்தில் பேரிடியாக விழுந்துள்ளது. மீளக் குடியமர்வு தொடர்பாக அரசு சாதகமான ஒரு அறிவிப்பை எப்போது வெளியிடும் என்று தினமும் பத்திரிகைகளைப் புரட்டிப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்த மக்களுக்கு கெஹலியவின் கூற்று வெறுப்பையும் சினத்தையும் உண்டு பண்ணியிருக்கிறது.

இந்த உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக அரசாங்கம் அடிக்கடி வேறுபட்ட - முரண்பாடான கருத்துக்களை வெளியிட்டு வருவதால் இடம்பெயர்ந்த மக்களும் மிகவும் குழம்பிப் போய் இருக்கிறார்கள்.

இதேவேளை - அமைச்சர் கெஹலியவின் கூற்றுத் தொடர்பான தீர்மானம் எதுவும் அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்படவில்லை என அமைச்சரவை [illegible] கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியாகக் கூறியுள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் இது குறித்து மேலும் கூறுகையில்:

''பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் குறைவடைந்துள்ள நிலையில் உயர் பாதுகாப்பு வலயங்கள் கிரமமாக அகற்றப்படும். படிப்படியாக உயர் பாதுகாப்பு வலயங்கள் என்பது அற்றுப் போய்க் கொண்டிருக்கிறது. கொழும்பில் கூட நீங்கள் அறிந்திருக்கலாம் அல்லது பார்த்து இருக்கலாம். முக்கிய இடங்கள் எல்லாம் திறந்துவிடப்பட்டிருக்கின்றன. இது போலத்தான் வடக்கிலும் பல இடங்கள் மக்கள் நடமாட்டத்திற்கு விடப்பட்டிருக்கிறது. நாளை அல்லது நாளை மறுதினம் கூட யாழ்ப்பாணத்தின் உயர் பாதுகாப்பு வலயங்களாக இருந்த இடங்கள் எல்லாம் திறந்து விடுவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.'' என்று தெரிவித்துள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் இவ்வாறு கூறி இரண்டு தினங்கள் கழிந்துவிட்ட போதிலும் உயர்பாதுகாப்பு வலயங்கள் எதனையும் அகற்றுவதற்கோ அல்லது உயர்பாதுகாப்பு வலங்களுக்கு முன்பாக 800 மீற்றர் பாதுகாப்புப் பிரதேசத்தில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கோ எந்தவொரு நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை.

நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் காலத்தில் வலி. வடக்கு மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகிவிட்டன என்று கூறி அவர்களை நம்ப வைத்து தான் முன்னே நடந்து கொண்டு இடம் பெயர்ந்த மக்களை தன் பின்னால் உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் அழைத்துச் சென்றார் அமைச்சர் டக்ளஸ். மக்களும் 20 வருடங்களாக இருந்த அவல வாழ்வு முடிவுக்கு வருகிறது என எண்ணி அவர் பின்னால் படையெடுத்தனர். எனினும் அது பின்னர் வெறும் தேர்தல் புஷ்வாணமாகியது. மக்களின் வாக்குகளை வேட்டையாடுவதற்காகவே இந்தத் திடீர் நாடகம் அரங்கேற்றப்பட்டமை அனைவருக்கும் தெரியவந்தது. இரண்டொரு தினங்களில் மீளக்குடியமரலாம் என எண்ணிய மக்களை பின்னர் படை அதிகாரிகள் உயர்பாதுகாப்பு வலயத்திற்குக் கிட்டவும் செல்ல அனுமதிக்கவில்லை.

இவையெல்லாம் முடிவடைந்து இரண்டு மூன்று வாரங்கள் கழிந்த பின்னர் வலிவடக்கு மக்களின் மனங்களில் மீண்டும் ஒரு மகிழ்ச்சி. அப்பகுதிகளில் உள்ள இந்து, கிறீஸ்தவ ஆலயங்களில் வழிபாடுகளை நடத்துவதற்கு படைத்தரப்பு அனுமதி வழங்கியிருந்தது. இதனையடுத்து அப்பகுதிகளிலுள்ள பெரும்பாலான ஆலயங்களில் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. நீண்ட காலத்துக்குப் பின்னர் சொந்த ஆலயங் களைத் தரிசிக்க பெரும் எண்ணிக்கை யான மக்கள் அங்கு படையெடுத்தனர். அப்பகுதிகளில் காடு மண்டிக் கிடக்கும் தமது வீடுகள், காணிகள் என்பவற்றைப் பார்த்து ஏக்கப்பெருமூச்சு விட்டனர். மீண்டும் வருவோம் என்ற நம்பிக்கை யில் அங்கிருந்து திரும்பினார்கள்.

படைத்தரப்பின் இந்த நடவடிக்கை இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்த்தப்படப் போகிறார்கள் என்ற நம்பிக்கையை வலுப்பெற வைத்தது. அந்தச் சந்தோஷத்தில் அவர்கள் நாள்களைக் கழிக்கத் தொடங்கினார்கள். அவர்களது நம்பிக்கை வீண் போனது போல இப்போது அமைச்சர் கெஹலியவின் கூற்று அமைந்து விட்டது.

கெஹலிய ரம்புக்வெல தமது கருத்தைத் தெரிவிப்பதற்கு முன் தினம் அதாவது கடந்த 14ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த கிளிநொச்சியில் மீளக் குடியமர்ந்த மக்கள் மத்தியில் உரையாற்றும் போது பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார். ''உயர் பாதுகாப்பு வலயங்கள் என்பது இனி எமது நாட்டில் தேவையில்லாத ஒன்று'' என்று அவர் அங்கு கூறியிருந்தார். இதற்கு அடுத்தநாள் தனது கருத்தை வெளியிட்டிருந்த அமைச்சர் கெஹலிய ''வெளிநாடுகளில் பாதுகாப்பு வலயங்கள் உள்ளன. அது போன்று இங்கும் உள்ள பாதுகாப்பு வலயங்களைத் தொடர்ந்தும் வைத்திருக்கும் உரிமை இலங்கை இராணுவத்துக்கு உண்டு. அமெரிக்கா கூட உள்நாட்டிலும், தென் கொரியாவிலும் உயர் பாதுகாப்பு வலயங்களை வைத்துள்ளது. நாட்டில் தற்போது இருக்கின்ற பாதுகாப்பு வலயங்களும் இராணுவ முகாம்களும் அவ்வாறே இருக்க வேண்டும். அந்தப் பாதுகாப்பு வலயங்களுக்குள் மக்களின் காணிகள் இருந்தாலும் கூட அந்தக் காணிகள் அவர்களுக்கு வழங்கப்பட மாட்டாது. அத்தகையோருக்கு வேறு இடங்களில் காணிகள் வழங்கப்படும்'' என்றார்.

பொருளாதாரத்தின் உச்ச நிலையில் இருக்கும் அமெரிக்காவுடன் தன்னுடைய பொருளாதாரத்தைத் தக்கவைக்க பிற நாடுகளிடம் கடன் பெறும் இலங்கை தன்னுடைய பாதுகாப்பை அமெரிக்காவுக்கு இணையாக ஒப்பிடுவது வேடிக்கையான விடயமே.

உயர்பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் இருக்கும் காணிகளுக்குப் பதிலாக வேறு இடங்களில் இடம் பெயர்ந்த மக்களுக்குக் காணிகள் வழங்கப்படும் என அமைச்சர் கெஹலிய கூறியிருக் கிறார். இது உண்மையில் சாத்தியப் படக் கூடிய விடயமா? வலிவடக்கு மண் விவசாயச் செய்கைக்குப் பெயர் பெற்ற செம்மண். அங்கு விளையும் பொருள்களுக்கு ஒரு தனி மதிப்பே உண்டு. அப்பகுதி மக்களுக்கு அதிகளவு விவசாயக் காணிகளே உண்டு. இவ்வாறு வளம்மிக்க காணிகளை வேறு ஒரு இடத்தில் அமைச்சரால் எவ்வாறு வழங்க முடியும். அவ்வாறு அரசு காணிகளை வழங்கினாலும் அவற்றைப் பெற்றுக்கொள்ள அந்த மக்கள் முன் வருவார்களா? என்பது கேள்விக்குறியே. அந்த மக்களைத் திருப்திப்படுத்துவதற்காகத்தான் அமைச்சர் இவ்வாறு கூறியிருக்கிறார் போலும்.

இவற்றை வைத்துப் பார்க்கும் போது உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பில் இலங்கை அரசுக்கு ஒரு தெளிவான கொள்கை - தீர்மானம் இல்லை என்பது வெட்டவெளிச்சமாகத் தெரிகின் றது. இந்தப் பிரச்சினை தொடர்பாக ஒவ்வொருவரும் ஒவ்வொன்று சொல்கிறார்கள். இதனால் பாதிக்கப் படுவது இடம்பெயர்ந்த மக்களே.

எனவே இந்த உயர் பாதுகாப்பு வலய இழுபறி தொடர்பாக தீர்க்கமான - உறுதியான முடிவு ஒன்றை அறிவிக்க வேண்டிய தேவைப்பாடும் - கடமையும் ஜனாதிபதிக்கு உண்டு. அதன் மூலம் இடம் பெயர்ந்த மக்களின் மனங்களில் ஏற்பட்டிருக்கும் வலியையும் சினத்தையும் அகற்றுவதற்கு அவர் முன் வரவேண்டும். 20 வருடங்களுக்கு மேலாக அவர்கள் எதிர்பார்த்திருக்கும் இந்த மீள் குடியமர்வு ஒரு சாதக நிலைமையை அடைய அது வழிவகுக்கும். அதனை அவர் செய்வாரா?*********

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடைத்தொகுதி விற்பனைக்கு

யாழ்.பற்றிக்ஸ் வீதியில் - பங்ஷால் வீதிச் சந்தியிலுள்ள கடைத் தொகுதி (மேல்மாடி) விற்பனைக்குண்டு.

தொடர்பு:
021 3216790

## THE ROYAL COLLEGE OF JAFFNA

சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில By: ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி (12 வருட அநுபவம்) 426 (302). K.K.S. வீதி, யாழ்ப்பாணம், பிளாக் வீதி, சங்கானை.

"THE ROYAL IS THE BEST"

## காணி விற்பனைக்கு

மருதனார்மடம், வலிகாமம் கல்வி வலயத்திற்கு அண்மையில், கிணற்றுடன் கூடிய 12 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: தொலைபேசி இல. 0777110513

## வான் விற்பனைக்கு

54 - XXXX செல்மொடல் நீட்டு வான் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0776660229

DANISH DEMINING GROUP

# DANISH DEMINING GROUP

Danish Demining Group (DDG) has been in operations in Sri Lanka since 2003. Presently the work force consists of 400 personnel which is expected to increase to 700, including deminers, administrative staff and a Management group, mainly built upon national capacity supported by expatriate Programme Manager, Operations Manager and Technical Advisors. DDG presently operates in Jaffna, Killinochchi and Vavuniya districts.

DDG is an active participant in the global effort to reduce the effects of landmines. The objective of DDG is to contribute towards the goals and objectives of the National Mine Action Program in Sri Lanka, which aims to reduce the threat of mines and other unexploded ordnance from priority areas. The Demining project in Sri Lanka is scheduled to run upto December 2010, with the possibility of extension upto 2011, depending on funding.

**IMPACT MONITORING OFFICER (JAFFNA)**

The position is based in Jaffna. As Impact Monitoring Officer in the organization the main responsibilities would be:

* Identify and assist in the recruitment of IM staff. Train selected staff.
* Establish the IM database and maintain same.
* Develop the overall framework for IM in DDG Sri Lanka
* With the input of stakeholders, draft monitoring and evaluation plans for project activities
* Review the quality of existing social and economic data in the project area, the methods of collecting it and the degree to which it will provide a good baseline statistic for impact evaluation
* Based on the review of existing data design and assist in budgeting for a baseline survey.
* Ensure that IM is conducted in an efficient manner through supervision and monitoring of the implementation. Ensure that timely decisions and corrective actions are made and implemented
* Direct and supervise the day to day IM activities, Regular appraise staff and provide feedback and support to enable them to do their jobs better
* Coordination of Mine Risk Education and Community Liaison activities
* Develop close relationship with project participants and stakeholders
* Submit required analytical reports on progress – including indications of planned actions– on time and to the relevant bodies, with assistance from IM staff
* Make sure all the data is shared with all those involved in decision making and follow up on the implementation of any decisions
* Prepare reports on IM findings
* Undertake regular visits to the field to supervise and support IM activities
* Ensure that the IM data is discussed in the appropriate forum to identify implication for future actions. If necessary create such discussion forums to fill any gaps

**MINIMUM QUALIFICATIONS AND EXPERIENCE REQUIRED:**

Sri Lankan National
Bachelor's degree in Social science
At least 4 years of proven experience with:

* The logical framework approach and other strategic planning approaches
* IM methods and approaches (including quantitative, qualitative and participatory)
* Planning and implementation of IM systems
* Training in IM development and implementation
* Facilitating learning oriented analysis sessions of IM data with multiple stakeholders
* Information analysis and report writing
* Experience in data processing and with computers
* Good writing and spoken English and Tamil
* Knowledge of Sinhalese

**How to Apply**

Applications for all positions should accompany a cover note to DDG, stating why and how they fit the selection criteria and attach a copy of CV with contact details and names of two non related referees to the following address by 25th July 2010.

Only candidates who meet all the above requirements will be invited for an interview/test.

**DANISH DEMINING GROUP**
**30/90, Malalasekera Mawatha, Colombo 7.**
**E-mail: admincolombo@ddg.lk**

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

ராஜ்பவன் சுகன்யா தம்பதியரின் செல்வப் புதல்வி **ரக்ஷன்யா** தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (18.07.2010)ஞாயிற்றுக்கிழமை 614/3, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்,'லாவண்யம்' இல்லத்தில் தனது குடும்பத்தினருடன் குதூகலமாக கொண்டாடுகின்றார். ரக்ஷன்யா பல்லாண்டு காலம் சீருடனும் சிறப்புடனும் வாழப் பன்றிக் கோட்டுப் பிள்ளையாரைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

தாத்தா, அம்மம்மா, கண்ணாமாமா.




aat

கல்வியைத் தொடரும் மாணவர்களுக்கான விசேட பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

Tally ஒரிஜினல் சான்றிதழ் எம்மிடமிருந்து மட்டுமே!

- Tally Certified Computer Accountant — 2-3 Months
- Adhn Advanced Diploma in Hardware & Networking — 3 Months
- MSO Diploma in MS Office Application — 2-3 Months

MULTIMEDIA SCHOLARSHIP
மல்டிமீடியா கல்விக்கான ஸ்கொலர்ஷிப் பெற்றவர்கள்
24.07.2010
முன்பாக பதிவுகளை மேற்கொள்ளவும்

## ASIAN COMPUTER EDUCATION

| | | |
|---|---|---|
| 2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P : 021-222 5677 | கொடிகாமம் வீதி, நெல்லியடி. T.P : 021-3734088 | 230, 1ம் மாடி, கண்டி வீதி, சாவகச்சேரி. T.P : 021-3213390 |

CHARTER HOUSE

MOTUL
Lubricants Specialist since 1853

## விநியோகஸ்தர்கள் தேவை

1853ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட Motul, உலகிலுள்ள மிகப் பழைய மற்றும் மிகப் பெரிய லுப்ரிக்கன்ற் ஒயில் நிறுவனமாகும். அதன் பிரபல உற்பத்திப் பொருள்கள் தற்போது 90க்கு மேற்பட்ட நாடுகளில் விற்பனை செய்யப்படுகின்றன.

இலங்கையில் Motul உற்பத்திப் பொருள்களின் ஏக விநியோகப் பிரதிநிதியாகச் செயற்படும் சிஎச் எஞ்ஜினியரிங் (CH Engineering) தனியார் நிறுவனம், இப் பொருள்களுக்கு அதிகரித்துவரும் கிராக்கியை ஈடுசெய்யும் முகமாக, அதன் விநியோக அமைப்பை விரிவுபடுத்த இருக்கிறது. இதற்காக மத்திய, வடமத்திய, வடமேல், தெற்கு, சபரகமுவ, ஊவா, கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களில் விநியோக முகவர்கள் தேவைப்படுகிறார்கள்.

**விநியோக முகவர் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள்**

- எமது பொருள்களின் விற்பனையை ஊக்குவிப்பதில் மிகுந்த ஆர்வமும் அர்ப்பணிப்பும் காட்டுபவராக இருக்க வேண்டும்.
- நடுத்தர அளவான ஒரு லொறியையும் அதற்கான சாரதியையும் கொண்டிருக்க வேண்டும்.
- வங்கி உத்தரவாதத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.
- குறைந்தபட்சம் 500 சதுர அடி பரப்புள்ள களஞ்சியத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

ஆர்வமுள்ளவர்கள் தமது தற்போதய வியாபாரம் பற்றிய பூரண விபரங்கள் உள்ளிட்ட விண்ணப்பத்தை, கீழ்க்காணும் முகவரிக்கு, 2010 ஜூலை 25ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கத்தக்கதாக அனுப்ப வேண்டும்.

முகாமைப் பணிப்பாளர்
சிஎச் எஞ்ஜினியரிங் (தனியார்) நிறுவனம்
இல. 161, நாவலை வீதி, நாரஹேன்பிட்டி.
தொலைபேசி: 011 2 368 690 / பெக்ஸ்: 011 2 368 625 ஈ-மெயில்: ch.motul@charterhouse.lk

நிலையான வைப்பு (5 வருடங்களில் முதிர்ச்சி)

**14.75% வ.ஒ (வ.கி.வீ 11.68%)**

ஆகக் குறைந்த நிலையான வைப்பு ரூ.5000

| காலம் | வருடவட்டி வீதம் மாத கொடு | வருடாந்த கி.வீ | வருடவட்டி முதிர்ச்சி கொடு | வருட கிடைப்பனவு வீதம் |
|---|---|---|---|---|
| 1 மாதம் | - | - | 9.00% | 9.38% |
| 3 மாதம் | 9.50% | 9.92% | 10.50% | 10.92% |
| 6 மாதம் | 10.00% | 10.78% | 11.00% | 11.30% |
| 1 வருடம் | 11.00% | 11.57% | 11.75% | 11.75% |
| 2 வருடம் | 11.00% | 11.57% | 12.50% | 11.80% |
| 3 வருடம் | 11.25% | 11.85% | 13.50% | 11.98% |
| 4 வருடம் | 11.25% | 11.85% | 14.00% | 11.76% |
| 5 வருடம் | 11.25% | 11.85% | 14.75% | 11.68% |

ISO 9001:2008 தரத்தில் தர முகாமைத்துவ ஒழுங்கமைப்பால் உத்தரவாதமளிக்கப்பட்ட இலங்கையின் முதல் நிதி நிறுவனமாகும்.

மனதில் அமைதியை ஏற்படுத்துவது

**பாதுகாப்பான கைகளில்**

நீங்கள் இருக்கிறீர்கள் என்று அறியும்போதே

**021 5671813**
0771-090144
இல. 89, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.

- ஒரு நீண்டகால முதலீட்டுத்தராதரம் RAM BBB/P2
- 18 ஜூலை 1956ல் ஒருங்கிணைக்கப்பட்டது.
- நிதி நிறுவனச்சட்டம் 1988 இல 78ன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நிதிச்சபையில் பதிவு செய்யப்பட்டது.

தற்போது யாழ்ப்பாணத்தில் எமது புதிய கிளை திறக்கப்பட்டுள்ளது

Since 1956
Alliance Finance COMPANY PLC
Built on Trust. Powered by Innovation.

தலைமை: அலுவலகம் அலயன்ஸ் ஹவுஸ், 84, வாட் பிளேஸ், கொழும்பு 7, இலங்கை. தொ.பே: 2 673 673 (...) பெக்ஸ்: 2691090
கிளைகள்: கம்பஹா, இரத்தினபுரி, காலி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருக்கோணமலை


கம்பனி இல. PQ93

www.alliancefinance.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திட்டமிட்டுக் கச்சிதமாய் தயார்ப்படுத்தப் பட்டதால் பிரமிப்பை ஏற்படுத்திய தொடக்கவிழா ஏற்பாடுகள்

'கோயம்புத்தூர்' தமிழகத்தின் மேற்குப் புறத்தில் கேரள மாநிலத்திற்கு அண்மையிலுள்ள மாவட்டம். நெசவுக் கைத்தொழிலிலும் தொழிநுட்பத் துறையிலும் சிறப்புற்று விளங்குவதால் தென் இந்தியாவின் மஞ்செஸ்ரர் (Manchester) என்ற சிறப்புப் பெயர் இதற்கு உண்டு. நீலகிரி, ஆனைமலை, மேற்குத் தொடர்ச்சி மலை என மலை வளங்களும் பவானி, அமராவதி, ஆளியாறு, சிறுவாணி, நொய்யல் என ஆற்று வளங்களும் கோவையின் அழகுக்கு அழகு சேர்க்கின்றன.


செம்மொழித் தமிழ் விருது பெற்ற பேராசிரியர் அஸ்கோ பார்ப்போலா

சங்க காலத்தில் தமிழகம் ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. சேர, சோழ, பாண்டிய, தொண்டை, கொங்கு என இம்மண்டலங்கள் பெயர் பெற்றன. கொல்லித் தேன் சிறப்பாகக் கிடைக்கும் இடமாதலால் கோவைக் குக் கொங்கு நாடு என்ற பெயர் ஏற்பட்டதாகக் கூறுகின்றனர். இது சோழர்களுடைய ஆட்சியில் இருந்தபோது அதிராச மண்டலம் என்ற பெயரைப் பெற்றிருந்தது.

புகழ்மிக்க பட்டீஸ்வரர் திருக்கோயில், மருதமலை முருகன் கோவில் எனச் சிறப்புப் பெற்ற கோவில்களால் கோவை பொலிவு பெறுகின்றது. உங்கள் கோவைக்கு என்ன பெருமை? என ஹோட்டல் பணியாளர் ஒருவரிடம் கேட்டேன். "திரைக் கலைஞர் அமரர் கே.பி.சுந்தராம்பாள், சிவகுமார், சூர்யா, சத்தியராஜ், மணிவண்ணன் என முன்னணி நாயகர்களைத் தந்தது கோவையே" என்றார். அவர் தன்னிடமுள்ள அடிமட்டத்தால் அளந்து பார்க்கிறார் என நினைத்துக் கொண்டேன். முதற் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடந்த ஊர் என்ற பெருமை உங்களுக்காகும் என்றேன். சிரித்துக் கொண்டார்.

கொங்குத் தமிழ் கேட்பதற்கு இனிமையாக இருக்கும். "ஏனுங்க – என்னுங்கோ - இருக்கனுங்கோ – சரிங்(க) – ஆமாமுங்க என மரியாதை கலந்த தமிழ இம்மண்டலத்தின் தனியுரிமை. இப்படி மரியாதையான மக்கள் வாழும் அழகிய இடமாதலாற்றானோ என்னமோ மாநாடு நடத்துமிடமாகக் கோவையைத் தெரிவுசெய்தனர்? என எண்ணிக் கொண்டேன். கோவையின் வீதிகளில் இலை போட்டுச் சாப்பிடலாம். அவ்வளவு சுத்தமாகப் பேணப்பட்டிருந்தன. மாநாட்டுக் காலத்திலேதான் இந்த ஏற்பாடு எனக் கூறினார் கோவை வாசியொருவர்.

"செம்மொழியான தமிழ்மொழியாம்…" பாடல் ஒலிக்கும் திசையை


சைக்கஸ் இலைகளால் அமைக்கப்பட்ட முகப்பு வாயில்

நோக்கினேன். கைத்தொலை பேசியை எடுத்து "ஹலோ, சொல்லுங்க சார்" என்றவாறு பேச்சைத் தொடங்கினார் ஹோட்டல் பணியாளர் ஒருவர். செம்மொழி மாநாட்டிற்கென கலைஞர் கருணாநிதியால் எழுதப்பட்ட மைய நோக்கப் பாடல் ஏ.ஆர் ரஹ்மானால் இசையமைக்கப்பட்டு மிகக் குறுகிய காலத்துள் பிரபல்யம் பெற்றுவிட்டது. இதன் காணொலி (வீடியோ) வடிவத்திற்குக் கௌதம வாசுதேவ் மேனன் நெறியாள்கை செய்துள்ளார். ரி.எம்.சௌந்தரராஜனில் இருந்து இளம் பாடகி சுருதி ஹாஸன் வரை 27 பாடகர்கள் இணைந்து குரல் கொடுத்துள்ளனர். முன்னைப் பழமைக்கும் பின்னைப் புதுமைக்கும் ஏற்ற இசைக்கோலங்களை உள்வாங்கிப் பாடல் ஆறு நிமிடங்களுக்கு ஒலிக்க வல்லதாக அமைக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் நாம் கண்டவர்களுள் அநேகர் இப்பாடலையே தமது கைத்தொலைபேசியின் அழைப்பொலியாக வைத்துள்ளனர். மாநாட்டுப் பந்தலில் ஒரு நிகழ்வு முடிந்து அடுத்த நிகழ்வு தொடங்கும் இடைநேரத்தில் இப்பாடலே அடிக்கடி ஒலித்தபடியிருந்தது. பாடலைப் பாடிய கலைஞர்கள் சிலர் சரியான விதத்தில் தமிழை உச்சரிக்கத் தவறிவிட்டனர் என்ற குற்றச்சாட்டும் இல்லாமலில்லை.

மாநாட்டின் தொடக்க நாளான யூன் 23 ஆம் திகதியன்று அவிநாசிச் சாலையின் அருகில் உள்ள மாநாட்டு வளாகம் முழுவதும் மக்கள் வெள்ளமாகக் காணப்பட்டது. நான் சிறுவனாயிருந்தபோது நல்லூர் கந்தசாமி கோவிலில் எல்லா மூர்த்தங்களுக்கும் ஏக காலத்தில் பூசை செய்யும் முறை காணப்பட்டது. எந்த மூர்த்தத்தை வழிபட? என அடியவர்கள் ஏங்கித் தவிப்பர். இதே நிலைமையைச் செம்மொழி மாநாட்டுடன் பொருத்திப் பார்த்தேன். பொழிவரங்கம், ஆய்வரங்கம், இணைய மாநாடு, கண்காட்சி அரங்கம், நூலரங்கம் எனப் பல பிரதான அரங்கங்கள் அமைக்கப்பட்டிருந்தன. ஆய்வரங்கம், இணைய மாநாடு என்பவற்றில் அழைக்கப்பட்ட பேராளர்களே பங்கேற்க அனுமதிக்கப்பட்டனர். ஏனைய அரங்கங்களுக்கு யாரும் செல்லலாம். ஆனால் உட்செல்வது இலகுவான காரியமல்ல. நெருக்குண்டு, தள்ளுண்டே உட்செல்ல வேண்டும். எங்கு எதைப் பார்ப்பது? என்ற ஏக்கம் பலர் மனதுள் முளைவிட்டிருந்தது.


பந்தலின் முகப்பு

வளாக முன் வாயிலிலும் பின் வாயிலிலும் மண்டிஞ்சு (சைக்கஸ்) இலைகளால் ஆக்கப்பட்ட முகப்புத் தட்டிகளை அமைத்திருந்தனர். பொழிவரங்கம் கின்னஸில் பதியக் கூடிய தகைமை பெற்ற பந்தலாக அமைக்கப்பட்டிருந்தது. இது 4.5 இலட்சம் சதுர அடி பரப்புக் கொண்டது. அறுபதாயிரம் பேர் அமரும் வகையிலும் ஒரு இலட்சம் பேர் நின்று கொண்டு நிகழ்ச்சிகளை இரசிக் கும் வகையிலும் அமைக்கப்பட்டிருந்தது. 400 தொழிற்கலைஞர்கள் சேர்ந்து 45

## உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு - 2010 02
### யாழகனின் இரு பார்வை

நாள்களில் பந்தலை அமைத்தனராம். பந்தலின் கூரையில் அலங்கார வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. முன்முகப்பிலும் பின்முகப்பிலும் 26 அடி உயரத்தில் 420 அடி அகலத்தில் சிகரங்கள் கட்டப்பட்டிருந்தன. பந்தலில் எங்கிருந்து பார்த்தாலும் மேடை நிகழ்வுகளை அவதானிக்கக் கூடிய வகையில் பாரிய எல்.சீ.டி. திரைகளைத் தூண்களில் நிறுவியிருந்தனர். பந்தலினுள் நுழைவதற்கான பாதையும் ஏ, பி, சீ.. என அமைக்கப்பட்டிருந்தது. உள்ளே உலோகக் கேடர்களால் ஆக்கப்பட்ட சதுர வேலிகள் பலவற்றை அமைத்திருந்தனர். ஒவ்வொரு சதுரங்களுள்ளும் கதிரைகள் அடுக்கப்பட்டிருந்தன. அழைப்பாளர்களின் தரவரிசைக் கேற்பக் கதிரைகள் அமைக்கப்பட்டிருந்தன. ஏ, பி பகுதியில் நிலத்திற்குச் செங்கம்பளம் விரிக்கப்பட்டு ஒவ்வொரு கதிரையின் மீதும் வெள்ளைத் துணி போர்த்தப்பட்டிருந்தது. எழுத்துக் குறிப்பிடப்படாத முன்வரிசை குசன் செற்றுகள இடப்பட்டுக் கலைஞர் குடும்பத்தினர்க்காகவும் அதி முக்கிய பிரமுகர்களுக்காகவும் ஒதுக்கப்பட்டிருந்தது.

மாநாட்டு வளாகத்தின் ஒலியமைப்பைப் பற்றியும் முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். மாநாடு இடம் பெறும் வளாகத்தினுள் மாத்திரம் கேட்கக் கூடியதாக பெரிய பொக்ஸ் (Box) ஒலிபெருக்கிகளை நிறுவியிருந்தனர். கோண் (Corn) ஒலி பெருக்கிகளைக் காணவில்லை. டிஜிற்றல் தொழினுட்பத்தால் ஏற்பட்ட விளைவு இது. ஆயினும் எங்கள் ஊர்த் திருவிழாக்களில் கிலோ மீற்றர்க் கணக்கான தூரத்திற்குக் கோண்களைக் கட்டி, ஊரையே ஒரு உலுப்பு உலுப்பிவிடும் பாரம்பரியத் தைப் பார்த்த எமக்கு மாநாட்டு வளாகத்துக்கு வெளியே அநாவசியமாக ஒலி அமைப்பு மேற்கொள்ளப்படாதது ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியது. எம் பிரதேச ஒலிபெருக்கும் செயற்பாடுகளை நினைக்க வெட்கமாகவும் இருந்தது.

தொடக்க விழா நிகழ்வுகள் பொழிவரங்கத்திற்காக அமைக்கப்பட்ட பிரமாண்டப் பந்தலில் மாத்திரம் இடம் பெற்றன. காலை சரியாக 10.30 மணிக்குத் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடலுடன் விழா ஆரம்பமாகியது. "நீராரும் கடலுடுத்த…" மனோன்மணீயம் சுந்தரனாரின் பாடலடிகளுக்கு மருத்துவர் சீர்காழி சிவசிதம்பரம் உயிரூட்டினார். தொடர்ந்து மாநாட்டுச் சிறப்புமலரை தமிழக ஆளுநர் சுர்ஜித்சிங் பர்னாலா வெளியிட இந்தியக் குடியரசுத் தலைவர் பிரதீபா தேவிசிங் பாட்டீல் பெற்றுக்கொண்டார்.

600 இந்திய ரூபாய் பெறுமதியான இம்மலர் 640 பக்கங்களில் வெளிவந்துள்ளது. செம்மொழித் தமிழ் என்ற தலைப்பில் 12 கட்டுரைகளும், கவிதைகள் என்ற தலைப்பில் 34 கவிதைகளும் கலையும் பண்பாடும் என்ற தலைப்பில் 13 கட்டுரைகளும் சமயப் பொதுமை கண்ட தமிழ் என்ற தலைப்பில் 12 கட்டுரைகளும் இலக்கியம் என்ற தலைப்பில் 43 கட்டுரைகளும் இலக்கணமும் மொழியியலும் என்ற தலைப்பில் 5 கட்டுரைகளும் தொல்லியல் என்ற தலைப்பில் 11 கட்டுரைகளும் ஆட்சித் தமிழ் என்ற தலைப்பில் 5 கட்டுரைகளும் அறிவியல் தமிழ் என்ற தலைப்பில் 12 கட்டுரைகளும் ஆங்கிலக் கட்டுரைகள் என்ற தலைப்பில் 8 கட்டுரைகளும் மலரில் உள்ளன. கவிதைகள் பெரும பாலும் திரையிசைக் கவிஞர்களாலேயே எழுதப் பட்டுள்ளன. இவை எதிர்பார்த்த தரத்தில் அமைந்திருக்கவில்லை எனத் தினமணி நாளிதழ் குறைப் பட்டுக் கொண்டது. தற்போது இம்மலரைப் பெறுவதாயின் "தமிழ் வளர்ச்சி இயக்குநர், தமிழ் வளர்ச்சி வளாகம், முதல தளம், ஆல்சு சாலை, எழும்பூர், சென்னை -08" என்ற முகவரியில் பெற்றுக் கொள்ளமுடியும் என அறிவித்துள்ளனர்.

தொடக்கவிழா நிகழ்ச்சிகளில் ஆங்கில ஆதிக்கமே மேலோங்கியிருந்தது. இந்தியக் குடியரசுத் தலைவர், ஆளுநர் என யாவரும் ஆஙகிலத்திலேயே உரையாற்றினர். மொழி பெயர்பபு வழங்கப்படவில்லை. செம்மொழி மாநாட்டில் ஆங்கிலப் பேச்சுக்களா? என்ற சலசலப்பும் ஆங்காங்கே காணப்பட்டது. அமெரிக்கப் பேராசிரியர் ஜார்ஜ் ஹார்ட், முனைவர் வா.செ.குழந்தைசாமி, நம்மவரான பேராசிரியர் கா.சிவத்தம்பி ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கினர். எழுபத்தெட்டு வயதானாலும் ஏற்றமிகு தமிழிலும் எழிலார் ஆங்கிலத்திலும் பேராசிரியர் கா.சிவத்தம்பி உரையாற்றினார். ஒலிவாங்கியை (Codeless Mic) கையில் பிடித்தபடி தொடர்ந்து உரையாற்றிய போது கைகள் அடிக்கடி களைத்துப் போனதால் மைக்கைப் பிடித்தபடி பேசுவதற்கு இடர்ப்பட்டார். இதனால் பேச்சின் ஒலிபரப்பில் தெளிவின்மை காணப்பட்டது.

மாநாட்டுப் பந்தலின் பிற்பகுதியில் வெள்ளைச் சேட், வெள்ளை வேட்டி அணிந்து வேட்டியை இடுப்பில மடித்துக் கட்டிய தொண்டர்கள் பலர் கூடியிருந்தனர். சிலர் கலைஞர், ஸ்டாலின், அழகிரியின் படங்களைக் கைகளில் ஏந்தியிருந்தனர். அடிக்கடி விசிலடித்தும் கைகளை உயரக் காட்டியும் தமது விசுவாசத்தை வெளிப்படுத்திக்கொண்டிருந்தனர்.

சங்க காலத்தில் பெண்ணுக்குச் சமத்துவத்தைத் தமிழ் தந்திருந்தது என்றும், யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற நன்னெறியை எல்லோருக்கும் போதித்த மொழி தமிழ் என்றும், குடியரசுத் தலைவர் தனது தொடக்கவிழாப் பேருரையில் குறிப்பிட்டார். 'கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது' பின்லாந்து நாட்டுப் பேராசிரியர் அஸ்கோ பார்ப்போலாவிற்கு வழங்கப்பட்டது. சிந்து வெளி எழுத்துகளை வாசித்தறிந்து அங்குள்ள நாகரிகம் தமிழர்களுடைய நாகரிகமே என பார்ப்போலா நிறுவியுள்ளார். விருது, ஐம்பொன்னால் ஆன வள்ளுவர் சிலையையும் பத்து லட்சம் இந்திய ரூபாய்களையும் உள்ளடக்கியது. விருதுப் பணம் கலைஞர் கருணாநிதியின் சொந்தப் பணம் என அறிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலர் கே.எஸ்.ஸ்ரீபதியின் நன்றியுரையுடன் தொடக்கவிழா நிகழ்வுகள் இனிதே நிறைவேற கொடிசியா வளாகத்தில் எமக்கென அமைக்கப்பட்டிருந்த விசேட உணவகத்தில் மதிய உணவை உண்ட பின் 'இனியவை நாற்பது" என்ற தலைப்பில் இடம்பெற்ற மாநாட்டுக் காட்சி ஊர்வலத்தைக் காணும் ஆவலுடன் அவிநாசிச் சாலைக்கு விரைந்தோம்.

(பார்வை தொடரும்)


ச.லலீசன், விரிவுரையாளர்,கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ்.கத்தோலிக்க பிறெஸ் வீதியில் ஆயர் இல்லத்திற்குப் பின்புறமாக 3 அறைகள் கொண்ட எல்லா வசதியும் நிறைந்த பெரிய வீடு ஒன்று வாடகைக்குண்டு. வாகனத் தரிப்பிட வசதியும் உண்டு. அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 5310190

## மைனர் கார் விற்பனைக்கு

பாவனையில் உள்ள 4 சிறி தொடர் இலக்கமுடைய கறுப்பு நிற மைனர்க் கார் உடனடியாக விற்பனைக்குண்டு. உச்ச விலை ரூபா 130,000/= கூடிய விலை கேட்பவர்களுக்கு உடன் கொடுக்கப்படும்.

தொடர்பு: 021 2227246, 021 3214895

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

45 நாள் நிரம்பிய பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 5148602

## நன்றி நவிலல்

கடந்த 11.07.2010 இல் அமரத்துவம் அடைந்த எமது பாசமிகு அன்புத்தாய்

**அமரர் கந்தையா ரஞ்சிதம்மா**

(நாரந்தனை கிழக்கு, ஊர்காவற்றுறை)

அவர்களின் அமரத்துவச் செய்தி கேட்டு நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தோருக்கும் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அர சாங்க உத்தியோகத்தர்கள், வங்கி உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் மற்றும் பத்திரிகையில் அனுதாபம் தெரிவித்தோர், துண்டுப் பிரசுரங்கள் மூலம் கண்ணீர் அஞ்சலி செலுத்தியோர், தொலைபேசி, தந்தி மூலம், அனுதாபம் தெரிவித்தோர், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோர் மற்றும் கனடாவிலுள்ள மகனின் இல்லத்துக்கு சென்று அனுதாபம் தெரிவித்த அனைவர்க்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிபுரிந்தோருக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

83/15, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 1076. (100696)

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# STUDY in UK



## UKRAINE, NEWZELAND, INDIA, CYPRUS

INTAKES @ August, September, October

Note
Conditional Offer and CAS Statement Within 5 Days

MBBS, MS, MD [Ukraine, India]
COMPUTING & IT
BUSINESS & MANAGEMENT
ACCOUNTING & FINANCE
TRAVEL & TOURISAM
DESIGNING & ARCHITECTURE
ENGINEERING
HOTEL MANAGEMENT
LANGUAGE & EDUCATION

**Our Services for Students :**

- Visa Consulting
- Air Ticket
- Career Advice
- Airport Pick-Up
- Scholarship
- Part Time Jobs
- Accommodation

**Also Handling :**

- Tourist Visa
- Administrative Review
- Visit Visa
- Re-Apply
- Dependent Visa

SPONSOR களுக்கான ஆலோசனைகள் வழங்கப்படும்

Winners & Achievers Dreamers Creating

Minimum Entry Qualification : O/L or Equivalent

SIEC

**SRIRAM INTERNATIONAL EDUCATION GROUP**

111/2, Brown Road, Kokuvil East, Jaffna
021- 2221875

Head Office : 169, George R De Silva Mawatha, Kotahena, Colombo-13.
Tel: 011-2434989 Fax: 011-2434767

**After Office Hours & Sundays Please Contact - 077 3502612**

# Study in UK

www.studyuk.lk

ENROLLING FOR SEP 2010 INTAKE
CAS LETTER in just 2 days



CITEC College of IT & E-Commerce www.citeclondon.co.uk
Newcastle College
MERIDIAN Business School www.mbslondon.co.uk

## Excellent Opportunity under the 'TIER 4' system

- ✓ Diplomas
- ✓ Bachelor Degrees
- ✓ Higher National Diploma (NQF Level 5)
- ✓ Foundation Degrees
- ✓ Master's Programmes
- ✓ Post Graduate Diploma (NQF Level 7)

### Spot admissions by UK Representatives

| | | |
|---|---|---|
| Sat 24th July | 10.00 am - 3.00 pm | Queen's Hotel, Kandy. |
| Sun 25th July | 10.00 am - 3.00 pm | Renuka Hotel, Colombo 03. |
| Mon 26th July | 10.00 am - 3.00 pm | Kurunagala |
| Tue 27th July | 10.00 am - 3.00 pm | Millennium Concepts Colombo 04. |

- ✓ 'A' Rated, 'Trusted' Colleges by UKBA
- ✓ Tuition Fee £ 3,500 onwards
- ✓ Advice on Sponsor & Visa Application
- ✓ Fast track IELTS Preparation

University Accreditations & Partners

Newcastle University, University of Sunderland, Prifysgol Cymru University of Wales, Teesside University, CTH, edexcel, idm, ncfe

ENTRANCE FREE

*Our counseling services are absolutely free of charge.*

**MILLENNIUM CONCEPTS**

225-3/2, Galle Road, Colombo-04. (Adjoining VISAKA Road, Bambalapitiya.)

011 7392 555 0773 40 50 60

முதல் முறையாக

# யாழ் நகரில்

இலங்கை முழுவதும் பல நூற்றுக் கணக்கான Phone திருத்துனர்களை உருவாக்கிய பிரபல ஆசிரியரின்

## Diploma in Mobile Phone Repairing

சுயதொழில், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பை பெற 100% செயல்முறை பயிற்சி அடங்கிய பாடநெறி

### Hardware



- அறிமுகம் (Spares / ICs / Tools / Faults / Web sites)
- தவறுகளை கண்டுபிடிக்க Trouble Shooting ஒழுங்கு முறைகள்
- Ic/Ribbon/Spares மாற்றுதல் / ஒட்டுதல் போன்ற பயிற்சி (All brand)
- Phone கலற்றும் முறை (சகலவிதமான), Ribbon/Slide / Touch....Etc.
- Hotgun / Multumeter / Power supply / U S cleaner. உபயோகம்
- விசேட Hardware குறிப்புகள்
- Forum மூலம் தீர்வுகாணல் (Jumper System)

Free! Study Packs (Faults Solutions) Schematics Diagram Cd's Applications Software codes Special Web Site

### Software

Setup Installation, Unlocking, Flashing
Jaf & P-Key, Setool, NSPro, Infinity, Spaitermen

| கொழும்பில் | யாழ்ப்பாணத்தில் |
|---|---|
| SDC No: 1, Perera Lane, Wellawatte, | No: 102-2/2, Navalar Road, (Luxman Plaza Building) Jaffna. |

உங்கள் பதிவுகளுக்கு 071 4241873

19 வருட அனுபவம்

ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
July.2010 to Dec..2010
தபால் மூலம்
தமிழ் மொழி மூலம்

- ~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
- ~ Dip. In Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
- ~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
- ~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
- ~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
- ~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
- ~ Dip. in Sales & Marketing Management விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
- ~ Dip. in Health & Hospital Management சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
- ~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
- ~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
- ~ Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், அனுராதபுரம், மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844 / 071 803 48 48

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:**

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**

24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

**விண்ணப்ப முடிவுத் திகதி : 28.07.2010**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# ஊமை

மூத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை: 158

திரேசம்மாளின் வேதனைக்குரல் அவன் காதுகளில் இன்னும் ஒலித்துக் கொண்டே இருந்தது. நீண்ட தூரம் நடந்து சலித்துவிட்ட கால்களுக்குச் சிறிது ஓய்வு கொடுக்க, வேலுப்பிள்ளை வாத்தியாரின் வீட்டு வாசலில் வந்து நின்றான் அந்தோனி.

நெற்றியில் உதிர்ந்த வியர்வைத் துளிகளைத் தன் தோளில் கிடந்த கிழிந்துபோன கந்தைத்துண்டால் ஒற்றி எடுத்துக் கொண்டான். நெற்றியில் சோக ரேகைகள் தாறுமாறாகக் கோடு கிழித்தன. ''இது ஒரு வாழ்வா?'' அவன் ஒருமுறை அலுத்துக் கொண்டான்.

மெல்ல வாத்தியாரின் வீட்டு வராந்தாவை நோட்டமிட்ட அந்தோனி, ''ஐயா ஐயா'' என்று குரல் கொடுத்துக் கொண்டே வாத்தியாரின் வரவை எதிர்நோக்கித் தன் துண்டை மடித்துக் கையிடுக்குக்குள் வைத்துக் கொண்டான்.

''யாரது?'' வாத்தியாரின் மனைவி பூரணம் மெல்ல வந்து வெளி வராந்தாவில் நின்று தன் பார்வையை ஓடவிட்டாள்.

''நான்தான் அம்மா'' அவன் குரலிலே ஒரு கனிவு, அடக்கம், அத்துடன் மரியாதைக்காக ஒரு புன்சிரிப்பு.

இத்தனையும் அவன் அன்று திட்டமிட்டுச் செய்தவை அல்ல. இயற்கையான அவன் சுபாவமே அப்படி.

வேலுப்பிள்ளை வாத்தியாரின் வீட்டாருக்குப் புதியவனல்ல அந்தோனி.

அந்தக் காலத்திலிருந்து அவனுடைய அப்பன் கிறிஸ்தோப்பு கூட வாத்தியார் வீட்டுக்கு அறிமுகமானவன்தான்.

ஏதாவது எடுபிடி வேலை செய்து வாத்தியாரின் மதிப்புக்கு உரியவர்களாகத்தான் இருந்தனர் அவனது பரம்பரையினர். இன்றும் அப்படித்தான்.

''யாரு அந்தோனியா? வா வா உன்னைத்தான் பார்த்துக் கொண்டிருந்தனான். தெற்காலி வேலியடியில கொஞ்சம் ஓலை கிடக்குது. அதை எடுத்து இந்த மாட்டுக் கொட்டிலடியில போட்டுவிடு பார்ப்பம்'' வாத்தியாரம்மாவுக்குப் பழம் நழுவிப் பாலில் விழுந்து விட்டது போன்ற மகிழ்ச்சி அத்தோடு வந்ததும் வாராததுமாக அவனுக்கு வேலையொன்றையும் சொல்லி வைத்தாள்.

அவளுக்கு அது ஒரு பழக்கம்.

அந்தோனி ஒரு அப்பாவி, எதற்கும் ''மாட்டேன்'' என்று சொல்லாத பிறவி.

எதையோ நினைத்துக் கொண்டு வாத்தியார் வீட்டுக்கு வந்த அவனுக்கு இந்த வேலைச் சுமை வேதனையைக் கொடுத்தாலும் அவன் தன் கவலைகளை மறந்து தன் மனைவி திரேசம்மாளின் வேதனை முனகலையும் மறந்து ஊதிவிட்ட பஞ்சாகித் தெற்குத்திசை வேலி நோக்கி நடந்தான். அந்தோனி வாய் பேசக் கூச்சப்பட்டவன் ஆனாலும் உடலை வளைத்து உழைத்து வாழக் கூச்சப்பட்டவன் அல்ல.

சின்னஞ்சிறு வயதிலிருந்தே எந்த வேலையையும் முகம் கோணாது செய்து முடிக்கும் பழக்கம் அவனுக்கு இருந்தது. ஏன்? அவன் மனைவி திரேசம்மாளும் அவனுக்குக் குறைந்தவளல்ல அந்தோனிக்கு ஏற்றாற் போல ஓடி ஆடி வேலை செய்யக்கூடியவள்தான்.

நோய் நொடியென்று அந்தோனி ஒரு நாளாவது பாயிற் படுத்தவனல்ல அதே போலத் திரேசம்மாளும் இருந்தாள். ஆனால் அவள் இப்போது.....

அந்தோனிக்கு வேலையென்று ஒன்று இல்லை. ஆனால் ஊரில் உள்ள எந்த வேலையையும் செய்து முடிக்க அவனுக்குத் தெரியும்.

வாத்தியார் வீடு தொடக்கம் உடையார் வீடு வரை அவன்தான் எடுபிடி ஆள்.

நேரம் பாராமல் சொன்ன வேலைகளைச் செய்து முடித்து விடுவான்.

ஏதோ கிடைக்கும் சொற்ப வருவாயில் கூழோ கஞ்சியோ அவனது குடும்பத்தை இது நாள்வரை வாழ வைத்தது.

நேரம் கிடைக்கும் போதெல்லாம் திரேசம்மாளும் தான் பெற்றெடுத்த இரண்டு குஞ்சுகளையும் வளர்க்கக் கணவனைப் போல் நாலு வீட்டில் நெல்லோ மாவோ இடித்துக் குடும்பத்துக்குத் துணையாகத்தான் இருப்பாள்.

ஆனால் அவள் இப்போது பனை ஓலையால் வேய்ந்த ஒரு பழங்குடில். ஊரின் ஒதுக்குப் புறத்தில் அது அந்தோனியின் அப்பு கிறிஸ்தோப்பர் அவனுக்கு விட்டுப் போன சொத்து. போன வருஷம் அந்தோனிதான் பனையேறி ஓலை வெட்டி ஓட்டை விழுந்த கூரையை மறைத்து ஒருவாறு ஒழுகாமற் செய்திருந்தான்.

ஆனால் அக்குடில் இப்போது ஓட்டை விழுந்து ஓடிவரும் மாரியைக் காட்டி அவனைப் பயமுறுத்திக் கொண்டிருந்தது.

அந்த ஓலைக் குடிலை ஒழுங்காக வைத்திருப்பவள் திரேசம்மாள்தான்.

(10 ஆம் பக்கம் பார்க்க....)



1960 களின் பிற்பகுதியில் ஈழத்துப் புனைகதைத் துறையில் தன்னையும் இணைத்துக்கொண்ட செ.மகேந்திரன், நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1960 களின் ஆரம்பத்திலிருந்தே ஈழநாடு பத்திரிகையில் கவிதைகளை எழுதிவந்தவர்.

25 இற்கு மேற்பட்ட இவரது சிறுகதைகள் மற்றும் கவிதைகள் சிந்தாமணி, வீரகேசரி, மித்திரன், ஈழநாதம், முரசொலி, உதயன், சஞ்சீவி போன்ற பத்திரிகைகளிலும் பல சஞ்சிகைகளிலும் வெளியாகியுள்ளன.

2002 இல் வெளியான 'மனிதத்தைத் தேடி' என்ற இவரது கவிதைத் தொகுப்பு, வடக்கு - கிழக்கு மாகாணப் பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் இலக்கியப் பரிசு பெற்றது.

செல்ல மகேந்திரன், வேதாமகேஷ், மாவுரையூரன், நெடுந்தீவ மகேஷ் ஆகிய புனைப் பெயர்களில் சிறுகதைகள், கவிதைகளை எழுதியுள்ளார். பயிற்றப்பட்ட ஆசிரியர் - ஆரம்பக் கல்வி ஆலோசகர் - ஆரம்பக் கல்வி உதவிப் பணிப்பாளர் போன்ற பதவிகளை வகித்து 2003 ஆம் ஆண்டில் சேவையிலிருந்து இளைப்பாறியவர்.

1969 ஆம் ஆண்டில் 'தினபதி'யில் வெளியான இவரது 'ஊமை' சிறுகதை இங்கு பிரசுரமாகிறது.

---

# பரதனை உயர்த்திய பாதுகை

இலக்கியக் காட்சி 49

''நான் தசரதன் மகன். அவ்வளவுதான் எனக்குத் தெரியும். நான் யார், நான் எங்கிருந்து வந்தேன் என்பது உங்களுக்குத் தெரியும்; நீங்கள் தான் சொல்ல வேண்டும்'' இது பிரமதேவனுக்கு இராமன் சொன்னது.

ஆகவே, தந்தை தாய் வாக்கிய பரிபாலனம் செய்யும் சாதாரண மனிதர்களாகத்தான் தசரதராச குமாரர்கள் நால்வரும் விளங்குகிறார்கள். இராமா யாண காப்பியம் இதனை மையமாகக் கொண்டு படைக்கப் பெற்றிருக்கிறது. வேள்வி காத்ததும் அரக்கரை அழித்ததுங்கூட ஒரு சத்திரியன் செய்ய வேண்டிய கடமை என்றுதான் இராமன் கூறுகின் றான்; தன்னை விஷ்ணு அவதாரமாகக் காட்ட வில்லை.

ஆயினும், ஆஞ்சநேயரும் பரதனும் இராமனை ஓர் அவதார புருஷனாக எண்ணி வழிபடு கிறார்கள். சுமித்திரை, இராமனை ஒரு அவதார புருஷனாக உணர்ந்திருந்ததாகவும், அதனால்தான் இலக்குமணனை இராமனுக்கு எப்போதும் 'ஊனாக' இருக்கும்படி வழிநடத்து கிறாள் என்றும் அறியக் கூடியதாக உள்ளது.

இவ்வாறு அவதார



புருஷனான இராமன், தந்தை தாய் சொற்படி வன வாசம் செய்ய மரவுரி தரித்துப் புறப்படுகிறான்.

கேகய நாட்டுக்குச் சென்றிருந்த பரதன், மீண்டும் அயோத்திக்கு வந்தபொழுதுதான் இதனை அறிகிறான்.தாயுரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னை, உலகியலுக்கு மாறாகத்தான் அரசாள முடியாது என மறுத்து, அண்ணல் இராமனை அழைத்துவரவே பரதன் வனஞ்செல்கிறான். இதற்கு

அண்ணன் இணங்காது போனால், தானும் வனவாசம் செய்ய எண்ணியே மரவுரியை அணிந்து செல்கிறான்.

அங்கே தந்தை சொல்லை மீறித் தான் அயோத்திக்கு வரமுடியாது. நாடாள்வதும் காடாள்வதும் எல்லாம் எனக்கு ஒன்றுதான் என இராமன் திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டே செல்கிறான். பரதனும் பலவிதமாக அண்ணனை இராச்சியமாள வைப்பதற்காகப் பேசிக்கொண்டே போகிறான்.

இவற்றை அவதானித்திருந்த வசிட்ட முனிவர், இராம னது அனுமதியோடுபோய் இராச்சியத்தை நடத்தினால் ஒரு பழிபாவமும் வராது; தசரதனுடைய சத்தியமும் காக்கப்படும் என்று பரதனைப் பார்த்து கூறுகின்றார்.

இத்தருணத்தில் இராமனும் பரதனை அன்போட ணைத்து, நான் தந்த இராச்சியம் என்று எண்ணி அயோத்தியி லிருந்து அரசாளக் கடவாய். அப்போது எல்லாம் நன்மையாய் முடியும். பதினான்கு ஆண்டுகள் முடிந்ததும் நான் வந்து அரசுரிமையை ஏற்கிறேன் என்கிறான்.

பரதன் உடன்படுகிறான்.

ஆயினும், ஒரு வேண்டுகோளை முன்வைக் கிறான். ''அண்ணா, உங்களுக்கு உரித்தான சிம்மாசனத்தில் நான் அமர்ந்திருக்கமாட்டேன். உங்கள் பாதுகையைத் தாருங்கள். அதனை ஆசனத்தில் வைத்துவிட்டு நான் நந்திக் கிராமத்திலிருந்து கொண்டு அரசியலைக் கவனிக்கிறேன். பாதுகைக்கு என் பணி சமர்ப்பணமாகும். பதினான்னு ஆண்டுகள் முடிந்து வந்து நீங்கள் பட்டாபிஷேகம் செய்து அரசாள வேண்டும்'' என்று கேட்கிறான்.

இராமன் உடன்படுகின்றான். பாதுகையைப் பெற்ற பரதன் அதனைத் தன் தலையில் சுமந்து அயோத்திக்குத் திரும்புகிறான்.

இராமன் பதினான்கு வருஷம் வனத்தில் தவஞ் செய்கிறான்; பரதன் நந்திக் கிராமத்தில் தவஞ் செய்கிறான். பாதுகை பூசிக்கப் பெறுகிறது. இராமனது பாதுகையே தனக்குச் சரணம் எனக் கொள்கிறான்.

''நந்தியம் பதியின் தலை நாள் தோறும்
சந்தியின்றி நிரந்தரம் தம்முனார்
[illegible]
இந்தியங்களை வென்றிருந்தான் அரோ'' (கம்பர்)

அனையன் ஆய பரதன் அலங்கலின்
புனையும் தம்முனார் பாதுகைப் பூசனை
நினையுங் காலை நினைத்தனம் ஆம் அரோ
மனையின் வந்து அவன் எய்த மதித்த நாள். (கம்பர்)

இங்கே இராமனது காலடியைப் பாதுகையில் காண்கிறான் பரதன். இறைவனது திருவடிகளைச் சரணடைந்தவர்களுக்கு உலகவிவகாரங்கள் பாரமாகத் தெரியமாட்டா. கடமையைச் செய்வதும் தவமே என்பது பெரியோர் வாக்கு.

இந்தப் பதினான்கு வருஷமும் விஷ்ணுவின் பக்தனாகத் தவமியற்றுகின்றார் பரதாழ்வார்.

பதினைந்தாவது வருஷம் இராமன் அயோத் தியை வந்தடைகின்றான். அயோத்தி ஆனந்தத் தில் திளைக்கிறது! கூனியும் கைகேயியும் பரதனுக்காகப் பதவியை விரும்புகிறார்கள்.

ஆனால் அதிலும் பார்க்கப் பல மடங்கு மகிழ்ச்சி தரும் நிலையைப் பெறுகிறான் பரதன் இப்போது! கிரீடம் அணிந்து சிங்காசனத் திலிருக்கும் உயர்ந்த நிலையிலும் பார்க்கப் பன் மடங்கு உயர்ந்த புகழ் பரதனுக் குக் கிடைத்திருக்கிறது.

கிரீடம் இருக்க வேண்டிய சிங்காசனத்தில் வாசற் படியில் கழற்றிவிட வேண்டிய பாதுகை பதினான்கு வருஷம் வீற்றிருந்து பூசிக்கப் பெறுகிறது! திருமுடியை யாரும் தொட்டு வணங்கு வதில்லை; திருவடியைத் தானே தொட்டு வணங்குகிறார்கள்! இது தத்துவம்.

''ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ் அல்லால்
பொன்றாது நிற்பது ஒன்று இல்''

பரிசுத்தமான செய்கைக்கு இராமனிலும் பார்க் கப் பரதன் மேலானவன் எனப் புகழ்கிறது திவ்விய பிரபந்தம்!

பதினான்கு வருஷம் அண்ணனுடைய பாதுகைக் குப் பூசனை புரிந்து, பதி னைந்தாவது வருஷம் தந்தை விரும்பிய பட்டாபிஷேகத்தை அண்ணன் பெறும் படி செய்து, புகழ் பெற்று உயர் வடைகிறான் பரதன்.


''தாயுரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னைத்
தீவினை என்ன நீத்துச் சிந்தனை முகத்திற் தேக்கிப்
போயினை என்ற போது புகழினோய் தன்மை கண்டால்
ஆயிரம் இராமர் நின் கேள் ஆவரோ தெரியின் அம்மா''

குகன் முன்பு, ஆயிரம் இராமருக்கு மேலாக உயர்த் திக் கூறுகின்றான். இப்போது பாதுகைதான் சிங் காசனத்தில் இருக்கும்; கிரீடம் இருக்காது என மனம், வாக்கு, காயம் மூன்றும் ஒப்பத் தவமிருந்து பாதுகையால் உயர்வடைகிறான் பரதன்.

மட்டுவில் ஞா. நல்லதம்பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 122



அனுப்புபவர் பெயர்:.......................................................

விலாசம்:.......................................................

.......................................................

கையொப்பம்:.......................................................

### இடமிருந்து வலம்

1. முகத்துக்கு நேரே புகழ்வது.
5. புலவனையும் குறிக்கும். அவன் பாடியதையும் குறிக்கும்
7. புள்ளடி.
8. மரணித்த போர் வீரர்களது உடலையும் இப்படியும் அழைப்பர்.
10. வெளிச்சம் தருவது.
12. நிறை/ எடை
13. திடீரென வரும் பிரமிப்பு.
16. அழகு/ யெளவனம்.
17. அகந்தையின் பிறப்பிடம் இந்த எண்ணம்.
18. தவளையின் உயிர்வாழ்வின் ஆரம்ப நிலை.
19. பூவுலகு.
20. நோவு.
21. தண்டிகை/ வாகனம்/ முரசு.
23. வேல்வித் தீயில் போடப்படும் பொருள்.
24. இறப்பு.

### மேலிருந்து கீழ்

1. முதல் போட்டவன்/ தொழிலாளியின் எஜமான்.
2. கை.
3. இரட்டை
4. சுவைகளில் ஒன்று.
5. நாட்டை விட்டு வெளியேற இந்தச் சீட்டு அவசியம்
6. முற்கால ஆயுதம்.
9. தீர்ப்பு/ முடிவு/ தீர்மானம்.
11. புதிய செய்தி/ தகவல்.
14. கரத்தால் இழைக்கும் தவறு.
15. சுய தேவையைப் பூர்த்தி செய்யும் நிலை.
16. பனைகளில் சிறியவை.
17. கவனிப்பு.
18. சிறிய பாத்திரம்.
19. ஆடத் தெரியாதவனுக்கு இது சரியில்லை
22. வேகம்.

### போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவான தாகும்.*
*5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப்பெறும் மூன்று அதிஷ்டசாலி களது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*
*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 122**
***நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,***
*இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
*என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 28.07.2010 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.*
*7. சொற்சிலம்பம் போட்டி இல.122இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 01.08.2010 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.*

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 120 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1)அப்பாவி. (4) கமுகு. (7) ரதம். (8)கட. (9) தாமதம். (11) கமம். (12) திடம். (13) பூரான். (14) மணம். (16) கதகளி. (17) புசல். (19) போன. (20) கைது. (22)கல. (23) திம்பு. (24)வில்லன்.

**மேலிருந்து கீழ்**

(1)அந்தாதி. (2)பாரதம். (3) விதம். (5)முகமன். (6) குடம். (10) மடத்தனம். (11)கராம்பு. (13)பூண. (14)மளிகை. (15) மல்லன். (16) கபோதி. (18.)சகல. (21) துவி.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 120 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** மாலதி - கிருஷ்ணதாசன், ஏழாலை கிழக்கு, ஏழாலை.

**2 ஆம் பரிசு** எம்.கே.பாத்திமா ரிஸ்லியா, பலாலி ஆசிரியர் கல்லூரி, விஞ்ஞானப் பிரிவு, திருநெல்வேலி.

**3 ஆம் பரிசு** செல்வி ப.ஆரணி, புலோலி மேற்கு, புலோலி.

**4 ஆம் பரிசு** பபிஸ்ரா நவரத்தினம், ஆலடி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

**5 ஆம் பரிசு** இ.சிறீபாலன், இல.56, வீடமைப்புத் திட்டம், நாவற்குழி.

### பாராட்டுப் பெறுவோர்

(1) **க.நிறைஞ்சலி,** நாவலடி, புலோலி மத்தி, பருத்தித்துறை.

(2) **பா.அம்பிகாதேவி,** கல்வளை, சண்டிலிப்பாய்.

(3) **திருமதி க.இராஜசுந்தரம்,** இல.34, குளப்பிட்டி ஒழுங்கை, கொக்குவில்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

## ஊமை

*(09 ஆம் பக்கத் தொடர்ச்சி....)*

சாணி போட்டு மெழுகி, மெருகிட்டு வைத்திருப்பாள். ஆனால் அவள் இப்போது உடையார் வீட்டுக்கு மாவிடிக்கப் போனவள் திரும்பி வரும்போது பாழாய்ப் போன கல்லொன்றில் தடுக்கி விழுந்து கால் முறிந்த நிலையில் வலி தாங்க முடியாமல் குடிலில் கிடந்து முனகிக் கொண்டிருக்கிறாள்.

அந்தோனிக்கு என் செய்வதென்று தெரியவில்லை. 'காலுக்க சும்மா நொந்து போச்சுதாக்கும்' என்ற நினைப்பில் தனக்குத் தெரிந்த வைத்தியத்தைக் கத்தாளை, வேம்பம்பட்டை இவற்றைக் கொண்டு செய்து பார்த்தான்.

வலியோ குறையவில்லை. கவுண்மேந்து ஆஸ்பத்திரிக்கு வண்டி கட்டி அவளை அழைத்துப் போனான்.

கால் எலும்பு முறிந்து போய்விட்டது. இரண்டு மாதமாக அவன் திரேசம்மாளுக்காக அலைந்த அலைச்சல் சொல்லி முடியாது.

''கால் முறிவுக்கு ஒட்டகப்புலந்தான் சரியான இடம்'' அந்தோனிக்கு யாரோ சொன்ன ஞாபகம். நம் நாட்டு வைத்தியத்துக்கு இது ஓர் எடுத்துக்காட்டு. திரேசம்மாளின் கால் முறிவுக்கு ஒட்டகப்புலந்தான் சரியான இடம்.

அந்தோனி தன் வேலையில் கவனத்தைச் செலுத்தினாலும் திரேசம்மாளின் வேதனை முனகல் அவன் காதுகளில் ஒலித்துக் கொண்டுதான் இருந்தது.

''ச்சா ஒரு இருபத்தைஞ்சு ரூபா இருந்தால்'' உள்ளத்தில் நிறைந்த ஆற்றாமையின் அவல ஓலம் அவனையும் அறியாமல் வார்த்தைகளாக வெடித்து உதிர்ந்தன. ''வாத்தியாரிட்டக் கட்டாயம் இருக்கும். அவர் தருவார்''

மனத்தை ஒருவாறு தேற்றிக் கொண்டான்.

''யாரது அந்தோனியா, எப்ப வந்தனி?'' வாத்தியார் படலையைத் திறந்துகொண்டே அந்தோனியைப் பார்த்துக் கேள்வி கேட்டார்.

''ஓமையா இப்பதான் வந்தனான்'' வாத்தியாரைக் கண்டதும் அந்தோனிக்கு ஒரு மகிழ்ச்சி. எசமானைக் கட்ட நாய் போல வலிந்து ஒரு சிரிப்பும் சிரித்துக் கொண்டான். எப்படி இருந்தாலும் ஓலைகளை அடுக்கி மாட்டுக் கொட்டிலடியில் போடுவதில் இருந்த கவனத்தை அவன் குறைக்கவில்லை.

தெற்கு வேலியருகில் கிடந்த ஓலைகளனைத்தும் மாட்டுக் கொட்டிலருகில் அழகாக அடுக்கப்பட்டிருந்தன. அந்தோனி தன் உடலில் ஒட்டிக் கோலமிட்ட தூசியைத் தன் துண்டால் தட்டிக் கலைத்துவிட்டான்.

மெல்ல நடந்து வந்து வாத்தியாரின் கவனத்தைத் திருப்ப ''ஐயா'' என்று குரல் கொடுத்தான்.

வாத்தியார் வந்த களையாற உடை மாற்றி ஒரு கப் காப்பியில் நாவை நனைத்துக் கொண்டிருந்தார்.

''வேலை முடிஞ்சுது போல, அதுக்கிடையில முடிச்சிட்டியே'' வாத்தியாருக்கு அது ஒரு ஆச்சரியம் கதிரையை விட்டு எழுந்து இரண்டடி முன்னே வைத்து வாசற்படியில் காலைப் பதித்து முற்றத்தில் நின்ற தென்னமரத்தை ஒருமுறை அண்ணாந்து பார்த்தார். தென்னமரம் செழிப்பாகக் காய்த்துக் குலுங்கியது.

அதில் முற்றிய ஒன்றிரண்டு தேங்காய்க் குலைகள். அந்தோனிக்கு அவைகள் தெரியவில்லை.

திரேசம்மாளின் முனகல் ஓசை அவன் சிந்தனையை நிறைத்திருந்தது. வாத்தியார் திரும்பவும் தன்னிடத்திற்குப் போய்விட்டார்.

''இஞ்சேரும் அந்தோனி ஓலை எடுத்துப் போட்டிட்டான். களைச்சுப் போனான். கொஞ்சம் கோப்பி இருந்தாக் கொண்டாரும்'' வாத்தியாருக்கு இப்பொழுது அந்தோனி மீது ஒரு கருணை.

அந்தோனியை ஒரு முறை பார்த்துக் கொண்டார்.

''வேண்டாமையா என்னத்துக்கு'' அந்தோனி விரும்பும் விருப்பின்றியும் மோதும் சிந்தனையோடு வார்த்தைகளை இழுத்தான்.

தன் எண்ணத்தில் நிறைந்திருந்த தேவையை வெளிப்படுத்த நேரம் பார்த்திருந்தான்.

''வாத்தியாரிட்ட இருக்கும்; அவர் தருவார்'' ஒரு நினைவு.

''சும்மா குடி, இஞ்சேரும் கோப்பியைக் கொண்டாரும்''.

வாத்தியார் மனைவியைத் துரிதப்படுத்தினார்.

நெஞ்சக் குளத்தில் எழுந்த நினைவலைகளின் மௌன ஓலம் அவனை வருத்தியது. ''ச்சா ஒரு இருபத்தைஞ்சு ரூபா இருந்தால்'' அந்தோனி நினைத்துக் கொண்டான். ''வாத்தியாரிட்ட இருக்கும் அவரிட்டக் கேட்டால் தருவார்''

எப்படிக் கேட்பது? ஏனோ ஒரு அச்சம், கூச்சம், தயக்கம்; வார்த்தைகள் அவன் வாய்க்குள்ளேயே வட்டமிட்டன.

தன் உடலை வளைத்துக் கூனிக் குறுகி ஓர் ஓரத்தில் நின்றிருந்தான்.

''அந்தோனி கொஞ்சமிரு கோப்பி குடிச்சிட்டுப் போகலாம்'' வாத்தியாரம்மாவின் வேண்டுகோள் ''ஏன் பாரும் முத்தத்துத் தென்னயில தேங்காயள் முத்திக் கிடக்கு. அந்தோனியிட்டச் சொன்னா இப்ப இழுத்தெறிஞ்சு விடுவான்''

வாத்தியாரின் நயமான வேண்டுகோள்

அந்தோனியை, அவன் நிலையைப் புரிந்து கொள்ளாத வாத்தியாரின் ஒருதலைப் பட்சப் பிரேரணை. அந்தோனி மறுப்புக் கூறவில்லை.

அவனுக்கோ தான் வந்த நோக்கத்தை வெற்றிகரமாக நிறைவேற்றும் ஆவல். ''வாத்தியார் கட்டாயம் இருபத்தைஞ்சு ரூபா தருவார்'' அந்தோனியின் நம்பிக்கையால் உள்ளம் ஆறுதலடைந்தது.

தென்னமரத்திலே தாவி ஏறினான். தேங்காய்கள் விழுந்து சிதறின. தென்னமரத்திலிருந்து கீழே இறங்கினான். அந்தோனியின் உடலில் வியர்வைத் துளிகள் முத்தமிட்டன.

''இந்தா அந்தோனி கோப்பி. களைச்சுப்போனாய். எடுத்துக் குடி'' வாத்தியாரம்மாவின் விருந்தோம்பல். கோப்பி நிரம்பிய பாதிச் சிரட்டை அவன் கரத்தில் ஏறி அமர்ந்தது.

கோப்பியையே சிறிது நேரம் உற்று நோக்கிய அவனுக்கு அது விடம் போல் கசந்தது. ''பாவம் திரேசம்மாள் ஒண்ணும் குடியாமல் கிடக்கிறாள். ஒரு இருபத்தைஞ்சு ரூபா இருந்தால், வாத்தியாரிட்ட இருக்கும். அவர் கட்டாயம் தருவார்'' அந்தோனி நினைத்துக் கொண்டான். கோப்பிச் சிரட்டையைத் தரையில் நிறுத்தி வைத்தான். ஏனோ அதனைக் குடிக்க அவனுக்கு மனம் வரவில்லை.

''இஞ்சேரும் அந்தோனிக்கு ஒரு ஐம்பது சதம் இருந்தாக் குடும், பாவம்'' வாத்தியாரம்மாவின் குரல் அறைக்குள் இருந்து ஒலித்தது. வேலைக்காக அல்ல, பாவத்துக்காக அவள் சிபார்சு செய்தாள்.

''ஐம்பது சதமோ ஆரிட்டக் கிடக்கு, ஒரு இருபத்தைஞ்சு சதம் என்னிட நாசனலுக்க பாரும் கிடந்தா எடுத்துக் குடும்''

வாத்தியாரின் முடிவான வார்த்தைகள். அந்தோனிக்கு வேதனை நிரம்பி நெஞ்சம் கனத்தது. கண்களின் கடைக் கோணங்களில் திரண்ட இரு சூடான கண்ணீர் முத்துக்கள் கன்னங்களில் கோடு கிழித்தன. அவன் வாயிருந்தும் ஊமையானான். அவனால் நம்ப முடியவில்லை, கண்களைத் துடைத்துக் கொண்டான்

வாத்தியாரிட்டக் கூடக் காசில்லப் போல. அப்படித்தான் நினைக்கத் தெரிந்தது அந்த வெள்ளை உள்ளம் படைத்த அப்பாவியால். நிலத்திலே நிறுத்தி வைத்த கோப்பிச் சிரட்டை மெல்ல மெல்லச் சரிந்து வீழ்ந்து கோப்பி முழுவதும் மண்ணிலே நுழைந்து மறைந்து விட்டது. சிலையாக, ஊமையாக அந்தோனி அமர்ந்திருந்தான். ''இந்தா அந்தோனி கோப்பி, குடிச்சிட்டியே?'' வாத்தியாரம்மா இருபத்தைஞ்சு சதத்தை நீட்டிக் கொண்டே கேட்டாள். அந்தோனி சிரட்டையைக் குனிந்து நோக்கினான். அது வெறுமையாய்க் கிடந்தது. கோப்பி குடித்ததற்கு அடையாளமாகத் தலையை மேலும் கீழும் ஆட்டினான்.

கை மெல்ல நீண்டு அந்த இருபத்தைந்து சத நாணயத்தைப் பெற்றுக் கொண்டது. வாத்தியார் எழுந்து அவன் இதயத்தில் நடந்து உள்ளே சென்றார். ''அந்தோனி அப்ப போகப் போறியே'' போ என்பதற்கு அடையாளமாக வாத்தியாரம்மாவின் கேள்வி. ''ம்'' ஒரு சொல்லில் பதில் கூறிய அந்தோனி படலையைத் தாண்டி வெளியே நடந்தான். அவன் இதயத்தில் இரத்தம் கசிந்தது.

''பாவம் அந்தோனி நல்லவன்'' வேலைகளை வெற்றிகரமாக முடித்துக் கொண்ட வாத்தியாரம்மாவின் அனுதாப வார்த்தை அந்தோனியின் காதுகளில் மெல்லக் கேட்டது. ஆமாம் பாவம் அந்தோனி. வாயால் வாழத் தெரியாத ஓர் ஊமை.

**************************

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் புகையிலையில் 3/5 பங்கு திருவாங்கூர் அரசனுக்கு; பிரிட்டிஷார் மறித்த போது ஆரம்பித்தது கடத்தல்

## யாழ்ப்பாணக் கச்சேரியின் வரலாற்றை அறிந்து கொள்ளுங்கள்

**ஆவணப்பெட்டகம் 02**

ஆங்கிலேயர் காலத்தில் பகோடா, றிக்ஸ், டொலர் மற்றும் பணம் என்ற மூன்று வகைகளில் பணப் புழக்கம் இருந்து வந்ததாகவும் அதில் ஒரு பணம், என்பது எட்டுச் சதப் பெறுமதி கொண்டதாகவிருந்தது எனவும் இத் தொடரில் கடந்தவாரம் குறிப்பிட்டிருந்தோம். ஆனாலும் ஒரு பணத்தை 6 சதம் பெறுமதி கொண்டதாகக் கணிப்பிடும் நடைமுறை இருந்து வந்ததாக ஒருசிலரால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளமையை இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது.

**வரி அறவீடு**

இந்தக் காலப் பகுதியில் அறவிடப்பட்ட சில முக்கிய வரிகளின் விவரம் வருமாறு:

**தலை வரி**

தலைவரி 6 பணம். பதினைந்து வயதிற்கு மேற்பட்ட அனைவரும் தலைவரி செலுத்த வேண்டும். குறைந்த சாதியினருக்கு 2 பணம். வறியவர்களுக்கு ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களிடம் ஒரு குடும்பத்திற்கு 2 பணமும் தலைவரியாக அறவிடப்பட்டது. யாழ்ப்பாணக் கலெக்டராகப் பதவி வகித்த ஜோன் ஜார்விஸ் (இவரது பெயர் John Jarvis எனவும் வேறு சில நூல்களில் John Jervis எனவும் எழுதப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்ட சாதியினரிடம் தலைவரி அறவிடக்கூடாது என ஆளுநருடன் வாதாடித் தாழ்த்தப்பட்ட சாதியினர் மீதான தலைவரியை இல்லாமல் செய்தார். இவர்கள் உண்மையில் பண்ணை அல்லது வயலில் வேலை செய்யும் கூலிகளே என யாழ்ப்பாணக் கலெக்டர் ஆளுநருக்கு எடுத்துரைத்தார்.

**மரவரி (சோலை வரி)**

வேம்பு 3/4 பணம், இலுப்பை 3/4 பணம்

பனை 1/10 பணம் அல்லது 1/8 பணம்

மரவரி; (Timber tax) காடுகளில் மரங்கள் தறிக்கும் போது வரி உத்தியோகத்தரின் அனுமதியின்றி மரம் தறிக்க முடியாது. மரவரியாக 25% அறவிடப்பட்டது. மரம் தறிப்பவர்கள் குறிப்பிட்டளவு விதைகளையோ, தளைத்து வளரத்தக்க தடிகளையோ நாட்ட வேண்டும் என்ற உத்தரவு அமுலிலிருந்தது. படகு கட்டுவதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து தூத்துக்குடிக்கு மரங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

வீடு கட்டுவதற்கும் மரங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து தென்னிந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. பனை மரங்கள் தறிப்பதைத் தடுக்கும் நோக்குடன் பனை வரியை 25 % வீதமாக நிர்ணயித்தது பிரிட்டிஷ் அரசு. 1799 ஆம் ஆண்டு பனை வரி மூலம் 5000 ஸ்ரேர்லிங் பவுண் வருமானம் கிடைத்தது.

**கடவுச்சீட்டு வரி**

மன்னார், ஊர்காவற்றுறை, பருத்தித்துறை போன்ற இடங்களிலிருந்து வர்த்தக நோக்கில் இந்தியா சென்று வருபவர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது. டச்சுக்காரர்களுக்கு இதன் மூலம் 3750 றிக்ஸ் டொலர் வரு மாணம் கிடைத்தது. இது பிரித்தானியர் காலத்திலும் தொடர்ந்தது.

**சந்தை வரி** (Bazaar Tax) தானியங்களின் பெறுமதியின் 2 வீதம்.

ஏணைய பொருள்கள் பெறுமதியின் 3 வீதம்.

இந்த வகையில் சந்தைவரி மூலம் 1806ஆம் ஆண்டு இலங்கை முழுவதிலும் மொத்தமாக 61000 றிக்ஸ் டொலர் வருமானம் கிடைத்தது.

**முத்திரை வரி**

*(துணிகளுக்கு முத்திரை பொறிக்கும் வரி)*

யாழ்ப்பாணத்திலும், மன்னாரிலும் ஒல்லாந்தர் காலத்திலும் பிரித்தானியர் காலத்திலும் புடைவைக் கைத் தொழில் மிகவும் சிறந்து விளங்கியது. இங்கு உற்பத்தி செய்யப்பட்ட துணிகளுக்கு முத்திரை பொறிப்பதற்கான (அரச முத்திரை) வரியாக ஒல்லாந்தர் காலத்தில் பெறுமதியின் 7½ வீதமும் ஆங்கிலேயர் காலத்தில் பெறுமதியின் ஐந்து வீதமும் அறவிடப்பட்டது. ஆடை உற்பத்தி மூலம் 2,00,000 றிக்ஸ் டொலர் வருமானம் கிடைத்தது.

**சாய வேர் வரி**

உற்பத்தி செய்யப்பட்ட துணிகளுக்கு நிறமூட்டுவதற்காக (சாயம் தோய்ப்பதற்காக) ஒருவகை வேர் உற்பத்தி செய்யப்பட்டது. யாழ்ப்பாணம், மன்னார், வன்னி போன்ற இடங்களில் சாயவேர் (Chaya root) உற்பத்தி செய்யப்பட்டது. சாய வேர் வரியாக 5 வீதம் அறவிடப்பட்டது. சாயவேர் இந்தியாவுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது.

1806 ஆண்டு சாயவேர் ஏற்றுமதி மூலம் 750 ஸ்ரேர்லிங் பவுண் வருமானம் கிடைத்தது. இங்கிலாந்துக்கும் சாயவேர் ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆனால் இங்கிலாந்துக்கான கப்பல் கூலி அதிகமாகவிருந்தபடியால் இங்கிலாந்துக்கான ஏற்றுமதி வெற்றியளிக்கவில்லை. என்ன காரணமோ தெரியவில்லை. 1825 ஆம் ஆண்டு சாயவேர் உற்பத்தி நிறுத்தப்பட்டது. சாயவேர் உற்பத்தி செய்வதற்கென இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட கூலித்தொழிலாளர்களே வேர்க் குத்திப்பள்ளர் என அழைக்கப்பட்டதாக முதலியார் செ.இராசநாயகம் யாழ்ப்பாணச் சரித்திரம் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**பொருள்களைக் கொண்டு செல்வதற்கான வரி**

ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்குப் பொருள்களைக் கொண்டு செல்வதற்கும் வரி அறிவிடப்பட்டது. இது Land Pass duty என அழைக்கப்பட்டது. இந்த வரி பெறுதிமதியின் 7½ வீதமாக இருந்தது.

**ஏற்றுமதி வரி**

வேப்பெண்ணெய், இலுப்பெண்ணெய் என்பன தயாரிப்பதற்காக வேப்பம் விதைகளும், இலுப்பம் விதைகளும் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. வேப்பம் விதை, இலுப்பம் விதை, புகையிலை என்பவற்றுக்கு ஏற்றுமதி வரியாக 25 முதல் 50 வீதம் வரி அறவிடப்பட்டது.

மரவரி (Timber)75 வீதம். இது பின்னர் இருபது வீதமாகக் குறைக்கப்பட்டது. பாக்கு 75 வீதம்.

**மீன் வரி**

மீன் குத்தகை மீனவ சமூகத்தைச் சேர்ந்த தலைவர் ஒருவருக்கு வழங்கப்பட்டது.

**நிலவரி**

சாதாரணமாக 20 மரக்கால் நெல் விளையக்கூடிய பிரதேசத்திற்கு 3 பணம் வரியாக அறவிடப்பட்டது. 1832 ஆம் ஆண்டு நிலவரியாக 5221 ஸ்ரேலிங்பவுண் கிடைத்தது. பனைவரி மூலம் 8715 றிக்ஸ் டொலர் கிடைத்தது. 9½ றிக்ஸ் டொலர் ஒரு ஸ்ரேர்லிங் பவுண் எனக் கொல்வின் ஆர்.டி.சில்வா தனது British occupation in Ceylon என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**குதிரை வரி**

நெடுந்தீவில் குதிரை விற்பனை குத்தகை ஆண்டொன்றுக்கு 8750 றிக்ஸ் டொலருக்கு நெடுந்தீவைச் சேர்ந்த இரு சகோதரர்களுக்கு வழங்கப்பட்டது. இவர்களிடமிருந்து குத்தகைப் பணம் கிரமமாக வந்து சேராததால் நோலன் (Nolan) என்ற அதிகாரியைக் குதிரை விற்பனைக்கும் பொறுப்பாகப் பிரிட்டிஷார் நியமித்தனர்.

1829 - 31 காலப்பகுதியில் குதிரை விற்பனை மூலம் 768 ஸ்ரேலிங் பவுண் வருமானம் கிட்டியது. இதைவிடப் பனைவரி, கால்நடை வரி என்பனவும் நெடுந்தீவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பனங்கிழங்கிற்கு ஏற்றுமதி வரி அறவிடப்பட்டது. பிரித்தானியர்கள் நெடுந்தீவில் பருத்திச் செய்கையை அறிமுகம் செய்தனர். எனினும் நெடுந்தீவில் பருத்திச் செய்கை வெற்றியளிக்கவில்லை.

**புகையிலை**

யாழ்ப்பாணப் புகையிலை ஜாவா, சுமத்திரா தீவுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. யாழ்ப்பாணப் புகையிலை வியாபாரத்தின் மீது திருவாங்கூர் அரசர் ஏகபோக ஆதிக்கம் செலுத்தி வந்தார். சராசரியாக ஆண்டு ஒன்றுக்கு 500 றாத்தல் புகையிலை யாழ்ப்பாணத்தில் இருந்து திருவாங்கூர் அரசனுக்கு அனுப்பப்பட்டது. இதன் மூலம் திருவாங்கூர் அரசனுக்கு 5 லட்சம் றிக்ஸ் டொலர் வருமானம் கிடைத்தது. யாழ்ப்பாணப் புகையிலை உற்பத்தியின் 3/5 பங்கு திருவாங்கூர் அரசனால் கொள்வனவு செய்யப்பட்டது. திருவாங்கூர் அரசன் பெருந்தொகைப் பணம் சம்பாதிப்பதை அவதானித்த பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் புகையிலை வரியை அதிகரித்தனர். இதனை அடுத்து திருவாங்கூர் அரசன் தனது கட்டுப்பாட்டில் இருந்த கொச்சின் துறைமுகத்தையும் ஏனைய துறைமுகங்களையும் மூடப்போவதாக அறிவித்தான். திருவாங்கூர் அரசனின் அறிவிப்பைத் தொடர்ந்து தளபதி நொக்ஸ்க்கும் திருவாங் கூர் அரசனின் பிரதிநிதிகளுக்கும் இடையில் பேச்சு வார்த்தை இடம்பெற்றது. இதேவேளை யாழ்ப்பாணப் புகையிலை உற்பத்தியாளர்கள் பிரிட்டிஷாருக்கு புகையிலை வழங்குவதற்கு மறுப்புத் தெரிவித்ததுடன் களவாகத் திருவாங்கூர் அரசனுக்குப் புகையிலையைக் கடத்தினர். பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் ஒன்றும் செய்யமுடியாத நிலை ஏற்பட்டது.

1811 ஆம் ஆண்டு திருவாங்கூர் அரசன் தனக்குகீழ்இருந்த அதிகாரிகள் சிலர் மேற்கொண்ட ஊழல் காரணமாக புகையிலைக் கொள்வனவை மட்டுப்படுத்தினான். நிர்வாகத் திறமையற்ற அல்லது ஊழல் அதிகாரிகளின் நடவடிக்கைகள் காரணமாக திருவாங்கூர் அரசன் புகையிலைக் கொள்வனவை மட்டுப்படுத்தியதைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் புகையிலையின் மீதான திருவாங்கூர் அரசனின் ஏகபோக ஆதிக்கம் அற்றுப் போனது.

*(வளரும்)*

**தாண்டவன்**

---

# இயற்கைக் கிருமி நாசினிகளாகப் பலன் தரும் மரங்களை இனம் கண்டு வளர்த்துப் பயன் கண்டவர் நம்முன்னோர்

**வேம்பு**

வேறு பெயர் - நிம்பம், பிசுமந்தம், சிவை.

தாவரவியற் பெயர் - Azadirachta Indica (அசடிரக்ரா இண்டிக்கா)

குடும்பம் - Meliaceae (மீலியேசியே)

சிங்களப் பெயர் - கொஹொம்ப

சமஸ்கிருதப் பெயர் - நிம்ப

ஆங்கிலப் பெயர் - Margosa tree

வேம்பு அம்பாளுக்கு மிகவும் பிரியமான விருட்ச மாகும். அம்பாள், காளி, மாரியம்மன் கோயில்களில் இது விசேடமாக வளர்த்துப் பாதுகாக்கப்படுகிறது. வேம்பில் சாதாரண வேம்பு, சர்க்கரை வேம்பு, மலைவேம்பு, கரு வேம்பு, நிலவேம்பு, சிவனார் வேம்பு என்று பலவகை உண்டு. இதில் நிலவேம்பும் சிவனார் வேம்பும் செடி வகுப்புக்குரியன. சர்க்கரை வேம்பின் பழங்கள் கசப் புத் தன்மையற்றவை. கருவேம்பைச் சிலர் கறிவேம்பு அதாவது கறிவேப்பிலைமரம் என்று கருதினாலும் அது வேறாகும். மிக அபூர்வமாக அடர்ந்த காடுகளில் காணப்படும் ஒரு மரமே கருவேம்பாகும்.

வேப்பிலை கூட்டிலை வகையைச் சேர்ந்தது. ஒவ்வொரு சிற்றிலைவிளிம்பும் அழுத்தமற்றுக் காணப்படும். மாசி, பங்குனியில் இலையுதிர்ந்து, சித்திரை, வைகாசியில் இளந்துளிர்களும் பூக்களும் உண்டாகும். பூக்கள் வெள்ளைநிறம்.

வேம்பின் இலை, பூ, காய், விதை, பட்டை, பிசின் போன்ற அனைத்துப் பாகங்களும் மருத்துவத்தில் பயன்படுகின்றன.

வேப்பிலை ஒரு சிறந்த கிருமி கொல்லியும், விஷ வாயுக்களை உறிஞ்சக் கூடியதுமாகும். ஒரு தாய் எவ்விதம் தனது குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய துன்பங்களையெல்லாம் தான் ஏற்றுக் கொண்டு, குழந்தைகளுக்கு இன்பத்தைக் கொடுக்கிறாளோ அதுபோல வேப்பிலைகளும் சுற்றாடலில் அசுத்தக் காற்றுக்களையும், கிருமிகளையும் அகத்துறிஞ்சி சுற்றாடலைத் தூய்மையாக வைத்திருக்க உதவுகின்றன. இந்தியாவில் போபால் என்னும் இடத்தில் நச்சுவாயுக் கசிவு ஏற்பட்டுப் பலர் உயிரிழந்த சம்பவம் பற்றி அண்மையில் கூட பத்திரிகைகளில் செய்திகள் வெளி யாகியுள்ளன. அங்கு ஏற்பட்ட விஷ வாயுக்களை அதிகளவில் உறிஞ்சிய மரங்களில் ஒன்றாக வேம்பு விளங்குவதாக ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர்.



அம்மை நோயுற்றவர்களை வேப்பிலையில் படுக்க வைத்தல், வேம்பிலையால் அவரின் உடலைத் தடவுதல். அவரின் அறையில் வேப்பிலை கட்டித் தொங்கவிடுதல், குழந்தையின் தொட்டிலில் வேப்பிலை கட்டிவிடுதல் போன்ற செய்கைகள் அச் சூழலை அசுத்தக் காற்று, அசுத்தக் கிருமிகள் என்பவற்றிலிருந்து பாதுகாக்கும் செயல்களாகும். வேப்பிலைப் புகை நுளம்புகளை விரட்டும் என்பது யாவரும் அறிந்ததே.

## மனிதர்களின் பல்வகைப் பயன்பாடுகளுக்கு தன்னை முழுவதுமாய் தந்துதவும் வேப்பமரம்

வேப்பங்கொழுந்து சிறிதளவில் 2, 3 நாள்கள் சாப்பிட்டுவர குடற்கிருமிகள் அழியும். வேப்பிலைச் சாற்றையும் 1 - 2 தேக்கரண்டி வீதம் பருகினாலும் இவை நீங்கும்.

வேப்பிலையைத் தனித்து அல்லது சிறிது மஞ்சள் சேர்த்து அம்மியில் பசுந்தாக அரைத்துக் கரப்பன், சொறி, சிரங்கு போன்றவற்றில் பூசிவர அவை மாறும். வேப்பிலை அவித்த நீரினால் தோற்புண்களைக் கழுவிச் சுத்தம் செய்யலாம். இவ்வேப்பிலையின் நடு நரம்பு வேப்பங்கூர் அல்லது வேப்பங்கூர் எனப்படும். இது குழந்தைகளுக்கு ஏற்படும் மாந்தம், குடற்புழுக்களை நீக்கவல்லது.

உத்தமாகாணி என்னும் வேலிப்பருத்தியிலையின் நரம்பு, நொச்சியிலை நரம்பு; மஞ்சவண்ணா இலை நரம்பு, வேப்பீர்க்கு, வசம்பு, உள்ளி, வேர்க்கொம்பு, கடுக்காய் என்பவற்றைச் சம அளவில் எடுத்துக் கருக வறுத்துக் குடிநீர் செய்து 5 - 10 மி.லீ.அளவில் காலை, மாலை மூன்று நாள் கொடுத்துவர குடற்புழுக்கள், மந்தம் நீங்கும்.

வேப்பம் பூ கிருமிகளை அழிக்கும். இரத்தத்தில் கொலஸ்ரோலின் அளவைக் குறைப்பதாகவும், உடலை மெலியச் செய்யவல்லதாகவும் உள்ளது. வேப்பம் பூவை உலர்த்திப் பொடி செய்து சோற்றுடன் சேர்த்துச் சாப்பிட்டு வரலாம். வேப்பம் பூவையும், கரிசலாங் கண்ணி இலையையும் உலர்த்திப் பொடி செய்து தினமும் உண்டு வந்தாலும் நன்மை கிடைக்கும். வேப்பங்காயை உலத்திக் கொட்டையை நீக்கிப் பொடி செய்து 2-3 கிராம் அளவில் தினம் இருமுறை சாப்பிட்டுவர முறைக் காய்ச்சல் நீங்கும்.

நன்கு முற்றிய வேப்பம் பட்டையைக் குடிநீர் செய்து 10-15 மி.லீ. அளவில் தினம் இருவேளை குடித்து வந்தாலும் முறைச்சுரங்கள், நாட்பட்ட சுரங்கள் மாறும்.

வேப்பம் பட்டையை அவித்த நீரினால் புண்களைக் கழுவிவர அவை மாறும்.

வேப்பம்பட்டை, மாவிலங்கைப்பட்டை, பருத்தியிலை, சிற்றாமணக்கிலை, நொச்சியிலை, பாவட்டையிலை என்பவற்றை ஊறவைத்து அவித்து பிரசவித்த பெண்களுக்குக் குளிக்க வார்ப்பது எமது பாரம்பரிய வழக்கமாகவுள்ளது. இங்கு வேப்பம் பட்டை கிருமி கொல்லிச் செய்கையையும், நொச்சியிலை, பாவட்டையிலை என்பன பாற்பெருக்கிச் செய்கையையும், நொச்சியிலை, மாவிலங்கைப் பட்டை என்பன உடல்வலியைப் போக்கும் விதத்திலும் செயற்படுவது குறிப்பிடத்தக்கது.

வேப்பம் விதையிலிருந்து எடுக்கப்படும் வேப்பெண்ணெயானது கரப்பன், சொறி, சிரங்கு, முதலியவைகளை மாற்றவல்லது. மிகவும் நாட்பட்ட வேப்பமரத்தின் பட்டை வெடித்து வடியும் திரவம் வேப்பம் கள் எனப்படும். இது உடலுக்கு வன்மையைக் கொடுப்பதுடன் நாட்பட்ட சுரங்கள், வளிநோய்கள், மேகநோய் என்பவற்றையும் போக்கும்.

*(தொடரும்)*



Dr.சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.
தொ.பே: 0212226944
எமது ஸ்தாபனம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பிறிமா நிறுவனத்தால்
உரிமை பெற்ற நிறுவனம் எங்கள் நிறுவனம்.
சகல விதமான கால்நடைத் தீவனம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
கால்நடை மருந்து வகைகளும் பிறிமா பேட்டுக்குஞ்சு புறொயிலர் குஞ்சுகளும் (விசேட கழிவு விலையில்) பெற்றுக் கொள்ளவும். வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.
(வன்னி மாவட்டத்தில் எமக்குக் கிளை நிறுவனம் இல்லை என்பதை அறியத்தருகின்றோம்).

## 31ஆம் நாள்அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 13 ★ 02 ★ 1943



உதிர்வு 21 ★ 06 ★ 2010

கடந்த 21.06.2010 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

### அமரர் மகேஸ்வரி சிவகுரு

*அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நாளை [19.07.2010] திங்கட்கிழமை வில்லூன்றி புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வு 21.07.2010 புதன் கிழமை அன்னாரின் இல்லத்திலும் நடைபெற உள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

(இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

3ஆம் வட்டாரம், புங்குடுதீவு. குடும்பத்தினர்.

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், வயது 30 (5'8"), மூலம் 1ஆம் பாதம், பாவம்26, இலக்கினத்தில் செவ்வாய் உள்ள, சிங்கப்பூரில் Civil Engineer (B.Sc,M.Sc) ஆகப் பணிபுரியும் மணமகனுக்கு அழகிய படித்த மெல்லிய மணமகள் தேவை.

தொடர்பு
021-3213117,021-2270055

## மணமகள் தேவை

பூசம், 8இல் செவ்வாயும், சந்திரனும் ராகுவும், யாழ். இந்து கௌரவ குடும்பம், 1981 இல் பிறந்த, B.B.A (F.M) Hons, D.B.F, CIMA Part II முடித்து தொடர்ந்து CIMA Part III, M.B.A (F) (J'Pura) படிக்கும் கொழும்பில் பிரபல நிதி நிறுவனத்தின் Accountant ஆகவும் Asst.Manager (F) ஆகவும் பணிபுரியும் வெள்ளைநிறம், உயரம் 5' 6" நற்குணம் கொண்ட மணமகனுக்கு பெற்றோர் பொருத்தமான மணமகளை எதிர்பார்க்கிறார்கள். முழு விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பொருந்தாத சாதகக்குறிப்பும், விவரங்களும் கண்ணியமான முறையில் திரும்ப ஒப்படைக்கப்படும்.

தொடர்பு: விளம்பர இல: 4043
மே/பா உதயன்

## விற்பனைக்குண்டு

கடைக்குத் தேவையான பாவித்த அலுமாரி, றாக்கி, தராசு, கண்ணாடிப் பெட்டிகள், வெற்று சோடாப் போத்தல்கள் மலிவு விலைக்கு நல்லூரில் விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு : 0789369742

## உதைபந்தாட்ட அரையிறுதியாட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

தியாகிகள் தினத்தை முன்னிட்டு பத்மநாபா ஈ.பி.ஆர்.எல். எவ் அமைப்பு நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் மாலை 4.15 மணிக்கு இடம்பெறும் அரையிறுதி ஆட்டத்தில் பாடுமீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம் மோதுகிறது. (6-23)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### இராமசாமி றுக்மணி

தாயின் மடியில் 27★07★1922

மண்ணின் மடியில் 27★07★2009

## 28ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### இராமசாமி பாலச்சந்திரன்

தாயின் மடியில் 18★11★1942


மண்ணின் மடியில் 14★03★1982

என்றென்றும் மறக்கமுடியாத எமது அன்புத் தெய்வங்களுக்கு எமது இதய அஞ்சலியைத் தெரிவிக்கின்றோம்.

[சி/569304] குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா சிவகுமார்



மட்டுவில் வடக்கு, சந்திரபுரம், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவகுமார் 09.07.2010 வெள்ளிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் கந்தையா-வாமதேவி தம்பதியரின் அன்பு மகனும், மங்கையர்க்கரசி (சுவிஸ்), நிர்மலா (ஜேர்மனி), பாசமலர் (கனடா), உதயகுமார், இராஜகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சுந்தரலிங்கம் (சுவிஸ்), சுதாகர் (ஜேர்மனி), இலங்கேஸ்வரன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் விதுஷன், சதுஜா, நதியா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.07.2010) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும். அன்றைய தினம் அவரது மட்டுவில் இல்லத்தில் பி.ப. 1.30 மணி தொடக்கம் 3 மணிவரை அஞ்சலி நிகழ்வுகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*மட்டுவில் வடக்கு, சந்திரபுரம், சாவகச்சேரி.* (100692)
சி.கந்தையா ஆச்சாரியார் (தந்தை)
க.வாமதேவி (தாய்).

### அன்ரனி பெர்னாண்டோ ஆகத்தம்மா (வேவி)



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது மாதகலை வசிப்பிடமாகவும் கொண்ட ஆகத்தம்மா (வேவி) நேற்று (17.07.2010) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்தியா இராயப்பு (மூப்பர்)- கத்தரீனா பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தோமஸ் அன்ரனி பெர்ணாண்டோவின் (கிளாக்கர்- முன்னாள் இலிதர், யா/புனித பத்திரிசியார் கல்லூரி) அன்பு மனைவியும் பிரான்சீஸ் (இளைப்பாறிய ஆசிரியர், யா/புனித பத்திரிசியார் கல்லூரி), அல்பேர்ட் திலகர் (மாதகல், விசுவமடு), கிறேஸ் (பிரான்ஸ்), பிலிப் அரசன் (கனடா), குயின்ரஸ் (கனடா), அருட்திரு பெனற் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தாயாரும், சிங்கராயர் சூசைதாசர் (பாஷையூர், பிரான்ஸ்), கிப் போலிற்றா பிரான்சீஸ் (இளைப்பாறிய ஆசிரியை, குருநகர் சென்.ஜேம்ஸ் ம.வி.), சசிகலா(மாதகல்), றெஜீனா (கனடா), ராஜினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் றுவான்சன், எமேர்சன், சொபியா, பியூஜினி, றியாண்சன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி அஞ்சலித் திருப்பலி நாளை (19.07.2010) திங்கட்கிழமை பி.ப.3 மணிக்கு மாதகல் புனித தோமையார் ஆலயத்தில் இடம்பெற்று தோமையார் ஆலய சேமக் காலையில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*கனால வீதி, மாதகல்.* (101104)
பெ.பிரான்சீஸ் (இளைப்பாறிய ஆசிரியர்-மகன்).

## வடக்கு உள்ளூராட்சி சபைகளில் ஆதன மதிப்பீடு

கொழும்பு, ஜூலை 18

வடக்கில் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள 34 உள்ளூராட்சி சபைகளில் ஆதன மதிப்பீட்டு நடவடிக்கைகள் இடம் பெறவுள்ளன என மதிப்பீட்டுத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

இம்மாதம் 26 ஆம் திகதி இந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட உள்ளன எனத் தெரிய வருகிறது.

யுத்தம் காரணமாக 3 தசாப்தங்களாக இம்மாவட்டங்களில் வரி மதிப்பீட்டு நடவடிக்கைகள் இடம்பெறவில்லை. எனினும் அக்காலப்பகுதியில் 60 சதவீத வரி வருமானம் இழக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-சி)

## 50குடும்பங்களுக்கு மலசலகூடம்

நாவற்குழி, ஜூலை 18

மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் வலி. கிழக்கு-கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 50 வறிய குடும்பங்களுக்கு மலசலகூடம்அமைக்கும் பணியை மேற்கொண்டுள்ளது.

அத்துடன் புத்தூர் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் 60 பேருக்கும், அச்செழு கிராம அலுவலர் பிரிவில் 15 பேருக்கும் விதை வெங்காயத்தை விவசாயிகளுக்கு வழங்கி உள்ளது.

## மரண அறிவித்தல்

### மயில்வாகனம் தற்பரநாதன்

(தற்பரன்/நாதன்)



வசாவிளான், தெற்கைப் பிறப்பிடமாகவும், புன்னாலைக்கட்டுவன் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் தற்பரநாதன் நேற்றுமுன்தினம் (16.07.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-சாவித்திரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-சத்தியபாமா தம்பதியரின் அன்பு மருமகனும் பரமானந்தியின் (ஆனந்தி) அன்புக் கணவரும் சரவணனின் (யாழ்.பரியோவான் கல்லூரி, ஆண்டு 11 மாணவன்) அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, சுரேந்திரநாதன் மற்றும் பத்மநாதன், சத்தியநாதன், மகேஸ்வரி, ஞானேஸ்வரி, ஜெகநாதன், நிர்மலேஸ்வரி, இராஜேஸ்வரி, யோகேஸ்வரி, வித்தியேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் யுகானந்தன், காலஞ்சென்ற ஜீவானந்தன் மற்றும் தமயந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.07.2010) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12 மணியளவில் அவரின் புன்னாலைக்கட்டுவன் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக விலங்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புன்னாலைக்கட்டுவன் தெற்கு, புன்னாலைக்கட்டுவன். 0212240825.* [101101]

தகவல்:
மனைவி, மகன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# அல்சரை விரட்டும் பச்சை வாழைப்பழம்

உங்கள் குடல்களில் சுரக்கும் அமிலங்களும் நச்சுப் பொருள்களும் அரிப்பதன் காரணமாக குடல் புண் என்கிற அல்சர் ஏற்படுகிறது. பச்சை வாழைப்பழத்தை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் இந்தப் பாதிப்பில் இருந்து விடுபடலாம்.

குடல்களில் பழுதுபட்ட மெல்லிய சவ்வுத் தோல்களைச் விரைவில் வளரச் செய்து புண்ணை ஆற்றிவிடும் சக்தி பச்சை வாழைப்பழத்திற்கு உண்டு.



வெண்டைக்காய் விதையைக் கொஞ்சம் பார்லி கஞ்சியில் போட்டு காய்ச்சி மூன்று நாள் வரை சாப்பிட்டு வந்தால் சிறுநீர் கழிக்கும் போது ஏற்படும் எரிச்சல் இல்லாமல் போகு உணவு சாப்பி வதற்கு 1/2 மணி நேரத்திற்கு முன்னதாக தினசரி அரைத் தேக்கரண்டி ஒலிவ் எண்ணெய்யைப் பருகி வந்தால், குருதிக் குழாயில் கொழுப்பு படிவதைத் தடுக்கலாம்.

வாய்ப் புண் உள்ளவர்கள் காரத்தன்மையான உணவுகள் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும் . தேங்காய்த் துண்டுகளைச் சாப்பிட்டு வந்தால் எளிதில் வாய்ப்புண் ஆறும். ஜாதிக்காயைச் சிறு சிறு துண்டுகளாகச் சீவி அதை நெய்விட்டு வறுத்து சாப்பிட்டு வந்தால் சீதபேதி குணமாகும். இதற்கு சிகிச்சை மேற்கொள்ளும் போது தயிர், மோர், இளநீர் ஆகியவற்றை மட்டும் அதிகமாகச் சேர்த்துக் கொள்வது நல்லது. இரவில் நித்திரைக்குப் போகும்முன் வெந்நீரில் சிறிது தேன் கலந்து அந்த நீரில் வாயைக் கொப்பளித்து வந்தால் பற்களுக்குத் தொந்தரவு கொடுக்கும் பக்ரீரியாக்கள் இறந்து போகும். பற்களின் எனாமல் சிதையாமல் பாதுகாக்கப்படும்.★★★






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளுக்கு உண்டான மார்புச்சளி நீங்க;

சிறு குழந்தைகளுக்கு மார்பில் சளி கட்டிக்கொண்டு இறுகிப்போயிருக்கும். இதனால், குழந்தைகளுக்கு அடிக்கடி மூச்சு விட முடியாமல் திணறுவார்கள். சில சமயங்களில் இது ஆஸ்துமா, காசநோயாக கூட மாற நேரிடும். இவர்களுக்கு கற்பூர வள்ளி இலையையும், துளசி இலையையும் சம அளவு எடுத்து சுத்தம் செய்து, லேசாக வதக்கிச் சாறு எடுத்து, 5 மி.கி. அளவு தினமும் காலை வேளையில் கொடுத்து வந்தால், மார்புச்சளி முற்றாக நீங்கும்.

கற்பூரவள்ளி இலை, தூதுவளை, வல்லாரை, இவற்றை சம அளவு எடுத்து தூளாக்கி அதில் 1 கரண்டி அளவு எடுத்து 100 மி.லி தண்ணீர் விட்டு கொதிக்க வைத்து 50 மி.லியாக சுண்டக் காய்ச்சி, அதனுடன் சிறிது பனங்கற் கண்டு கலந்து பருகி வந்தால், நுரையீரல் பாதிப்பு நீங்கும். மூச்சுக்குழல் அடைப்பு சீராகும் . கற்பூரவள்ளிச் சாறு எடுத்து அதனுடன் தேன் கலந்து காலை வேளையில் அருந்தி வந்தால் மூக்கில் நீர்வடிதல், சளி, இருமல், தொண்டைக் கட்டு, தொண்டைக் கம்மல் குணமாகும். கற்பூரவள்ளி உடலை நோயின்றி காப்பது போல், வீட்டையும் விஷப் பூச்சிகளிலிருந்து காப்பாற்றும்.

இதனை தொட்டிகளில் வளர்த்து அதன் முழுமையான பயன்களைப் பெற்று நீண்ட ஆரோக்கியத்துடன் வாழ்வோம். ★★★












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொமர்ஷல் வங்கியில் அருணலு கணக்கு வைத்திருக்கும் 2009 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் சித்தியடைந்த சிறுவர்கள், ரூபா 30 இலட்சம் வரை வென்றுள்ளார்கள்.









தமது பிள்ளைச் செல்வங்களின் கல்வி முன்னேற்றத்தினை கருத்தில் கொண்டு "பரீட்சைகளில் சித்தியடையும் சிறுவர்களுக்கு பெறுமதி மிக்க பரிசுகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில்" பல பெற்றோர்கள் வாக்களிக்கின்றனர். அவ்வாறு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு, பெறுமதி மிக்க சிறந்த பரிசுகளை வழங்கி கல்வியில் முன்னேற்றுவதற்கு மிகவும் பலம் வாய்ந்த உள்நாட்டு நிதி நிறுவனம் முன்வந்துள்ளது. ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் "குளோபல் பினான்ஸ்" மூலம் தொடர்ச்சியாக 12 வருடங்கள் "இலங்கையின் மிகச்சிறந்த வங்கி" என்ற விருதைப் பெற்ற கொமர்ஷல் வங்கியே அந்த பெரும் வாய்ப்பினை வழங்கும் நிறுவனமாகும்.

திறமையான மாணவர்களையும் தோல்வியடைந்தவர்களாக மாற்றும் லொத்தர் முறைகளில் இருந்து விலக்கி, சகல பாடசாலைகளிலும் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் திறமைகளை வெளிக்காட்டும் மாணவர்களுக்கும் வெற்றிக்களிப்படைந்து மகிழ்ந்து கொள்ளும் சந்தர்ப்பத்தை வழங்குகிறது. அருணலு கணக்கு வைப்பாளர்களில் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு பணப் பரிசு வழங்கும் திட்டத்தை கொமர்ஷல் வங்கி 1998 ஆம் ஆண்டில் ஆரம்பித்தது. 2005 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பெற்ற 164 மாணவர்களுக்கு ரூபா 1,350,000 வும், 2006 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பெற்ற 170 மாணவர்களுக்கு ரூபா 1,400,000 வும், 2007 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பெற்ற 353 மாணவர்களுக்கு ரூபா 3,014,500 வும், 2008 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பெற்ற 338 மாணவர்களுக்கு 2,930,471 ரூபாவும், வழங்கப்பட்டது. 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அருணலு கணக்கு வைப்பாளர்களில் 350 மாணவர்கள் கொமர்ஷல் வங்கியின் அதிகூடிய பரிசுத் தொகையாக 2,963,337 ரூபாவை இவ்வாண்டில் பெற்றுள்ளனர்.

சகல பாடசாலைகளிலும் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் அருணலு கணக்கு வைத்திருக்கும் மாணவர்களின் கணக்கில் ஆகக்குறைந்த தொகையாக ரூபா 5,000 கணக்கில் இருப்பின் அவர்கள் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் முறையே, முதலாமிடத்திற்கு 10,000 ரூபாவும், இரண்டாமிடத்திற்கு 7,500 ரூபாவும், மூன்றாமிடத்திற்கு 5,000 ரூபாவும் வழங்கப்படும்.

அத்துடன், 2007 ஆம் ஆண்டு முதல் வெற்றி பெற்ற எந்தவொரு மாணவரும் தனது மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெறும் சந்தர்ப்பத்தில் அவரின் அருணலு கணக்கின் மிகுதி தொகையானது இரட்டிப்பாக்கப்படுவதுடன் ஆகக்கூடிய தொகையாக ரூபா. 50,000 மட்டுமே அதிகரிக்கப்படும்.

கல்வியின் முக்கியத்துவத்தை அழுத்தமாக எடுத்துக்கூறும் சமூக பொறுப்புமிக்க நிறுவனமாக உபசரணைப் பங்களிப்பைச் செய்வதையிட்டு கொமர்ஷல் வங்கி பெருமை அடைவதாகவும், கஷ்ட பிரதேசத்தில் பயிலும் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் மாணவர்களும் பயன் பெறுவதானது, பெருமை தருவதாகவும் வங்கியின் பிரதான பொது முகாமையாளர் திரு. ரவி டயஸ் குறிப்பிடுகிறார்.

கொமர்ஷல் வங்கியின் அருணலு சேமிப்புக் கணக்கானது பிள்ளைகளின் கல்வி ஆற்றலை விருத்தி செய்து, சேமிப்பு நற்பழக்கதை வழக்கப்படுத்துவதை முக்கிய நோக்காக கொண்டு 1998 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அருணலு கணக்கை நாடு முழுவதும் உள்ள கொமர்ஷல் வங்கிக் கிளைகளிலும் மற்றும் தெரிவு செய்யப்பட்ட சுப்பர் மார்க்கட் வங்கிச் சேவை நிலையங்களிலும் ரூபா 100/- வைப்புச் செய்வதன் மூலம் ஆரம்பிக்க முடியும்.

அருணலு
சிறுவர் சேமிப்புக் கணக்கு

COMMERCIAL BANK

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோய்தீர்க்கும் மூலிகை கரிசலாங்கண்ணி!

கரிசலாங்கண்ணி மூலிகைக் கீரைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே மருத்துவத்தில் மிகச் சிறப்பான இடம் இருந்தது. கரிசலாங்கண்ணி கரிசாலை, அரிப்பான் பொற்கொடி போன்ற பெயர்களால் வழங்கப்படுகிறது. கரிசலாங் கண்ணிக் கீரையில் தங்கச் சத்து, இரும்புச்சத்து, விற்றமின் ஏ அதிகம் உள்ளன. கரிசலாங்கண்ணியை எளிய முறையில் உபயோகித்தாலே பல நன்மைகளை அடையலாம். வாரத்துக்கு இரண்டு நாள், கீரையைச் சமையல் செய்து சாப்பிட்டாலும் இதன் சாற்றை 100 மில்லியளவு சாப்பிட்டு வந்தாலும், உடலுக்கு எந்த நோயும் வராமல் நோய் எதிர்ப்புத் தன்மை உண்டாகும். பல கொடிய நோய்களில் இருந்து பாது காத்துக் கொள்ளலாம். மஞ்சள் காமாலை முதல் அனைத்து வகையான காமாலை நோய்களுக்கும் மிக முக்கியமானது கரிசலாங் கண்ணிக் கீரையாகும்.



**மஞ்சள் காமாலைக்கு:**

கரிசலாங்கண்ணி இலையைப் பறித்து சுத்தம் செய்து நன்றாக அரைத்து இரண்டு சுண்டைக்காய் அளவில் எடுத்து பாலில் கலந்து வடிகட்டி காலை, மாலை சாப்பிட வேண்டும். சிறுவர்களுக்கு மூன்று நாள்கள் கொடுத்தால் போதுமானது. பெரியவர்களுக்கு ஏழு நாள்கள் கொடுக்க வேண்டும். மருந்து சாப்பிடும் காலத்தில் உப்பில்லாப்பத்தியம் இருக்க வேண்டும். நோய் நீங்கிய பின், ஆறு மாதம் வரை எளிதில் சமிபாடடையும் உணவு சாப்பிட வேண்டும்.

**ஆஸ்துமா குணமாக:**

கரிசலாங்கண்ணிச் சூரணத்தை நான்கு மாசத்துக்கு ஒரு பாகம் திப்பலிச் சூரணம் சேர்த்து காலை, மாலை ஒரு தேக்கரண்டி தேனில் குழைத்து ஒரு மாத காலம் சாப்பிட்டு வந்தால் ஆஸ்துமாவின் தொல்லை குறையும். கல்லீரல் செயற்பாட்டின் குறைவினால் ஏற்படும் குருதிச் சோகை நோய்க்கு கரிசலாங்கண்ணிச்சாற்றை 100 மில்லியளவு தினந்தோறும் சாப்பிட்டு வந்தால் சில தினங்களில் குருதிச் சோகை நீங்கி விடும். குருதியில் உள்ள அமிலத்தன்மை சீராகச் செயற்படும்.

**இரத்தசோகை நீங்கி நல்ல ரத்தம் உண்டாக:**

இரத்தசோகை நோய்க்கு கரிசலாங்கண்ணி ஒரு பங்கும், வெல்லம் இரண்டு பங்கும், எள் ஒரு பங்கு வீதம் தேவைக்கு ஏற்ப சேகரித்து வைத்துக் கொண்டு, வெல்லத்தைப் பாகாக்கி மற்ற இரண்டு பொருள்களையும் பொடி செய்து சேர்த்துக் கிண்டி, கேக் வடிவில் தயாரித்து, பள்ளிக் குழந்தைகளுக்குத் தினமும் கொடுத்து வந்தால், குழந்தைகளுக்கு நல்ல ரத்தம் உண்டாகும்; நினைவாற்றல் அதிகரிக்கும்.

**பல் உறுதிக்கு!**

கரிசலாங்கண்ணி இலையை பல் துலக்கப் பயன்படுத்தினால், பற்கள் உறுதியாகும். ஈற்றில் உள்ள நோய்க் கிருமிகள் அழிந்து ஈறுகள் பலப்படும். தொண்டைச் சளி வெளியேறி விடும்.

**நாள்பட்ட புண் ஆற...**

கரிசலாங்கண்ணி மிகச் சிறந்த கிருமி நாசினியாக இருப்பதால் அழுகும் நிலையில் உள்ள புண்கள், வெட்டுக் காயங்களுக்கு இலையை அரைத்து சாறு பூசினாலும், புண்கள் மேல் வைத்துக் கட்டினாலும் மிக விரைவில் புண்கள் ஆறிவிடும். கரிசலாங்கண்ணியை உணவாகவோ மருந்தாகவோ பயன்படுத்தினால், அறிவு விருத்தியாகும். ★
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக நாடுகளுக்குப் புலம் பெயர்ந்த தமிழர்களால் பலப்பல தேசங்களில் தமிழ் அறியப்பட்ட மொழியாகிற்று

**கடந்த ஜூன் மாதம் 23 ஆம் திகதிமுதல் 27 ஆம் திகதிவரை தமிழ் நாடு, கோவையில் நடந்த உலக செம்மொழி மாநாட்டில் இடம்பெற்ற சிறப்புக் கலந்துரை அரங்கத்தில் "உலக நாடுகளில் தமிழும் தமிழரும்" என்ற தலைப்பில் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் ஆற்றிய உரை இங்கு பிரசுரமாகிறது.**

**1**

தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் 'உலக நாடுகளில் தமிழும் தமிழரும்' என்ற விடயம் பற்றிய கலந்துரையரங்கம் ஒன்று இன்றியமையாதது எனலாம். உலக நாடுகளிலிருந்து தமிழரும் பிறமொழியாளரும் ஒன்று கூடும் இத்தகைய மாநாட்டில் கருத்துப்பரிமாற்றம் செய்வது எல்லோரது சிந்தனையையும் தூண்டுவதாக அமையும். பல ஆய்வாளர்கள் வந்து சேருமிடத்தில் கருத்துக்களைப் பரிமாறுவது உடனடியாகத் தெளிவை ஏற்படுத்த வல்லது. அந்த வகையில் இந்தக் கலந்துரையரங்கத்தில் நாம் கருத்துப் பரிமாற்றம் செய்வது பயனுடையதாகும்.

இன்று உலகிலே ஏறக்குறைய 50 நாடுகளில் சென்று குடியேறி 70 மில்லியன் தமிழர் வாழ்கின்றனர். தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் தமி ழர் என்ற அடையாளத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பல்வேறு நாடுகளில் அவர்கள் சிதறிக்கிடந்தாலும் தமிழ்மொழி யால் ஒன்றிணையக் கூடிய வர்களாய் உள். அதற்கு இம் மாநாடே நல்ல சான்றாகும். மேலும் பிறமொழியாளர்களையும் தமிழ் பற்றியறிய வைக்க இம்மாநாடு பேருதவி புரிந்துள்ளது என்பதில் ஐயமில்லை. எனவே இதனைப்பற்றி ஆழமாகவும் நோக்க வேண்டியுள்ளது.

**தமிழர் குடியேற்றம்**

தமிழர் குடியேற்றம் உலக நாடுகளில் பல்வேறு காரணங்களால் ஏற்பட்டுள்ளது. முதற்குடியேற்ற நிலையில் கரும்புத் தோட்டத்தில் கூலித் தொழிலாளர்களாக மொறீசியஸ் தீவுக்கும், புகையிலைத் தோட்டத் தொழிலாளராக கறீபியன் (CARIBBEAN) தீவுக்கும் றப்பர் தோட்டத் தொழிலாளராக மலேசியாவுக்கும், கோப்பி, தேயிலைத் தோட்டத் தொழிலாளராக இலங்கைக்கும், சுரங்கத் தொழிலாளராக கலடோனியா (CALEDONIA) வுக்கும் புகையிரதத், தொழிலாளராக ரங்கூன், சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கும் தமிழர் சென்றுள்ளனர். தாம் வாழ்ந்த இடங்களை விட்டு இவர்கள் சென்றமை பொருள்

ii. இந்தோனேசியா:

இங்கு ஏறக்குறைய 50,000 தமிழர் முன்னர் இருந்துள்ளனர். ஒல்லாந்தரால் தோட்டத்தொழிலுக்காக 1830களில் கூட்டிச் செல்லப்பட்டவர்கள். அங்குள்ள நிலைமை சரியில்லாமையால் 1940இல் பலர் தாயகம் திரும்பிவிட்டனர். 2000-10,000 வரை வட சுமத்திராவில் வாழ்ந்தனர். அங்கு இந்துக் கோயில் அமைத்துத் தமிழர் பண்பாட்டையும் பரப்பியுள்ளனர்.

iii. சிங்கப்பூர்

இங்கு ஏறக்குறைய 200,000 தமிழர் வாழ்கின்றனர். மூன்றாவது பண்பாட்டுக் குழுவாக அந்நாட்டில் விளங்குகின்றனர். தமிழைத் தாய் மொழியாகக் கொண்டுள்ளார்கள். முதல் நிலைக் கல்வியிலிருந்து பல்கலைக் கழகம் வரையும் இங்கு தமிழ் ஒரு பாடமாகக் கற்பிக்கப் படும் நிலையுள்ளது. பல இந்துக் கோயில்கள் கட்டப் பட்டுப் பண்பாடும் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. தொழில் நுட்ப, தொடர்பாடல், அச்சு, கலை போன்ற துறைகளிலும் தமிழ் மொழியின் பயன்பாடு உள்ளது. கணனியைத் தமிழ்மொழியால் கையாளும் தொழில் நுட்பத்தில் சிங் கப்பூர்தமிழர் முன்னணியில் நிற்கின்றனர். பாடசாலைக் கல்வியின் பயிற்று மொழியாக ஆங்கிலம் இருப்பதால் சிங்கப் பூர்த் தமிழர் இரு மொழிப் புலமையாளராக விளங்குகின்றனர்.

iv. மலேசியா

இங்கு 1901இலிருந்து ஏறக்குறைய 1,060,000 தமிழர் வாழ்கின்றனர். முதலில் றப்பர் தோட்டத் தொழிலாளராகவும் புகையிரதத்தொழில் துறையில் பணிசெய்வோராகவும் சென்ற தமிழர் தாய் மொழியான தமிழ்மொழியோடு மலே மொழியையும் கற்று முன்னேறியுள்ளனர்.

மிகக் குறைந்த தொகையினரே உள்ளனர்.

**ஆபிரிக்க நாடுகளில் தமிழர் பரம்பல்**

i. மொறீசியஸ் தீவு

இங்கு ஏறக்குறைய 115,000 தமிழர் உள்ளனர். தென்னிந்தியாவில் தமிழ் நாட்டில் இருந்து வந்து குடியேறியவரே பலர். முதன்முதலில் தமிழர் குடியேற்றம் 1727களில் நடைபெற்றுள்ளது. கரும்புத்தோட்டத் தொழிலாளராகவே பலர் வந்தனர். 1847 களில் பிற தொழில்களில் ஈடுபடும் வாய்ப்புப் பெற்றனர். தமிழ்க் கல்விக்கெனப் பாடத்திட்டங்கள் வகுக்கப்பட்டு பயிற்சி நடைபெற்றது. ஏறக்குறைய 250 கோயில்கள் உள்ளன. முருக வழிபாடு பிரபல்யம் பெற்றுள்ளது. தமிழ்ப்புத்தாண்டு, தைப்பொங்கல், தீமிதிப்பு, திருவள்ளுவர்தினம், பாரதிதினம், தீபாவளி, தைப்பூசம், சிவராத்திரி என்பன பண்பாட்டு விழாக்களாகக் கொண்டாடப்படுகின்றன. இவற்றுள் சில விழாக்களுக்கு அரசாங்க விடுறைகளும் வழங்கப்படுகின்றன. 100 முதல் நிலைப்பள்ளிகள் தமிழைப் பயிற்றுகின்றன. இலங்கையிலும் யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற பிராமணரால் கோயில் வழிபாட்டு நடைமுறைகள் செயற்படுத்தப் படுகின்றன. 1948இல் தமிழர் அரசியல் நிலையிலும் பங்கேற்கும் வாய்ப்புப் பெற்றனர். வங்கி நோட்டுக்களில் தமிழிலும் எழுதப்படும் நிலை ஏற்பட்டது. உலகத் தமிழராய்ச்சி மாநாடும் இங்கு நடத்தப் பட்டுள்ளது. இரண்டாவது உலக முருகன் மாநாடும் நடைபெற்றுள்ளது. தமிழ்மொழியும் தமிழர் பண்பாடும் நிலைக்களனாக விளங்கும் தகுதியை இந்நாடு பெற்றுள்ளது.

ii. றீயூனியன் (REUNION)

இந்து மகா சமுத்திரத்தில் பிரெஞ்சுக் காரரின் நிர்வாகத்தில் இருந்த இத்தீவில் 1848களில் தமிழர் குடியேற்றம் நடைபெற்றுள்ளது. சிறப்பாகப் புதுச்சேரி, காரைக்காலைச் சேர்ந்தவரே குடியேறியுள்ளனர். அங்கு அப்போது பிரஞ்சு நிர்வாகமிருந்தமை இக்குடியேற்றத்திற்கு மிகவும் வாய்ப்பாக இருந்தது. ஏறக்குறைய 120,000 தமிழர் வாழ்கின்றனர். பல சமூகசேவை நிறுவனங்களும் தொண்டர் அமைப்புகளும் தமிழ்ப் பண்பாட்டின் நிலைப்பேற்றிற்கும் ஒருங்கிணைப்புக்கும் உதவுகின்றன. முருகவழிபாடு

# பண்பாடும் தமிழ்ப் புலமையும் அந்தந்த நாடுகளில் ஓங்கி வளர்கின்றன

தேடல் நோக்கமாகவே நடைபெற்றுள்ளது. 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்ற நிலையில் மக்கள் சென்றுள்ளனர். இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் தமிழர் இவ்வாறு உலக நாடுகளில் சென்று குடியேறியபோது அவர்கள் தாய் மொழியாக இருந்த தமிழ் மொழியும் அந்தந்த நாடுகளில் அறியப்பட்ட மொழியாகிற்று.

இருபதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் உலகம் எங்கும் ஏற்பட்ட மாற்றங்கள் தமிழரது உலக நாட்டுப் பரம்பலைத் துரிதமாக்கிற்று. பொருள் தேட்டத்திற்காக மட்டுமன்றி உயிரைப் பாதுகாப்பதற்காகவும் தமிழர் தமது நிலையான வாழ்விடங்களை விட்டுப் பெருமளவில் புலப் பெயர்ச்சிக்குள்ளாகினர். இவ்வாறு சென்றோரது தொகை முன்னர் தொழில் நிலையில் கூலிகளாகச் சென்றவர் தொகையை விடப் பெரியதாக இருந்தது. அரசியல் தஞ்சம் கோரிப் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் குறிப்பாக இலங்கையில் இருந்து பிரித்தானியா, கனடா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு லட்சக் கணக்கானோர் சென்றனர். இணையத்தளச் செய்தியொன்று உலக நாடுகளில் பரவியுள்ள தமிழர் தொகையை வருமாறு குறிப்பிட்டுள்ளது.

பிரித்தானியா - 300,000
அமெரிக்கா - 300,000
கனடா - 300,000 க்கு மேல்
அவுஸ்திரேலியா 30,000

இந்த நாடுகளுக்கு தன்னிச்சையாகவும் அரசியல் தஞ்சம் கோரியும் அகதிகளாகவும் சென்றதாக அச் செய்தி மேலும் குறிப்பிட்டுள்ளது. ஐரோப்பிய நாடுகளுக்கும் பல்லாயிரக்கணக்கானோர் சென்றுள்ளனர். இப்பரம்பல் நிலையைப் பற்றி மேலும் சற்று விளக்கமாகக் கூறுவது பயனுடையதாகும்.

**தென்கிழக்காசியப் பரம்பல் நிலை:**

i. அந்தமான், நிக்கோபார் தீவுகள்

இங்கு ஏறக்குறைய 40,000 தமிழர் உள்ளனர். அந்த நாட்டின் இரண்டாவது பெரிய இனக்குழுவாகத் தமிழர் விளக்குகின்றனர். 33 பாடசாலைகளில் ஏறக்குறைய 6000 தமிழ் மாணவர்கள் கற்பதாக அறியப்படுகிறது. தமிழ்மொழியைத் தாய் மொழியாக இவர்கள் பயன்படுத்தும் வாய்ப்புடையவர்களாக உள்ளனர்.

1925 களில் 235 தமிழ்ப் பாடசாலைகள் இருந்தன. 1999 களில் அவற்றின் தொகை 548ஆக இருந்துள்ளது. செட்டி இனத்தவர் இப்பாடசாலைகளை நிர்வகித்து வந்துள்ளனர். இப்போது 24 மணி நேரமும் தொடர் பாடல் சாதனங்களுக்கு ஊடகமாகத் தமிழ்மொழி பயன்படுத்தப்படுகின்றது. தொழில்நுட்பக் கருவிகளும் கணனியும் தமிழ்மொழிப் பயன்பாட்டில் சிறந்துள்ளன. பத்துமலை முருகன் திருக்கோயில் தமிழர் பண்பாட்டின் நிலைக்களமாக உள்ளது. இத்திருக்கோயிலில் நடைபெறும் தைப்பூசத்திருவிழா மலேசியா வாழ் தமிழர் அனைவரையும் ஓரிடத்தில் தமிழர் என்ற உணர்வோடு ஒன்றிணைக்கம் பெருவிழாவாக உள்ளது. அது மட்டுமன்றி மலேசிய மக்களையும் தமிழ் மக்களையும் இணைக்கும் பண்பாட்டு விழாவாகவும் உள்ளது. மலேசியாவில் தமிழர் பரவிவாழவும் பண்பாடு வளர்க்கவும் இத்தகைய பக்திச் சூழலும் பேருதவி புரிகின்றது.

v. மியன்மார் (பர்மா)

இங்கு ஏறக்குறைய 200,000 தமிழர் முன்னர் இருந்துள்ளனர். இரண்டாவது உலகப் போரின் பின்னர் தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டது. 32 நகர்களில் உள்ள தண்டாயுதபாணி கோயில்கள் தமிழரை ஒருங்கு இணையச் செய்கின்றன. 50 தமிழ்ப் பாடசாலைகளில் முதல் நிலையில் தமிழ் கற்பிக்கப்படுகிறது. 'ரசிக ரஞ்சனி' தொண்டன் என்னும் பத்திரிகைகள் தமிழ் மொழியைப் பயன்பாட்டில் நிறுத்தியுள்ளன. 1966களில் நாட்டுக் கோட்டைச் செட்டி இனத்தவரால் தமிழ் வணிக மொழியாக வலம் வந்துள்ளது. ரங்கூர் பல்கலைக் கழகமும் தமிழ்ப்பண்பாட்டுப் பரம்பலுக்கு உதவுகின்றது.

vi. வியட்னாம்

இங்கு ஏறக்குறைய 3000 தமிழர் உள். HO CHIMINH என்னும் நகரிலேயே பெரும் பாலும் வாழ்கின்றனர். இங்குள்ள தண்டாயுத பாணி திருக்கோயில் தமிழர் பண்பாட்டுச் சின்னமாக விளங்குகிறது.

vii. கம்போடியா

1000 தமிழர் வரையில் உள்ளனர்.

viii. சீனா

5000 தமிழர் வரையில் உள்ளனர்.

xi. தாய்லாந்து

10,000 தமிழர் வரையில் உள்ளனர்.

x. [illegible]

காவடி ஆட்டம், தீமிதிப்போடு பக்திபூர்வமாக நடைபெறுகின்றது. றீயூனியன் தமிழ்ச் சங்கமும் தமிழை வளர்ப்பதில் பெரும்பங்கு ஆற்றுகின்றது.

iii. செசெல்ஸ் (SEYCHELLES)

இங்கு 1770களில் கப்பலில் வந்திறங்கிய குடிகளாகத் தமிழர் உள்ளனர். வணிகச் செயற்பாட்டுடன் தொடர்புற்றுள்ளனர். இப்போது 4000 தமிழர் வரையில் உள்ளனர். 1984 செசெல்ஸ் இந்துக் கோயில் சங்கம் நிறுவப்பட்டுள்ளது. இதனுடன் நவசக்தி விநாயகர் திருக்கோயிலும் கட்டப்பட்டுள்ளது. ஆண்டு தோறும் நடைபெறும் காவடிவிழா பெருவிழாவாக உள்ளது. அன்றைய தினம் இந்துக்களுக்கு அரச விடுமுறை தினமாகவுள்ளது. தமிழ்ப்பண்பாட்டு வளர்ச்சி நிறுவனம் தமிழ்மொழி பயிற்றும் வகுப்புக்களை நடத்துகிறது. இந்திய தூதராலயம் இதற்கு உதவி செய்கிறது. தமிழ் மன்றம் என்ற அமைப்பு 'தமிழ்முரசு' என்னும் சஞ்சிகை வெளியீட்டின் மூலம் தமிழர் பற்றிய செய்திகளையும் ஒருங்கிணைப்பு நிலைகளையும் எல்லோரும் நன்கு அறிந்து கொள்ளமுடிகின்றது.

iv. தென்னாபிரிக்கா

இங்கு தமிழர் குடியேற்றம் 1860களில் நடைபெற்றுள்ளது. 340 தமிழர் முதல் தொழிலாளராக வந்துள்ளனர். இப்போது ஏறக்குறைய 250,000 தமிழர் பல நகரங்களிலும் பரந்து வாழ்கின்றனர். NATAL, DURBAN நகரங்களிலே கூடுதலாக வாழ்கின்றனர். பழைய நடைமுறைகளைப் பேணுவதில் அக்கறை கொண்டுள்ளனர். பழைய தலைமுறையினர் எதிர்கொண்ட சிக்கல்கள் இப்போது குறைந்துள்ளன. தமிழ்ப்பண்பாட்டு அமைப்புக்கள் தமிழ்மொழிப் பேணலுக்குப் பெரிதும் உதவு கின்றன. காவடி, நாடகம் போன்ற வற்றூடாகத் தமிழ்ப் பண்பாடு பரப்பப்படுகிறது. கோயில் கட்டப்பட்ட பின்னர் இலங்கைப் பிராமணர் வந்து வழிபாட்டு நடைமுறைகளைச் செயற் படுத்துகின்றனர். இசைக்கலையிலும் தமிழர் பெரிதும் ஈடுபட்டுள்ளனர். *(வளரும்)*



*கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**30 நாட்களைக் கொண்ட விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி**

**ஆங்கிலம் பேசக் கற்போம் ! வெற்றி பெறுவோம்**

நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.

பாடநெறியில் இணையும் எல்லோருக்கும் இவைகள் வழங்கப்படும்



பெயர் /முகவரி என்பவற்றை தெளிவாக குறிப்பிட்டு 0773-123 523 க்கு SMS செய்யுங்கள்.

10 பாடத்தொகுதிகள் / Spoken English Video CD ஒன்று
Dialog Sim Card ஒன்று Video cd வழிகாட்டி புத்தகம் / அடையாள அட்டை
Diploma in English சான்றிதழ் ஒன்று என்பன எல்லோம் வழங்கப்படும்.

எமது Diploma சான்றிதழ் உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்பை பெற தேர்முகப்பரீட்சைகளுக்கும் இச்சான்றிதழ் தகுதி பெற்றது

மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 20/= பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்.

**UNION EDUCATIONAL INSTITUTE**
P.O. BOX 143, KANDY, SRI LANKA. Call: 0817 918 981 / 0773 123 523


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு.கந்தசாமி மனோகரன் (B.Sc., Dip.in Edu., SLPS 2-II)**
அவர்கள் இலங்கை அதிபர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட்டு யா/தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் பிரதி அதிபராகப் பதவி உயர்வு பெற்றதையிட்டு நிதியம் மகிழ்ச்சி அடைவதோடு அவரது சேவை சிறக்க எமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

'சாந்தி', நெல்லண்டை,
பருத்தித்துறை.

மணியம் கணபதிப்பிள்ளை
ஞாபகார்த்த நிதியம்


**வீடு விற்பனைக்கு**

சித்தன்கேணிச் சந்திக்கு அருகில் காரை நகர் வீதியில் பெற்றோல் செற்றுக்கு சமீபமாக அண்ணளவாக 7 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு :- 0041613235594
Email itemforsale @ hotmail.co.uk

**விற்பனைக்கு**

தையல் இயந்திரம் JUKI 5550
மோட்டார் சைக்கிள் CBZ X- TREME T.1XXXX எனும் தொடர் இலக்கம்.
தொடர்பு: 0775924830

**உழவு இயந்திரம் விற்பனைக்கு**

36 சிறி XXX, மசி பெர்குசன் - 135 உழவு இயந்திரப் பெட்டி, கலப்பையுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 0776538060

**தேவை**

கட்டடப் பொருள்கள் சம்பந்தமான விற்பனைப் பிரதிநிதி ஒருவர் தேவை.
தொடர்பு : 0777568685

**வேலையாள் தேவை**

ஒவ்செற் மெசின் மைன்டர் (OFFSET MACHINE MINDER), புத்தகம் கட்டுநர் (Book Binder) ஆகியோர் தேவை, அனுபவம் உள்ளவர்கள், பழக விரும்புபவர்கள் ஆண், பெண் இருபாலாரும் ஞாயிறு தவிர்ந்த நாள்களில் நேரில் தொடர்பு கொள்ளவும். தொடர்பு:- [illegible], இல.03, [illegible].

**விற்பனைக்கு**

அச்சகப் பாவனையில் உள்ள கட்டர் (England), கவுண்டர் மேசை, ரெலிபோன்பூத், 5kw ஜெனரேற்றர் ஆகியவை விற்பனைக்குண்டு.
தொடர்பு : 0779000388, 021 3213517, 0213219998

**கோழிக்குஞ்சு விநியோகம்**

தடுப்பு மருந்து போடப்பட்டு உத்தரவாதமளிக்கப்பட்ட No - 1 தரமான Broiler கோழிக் குஞ்சுகள் (விசேட விலையில்) 19.07.2010 காலை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்யவும்.

நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர்.
TP: 0212226944

ஆட்டி பாம், வட்டுக்கோட்டையிலும் பதிவு செய்யலாம்.
0213216290

குறிப்பு: (எம்மிடம் குஞ்சு வாங்குபவரிடம் திருப்பிக் கோழிகள் கொள்வனவு செய்யப்படும்)

**Jaffna College Institute of Technology**
**Vaddukoddai**

**Apply for the following courses Immediately.**

A training Institute registered with the Tertiary and Vocational Educational Commission (TWC) under P25/0014

**01.Diploma in Computer Programming & Data Processing**

- System Analyzing & Design
- Data base Management System
- Fundamentals of Computer Technology
- Data Processing
- Application Packages
- English
- Oracal
- C++
- Java
- Visual Basic dotnet

**02.Diploma in Civil Draughtsmanship**

- Building Construction
- Surveying & Leveling
- Engineering Science
- Quantity Surveying
- English
- AutoCAD
- Construction Materials
- Sanitary Engineering
- Engineering Drawing
- Draughtsmanship
- Maths

**03.Certificate in Aluminum Fitting and Fabrication**
(அலுமினியம் பொருத்துதலும் இணைத்தலும்)
Duration 6 Months (Full time) தமிழ்மொழி மூலம்

**மேலதிக வசதிகள்.**

குறுகிய காலப் பயிற்சி நெறிகள்
குறைந்த கட்டணம்! அதுவும் தவணை முறையில் செலுத்தும் வசதி. நிறைவான செய்முறைப் பயிற்சிகளுடன் கூடிய நன்கு வடிவமைக்கப்பட்ட கற்கை நெறிகள். மேலதிகமாகக் கணனி, ஆங்கிலம் ஆகிய துறைகளிலும் அனைவர்க்கும் பயிற்சி, சிறந்த நூலகம், விளையாட்டுத்துறை, விடுதி போன்ற மேலதிக வசதிகள்.

Further Details:
Director, JCIT, Vaddukoddai, Sri lanka.
Tel: 021 3213139 / 021 2228275 E-Mail: jcit@sltnet.lk

# IELTS இன்றி Spot Admissions மூலம் UK இல் உயர் கல்வி



## West End College London

| | | |
|---|---|---|
| இடம் | : | 4, IBC Road, Wellawatte, Colombo 6. |
| திகதி | : | 14th August 2010 |
| நேரம் | : | காலை 10.00 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரை |

Spot Admission by the College Representatives
Ms. Melanie Green & Ms. Hannah Bilcliffe
at Our Office Premises

VISA பெற்றுக்கொள்ள முன்னர் அல்லது அதன் பின்னர் எந்தவொரு கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

எமது சேவை முற்றிலும் **இலவசம்**

**O/L உடன் குறைந்த கட்டணத்தில்!**

தேவையான ஆவணங்கள்
- சுயவிபரக் கோவை (CV)
- கடவுச்சீட்டின் பிரதி (Passport Copy)
- கல்விச் சான்றிதழ்கள் (O/L, A/L உள்ளடங்கலாக)

FLEX Graphic

**flex Institute**
Step Towards a Bright Future
(A Subsidiary of Flex Graphic)

For appointment please contact :
0777 761346


4, IBC Road, Colombo 6.
E-mail: flexinstitute@sltnet.lk
Web: www.flexinstitute.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவத் தாரகை




தி. அபிராமி, தரம் -3,
யா/இந்து ஆரம்பப்பாடசாலை.



ச.உஷாளந், தரம் -7c,
சென்.போன்ஸ் கல்லூரி.



தெ. அபர்ணா, தரம் -5B,
யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.



அ.நிரோஜேந்திரன், தரம் -8B,
யா/ மாதகல் நுணசை வித்தியாலயம்.




க. அனித்தா, தரம் -6B,
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.



ம. கஜலினி, தரம் -8,
யா/இணுவில் மத்திய கல்லூரி.



ரி.ஜெரோம் ரோஜிதன், தரம் -8c,
யா/புனித ஹென்றி அரசர் கல்லூரி.



லோ. மிதுராங்கி, தரம் -4B,
யா/பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.

# பிறவியின் தத்துவம்

ஒரு முறை கடவுள் உலகத்தைப் படைத்துவிட்டு அதில் உயிரினங்களையும் படைக்க நினைத்தார். முதல் நாள் கடவுள் மாட்டைப் படைத்து, நீ வயலுக்குப் போய் வெய்யிலில் கஷ்டப்படு, மற்றவர்களுக்குப் பால் கொடுத்து உதவி செய். உன் ஆயுள் 60 வருடங்கள் என்று கூறினார். அதற்கு மாடு, ஐயோ அது அதிகம். 60 வருடங்கள் வெ யிலில் உழைக்க முடியாது. 40 வருடங்களைத் திருப்பி எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னது. கடவுளும் அதற்கு சம்மதித் தார். இரண் டாம் நாள் கடவுள் நாயைப் படைத்து, நாயே நாள் முழுவதும் வீட்டு வாசலில் உட்கார்ந் திருந்து வருபவர்களைப் பார்த்துக் குரைத்துக் கொண்டிரு, உனக்கு 20வருடங்கள் ஆயுள் என்று கூறினார். அதற்கு நாய், "அது அதிகம் 10வருடங்கள் போதும் 20 வருடங்கள் குரைக்க முடியாது. என்று சொன்னது. கடவுளும் அப்படியே செய்தார், மூன்றாம்நாள் கடவுள் குரங்கைப் படைத்து "குரங்கே மக்களை சிரிக்கவை, குரங்கு விளையாட்டுக் காட்டு, உனக்கு 20 வருட ஆயுள் என்று சொன்னார். அதற்குக் குரங்கு என்ன20 வருடங்களா? அது அதிகம். 10 வருடங்கள் போதும். 20 வருடங்கள் சிரிக்க வைக்க முடியாது. 10 வருடங்களை திருப்பி எடுங்கள் என்று கூறி யது. கடவுளும் அதற்குச் சம்மதித்தார். நான்காம் நாள் கடவுள் மனிதனைப் படைத்து, "மனிதா சாப்பிடு, தூங்கு, விளையாடு, மகிழ்ச்சியாகப் பொழுதுபோக்கு; உனக்கு 20 வருட ஆயுள் என்றார். அதற்கு மனிதன் என்ன 20 வருடங்கள் மட்டுமா? அது போதாது, அந்த 20 வருடங்களோடு மாடு திருப்பித் தந்த 10வருடங்களையும், நாய் தந்த 10வருடங்களையும் சேர்த்து 80வருடங் கள் தாருங்கள் என்று கூறினான். கடவுளும் அப்படியே செய்தார். அதன் படியே மனிதன் முதல் 20 வருடங்களும் சாப்பிட்டு, தூங்கி, விளையாடி மகிழ்ச்சியாக வாழ்க்கையை அனுபவிக்கிறான். அடுத்து அவனது 40 வருடங்களும் மாடுபோல் கஷ்டப்பட்டு எல்லாக் குடும்ப சுமைகளையும் தன் தோள் மேலே சுமந்து பராமரித்து தன் வாழ்க்கையைக் கழிக்கிறான். அடுத்த 10 வருடங்கள் குரங்கு விளையாட்டுக் காட்டி பேரப்பிள்ளைகளை மகிழ்விப்பதன் மூலம் கழிக்கிறான். அடுத்த 10 வருடங்கள் நாய் போல் வீட்டின் முன் அமர்ந்து வருவோர் போவோரைப் பார்த்துக் குரைக்கிறான். இதுவே பிறவியின் தத்துவம் ஆகும்.



ஜெ. டிலோஜா, தரம்- 8B, யா/ உடுப்பி[illegible]

# சிறுவர் கதிர்

## உங்களுக்கும் பரிசில்கள்

### விடை தெரியுமா? 65

1. யாழ் மாவட்ட அரச அதிபராக தற்போது பொறுப்பேற்றுள்ளவர் யார்?
2. 'கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டை முன்னிட்டு யாருடைய ஞாபகார்த்த முத்திரை வெளியிடப்படுகிறது?
3. அண்மையில் கோவையில் நடைபெற்ற மாநாட்டின் பெயர் என்ன?
4. இந்திய விஞ்ஞானி திவ்யேந்து சின்ஹா கொலை செய்யப்பட்ட நாடு எது?
5. நைதரசன் அதிகளவில் அடங்கியுள்ள உரம் எது?

### விடை தெரியுமா?

தெரிந்தால் 25.07.2010 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

### விடை தெரியுமா?

63இற்கான சரியான விடைகள்

1. பர்வேஸ் மஹ்ரூப்
2. அவ்ரேல்ராவ்
3. சி.பி. ரட்னாயக்க
4. சிவாஜி ராவ்
5. டிசெம்பர் - 10

### பரிசுபெறுவோர் விவரம்

1. நா. சுஜீவன், யா/மீசாலை வீரசிங்கம் ம.வித்தி.
2. ந. தர்ஷிகா, தரம் 11 B, யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.
3. சு. நிலக்ஷிகா, தரம் 2, யா/ ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தி.
4. கு. கஜப்பிரியன், தரம் 10B, யா/ இணுவில் இந்துக் கல்லூரி.
5. யோ. சுபாஜினி, தரம் 3, யா/ மட்டுவில் கமலாசினி கனிஷ்ட ம.வி.
6. அ. சுதாகரன், தரம் 9c, யா/ இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி

## சிந்தனைத் துளிகள்

- ★ பணம் சேர்ப்பது மட்டும் வாழ்க்கை அல்ல. நல்ல மனங்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.
- ★ நல்லவற்றைப் பாறையில் எழுது, தீயவற்றைப் பனிக்கட்டியில் எழுது.
- ★ நல்லதை விதை, தீயதைப் புதை.
- ★ நம்பிக்கையே இனிமையான எதிர் காலத்தை அமைக்கிறது.
- ★ செய்வதைத் திருந்தச் செய்வதே வெற்றிக்கு வழி.
- ★ ஒழுக்கமுள்ள மனிதன் பெருந்தன்மையும் மரியாதையும் அன்பும் நிறைந்த சொற்களையுமே பேசுவான்.

## அம்மா!

அம்மா எங்கள் அம்மாவே
படிப்புச் சொல்லி தந்தாளே
குளப்படி பல செய்தாலே
கண்டிப்புடன் நடப்பாளே
கற்ற கல்வி துணையுனக்கு
நானும் இருக்க வேண்டுமென்று
பெற்றோர் சொன்ன சொல்கேட்டு
தினமும் நாங்கள் நடப்போமே....!



வ. நிருபாமா,
யாழ் வசாவிளான் மத்திய மகா வித்தி.

## நீங்களும் எழுதலாம்

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்பவேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர்:-..........................................
தரம் :-..........................................
பாடசாலை :-..........................................
..........................................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

## விடுகதைகள்

01. வாலுண்டு கால் இல்லை, தலையுண்டு கையில்லை அது என்ன?
02. எட்டுகால் ஊன்றி இருகால் படம் எடுத்து வட்டக் குடைபிடித்து வாறாராம் வன்னியார் அவர் யார்?
03. மலையில் நனைவான் வெயிலில் காய்வான் அது என்ன?
04. முட்டு வீட்டுக்குள் தட்டுப் பலகை. அது என்ன?
05. ஐந்து வீட்டுக்கு ஒரு முற்றம். அது என்ன?

[illegible]சன், தரம் 7அ
யாழ். மத்திய கல்லூரி

விடைகள்
01. பாம்பு
02. நண்டு
03. குடை
04. நாக்கு
05. கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...... இராசிபலன்

## ஜூலை 18 முதல் ஜூலை 24 வரை

தருபவர் - வித்யா

### மேடம்

இந்த வாரம் திட்டமிட்ட காரியங்கள் சரியான நேரத்திற்கு நடக்கும். பணவரவுகளைப் பெறலாம். நண்பர்களுடன் சந்தோஷமாகப் பொழுது போக்கலாம். ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். நீண்ட தூரப் பயணங்கள் செல்லலாம். உறவினர்கள் தொடர்பான விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். சனி பகவான் சாதகமாக இருப்பதால், தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற ஜீவன காரிய விடயங்களில் திருப்திகரமான நிலைமை காணப்படும். அதனால், இதைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. விரய ஸ்தானத்தில் குரு சஞ்சரிப்பதால், பிள்ளைகள் தொடர்பான விடயங்கள், தெய்வ வழிபாடுகள், வாங்கிய கடனுக்கு வட்டி அல்லது தவணை கட்டுவது, நீண்ட தூர பயணங்களுக்காகச் செலவிடுவது, வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்குவது போன்ற வழிகளில் பணம் கரையும். சுக்கிரன் சாதகமாக இருப்பதால், தேவையான பணத்தைப் புரட்டிக் கொள்வீர்கள். உறவுப் பெண்கள், சகோதரிகள், தாயார் வழியில் உதவிகள் கிடைக்கலாம். விலை உயர்ந்த பொருள்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரும். சூரியன் சாதகமாக இருப்பதால், அரசியல்வாதிகள், அதிகாரிகள் ஒத்துழைப்புக் கிடைக்கும். பிள்ளைகள் வழியில் செலவுகள் நேரும். பணவரவுகளைப் பெறலாம்.

### இடபம்

இந்த வாரம் குடும்ப உறுப்பினர்களோ அல்லது மற்றவர்களோ உங்களைப் புரிந்து கொள்ளாமல் செயற்படுவதன் மூலம் எரிச்சல், கோபம் அடையலாம். விமர்சனங்களாலும் மன அமைதி பாதிக்கப்படலாம். மதியம் வரை ஊக்கம் உற்சாகமாகச் செயற்படுவீர்கள். மனதில் இனம்புரியாத சந்தோஷம் குடிகொள்ளும். கடன் மிகுதிகள் கிடைக்கும். நினைத்த காரியங்கள் தங்கு தடையின்றி நிறைவேறும். குரு சாதகமாக இருப்பதால், கையில் காசு பணப்புழக்கம் அதிகரிக்கும். வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளும் சூழ்நிலை உருவாகும். வீட்டுக்குத் தேவையானதைக் குறைவின்றி வாங்கிக் கொடுப்பீர்கள். பிள்ளைகளின் சுபகாரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. அதேநேரத்தில், குடும்ப ஸ்தானத்தில் சூரியனும், கேதுவும் இருப்பதால், ஏதாவது குறை கண்டு பிடித்து, குடும்ப உறுப்பினர்கள் உங்களை விமர்சிப்பதால் எரிச்சல் அடையலாம். வாக்குவாதங்கள், மனஸ்தாபம் உண்டாகலாம். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் அடிக்கடி சாக்குப் போக்குச் சொல்லிச் சமாளிப்பீர்கள். தந்தையுடன் மனஸ்தாபம் வராமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். சுக்கிரன் சாதகமாக இருப்பதால், பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். சகோதரிகள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம். செவ்வாய் சாதகமற்ற நிலையில் இருப்பதால், கடும் அலைச்சலால் அவ்வப்போது உடல் நிலை பாதிக்கப்படலாம். சகோதரர்கள், பங்காளிகள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். அலைச்சல், திரிச்சல் உண்டு. தண்டச் செலவு நேரும்.

### மிதுனம்

இந்த வாரம் ஊக்கம், உற்சாமாகச் செயற்படுவீர்கள். விருந்து உபசரிப்புகளால், நண்பர்கள் சந்திப்பால், பொழுது போக்கு விடயங்களால் சந்தோஷம் அடைவீர்கள். பணவரவுகளையும் பெறலாம். மதியம் வரை ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள். ஆத்திரம், அவசரமாகச் சில வேலைகளைச் செய்து விட்டு, பின்னர் வருத்தம் அடைவீர்கள். நான்காம் இடத்தில் சனி சஞ்சரிப்பதால், தொழில் ரீதியான விடயங்களில் சிரமங்களை எதிர்கொள்ளலாம். அதிகப்படியான வேலை நெருக்கடிகளால் அவதிப்படலாம். மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்க முடியாமல் அனைத்தையும் நீங்களே செய்ய வேண்டிய சூழ்நிலை உருவாகும். இருந்தாலும், தைரிய ஸ்தானத்தில் செவ்வாய் இருப்பதால், எதையும் தாங்கும் வல்லமை அதிகரிக்கும். போட்டி, எதிர்ப்புகளை முறியடிப்பீர்கள். நிலம், பூமி வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் காணப்படும். ஜென்ம ராசியில் சூரியன், கேதுவுடன் இருப்பதால், உங்களின் உற்சாகத்தைக் குறைக்கும் வகையில் ஏதோ சில வகை அசௌகரியங்கள் அவ்வப்போது உங்களை ஆள்கொள்ளும். உறவினர்கள், நண்பர்கள் செயற்பாடுகளில் எரிச்சல் அடைந்து, அடிக்கடி அவர்களை விமர்சிக்கும் சூழ்நிலை உருவாகும். மருத்துவ காரியங்களிலும் திருப்தி இருக்காது. சுக்கிரன், புதன் சாதகமாக இருப்பதால், பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள், ஆடம்பர ஈடுபாடுகள், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் சந்திப்பு போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். திட்டமிட்ட காரியங்களில் வெற்றி உண்டு. வெறுப்பு, விரக்தி ஆள்கொள்ளும்.

### கடகம்

இந்த வாரம் ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் பணம் கரையலாம். தேவையற்ற அலைக்கழிப்புக்கு ஆள்படலாம். சந்தோஷம் தரும் அல்லது சங்கடம் தரும் செய்தியைக் கேட்கலாம். சோர்வின்றிச் சுறுசுறுப்பாக ஏதாவது வேலைகளைச் செய்வீர்கள். எதிர்பார்த்த உதவிகள் மட்டுமின்றி, எதிர்பாராத உதவிகளும் கிடைக்கும். பணிபுரியும் இடத்திலோ அல்லது வீட்டிலோ சிலருடன் வாக்குவாதங்களில் ஈடுபடலாம். குருவும், சனியும் சாதகமான நிலையில் இருப்பதால், தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற ஜீவன காரிய விடயங்களில் முன்னேற்றம் காணப்படும். கையில் காசு பணப்புழக்கம் அதிகரிப்பதால், மனைவி, குழந்தைகளின் தேவைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். விலகிச் சென்ற சொந்தங்கள் எல்லாம் உங்களைத் தேடி வரும். பெரிய மனிதர்களின் பக்க பலத்தால் சிக்கலான காரியங்களைச் சாதகமாக முடித்துக் கொள்ளும் வாய்ப்பு கிட்டும். வழக்கு விவகாரங்களில் வெற்றி கிடைக்கும். பதவி உயர்வை எதிர்பார்ப்போர் நல்ல செய்திகளைக் கேட்கலாம். செவ்வாய் இரண்டாம் இடத்தில் இருப்பதால், சூடான வார்த்தைகளை பேசுவதையும், மற்றவர்களை நம்பி யாருக்கும் உத்தரவாதம் கொடுப்பதையும் தவிர்க்க வேண்டும். சகோதரர்கள், பங்காளிகள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். விரய ஸ்தானத்தில் சூரியன், கேது இருப்பதால், தந்தை, மாற்று மதத்தினர் வழியில் செலவு, அலைச்சல் ஏற்படும். குடும்பச் செலவு அதிகரிக்கும். பணம் வரும்.

### சிங்கம்

இந்த வாரம் ஆதாயகரமான பணவரவுகளை, பொருள் வரவுகளைப் பெறலாம். கடன் மிகுதிகள் வசூலாகும். உறவினர்கள், நண்பர்கள் சந்திப்பால், பொழுது போக்கு விடயங்களால் சந்தோஷம் அடைவீர்கள். செலவு, அலைச்சல்களைச் சந்திக்கலாம். குடும்ப உறுப்பினர்கள் இடையே காரசாரமான வாக்குவாதங்களால் மன அமைதி பாதிக்கப்படலாம். திடீர் வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம். தன, குடும்ப, வாக்கு ஸ்தானத்தில் சனி இருப்பதால் பண விடயங்களில் திருப்திகரமான நிலைமை இருக்காது. கொடுக்கல் வாங்கல்களில் அவ்வப்போது சறுக்கல்களைச் சந்திக்கலாம். தொழில் ரீதியாக வரும் வருமானமும் செலவுகளைச் சரிக்கட்டவே சரியாக இருக்குமே அன்றி, சேமிக்க முடியாது. குருவும் சாதகமற்ற நிலையில் இருப்பதால், சிலர் எதிர்பாராத மருத்துவச் செலவுகளைச் சந்திக்கலாம். மேலும், ஜென்மத்திலேயே செவ்வாய் இருப்பதால், எந்த விடயத்திலும் வேகத்தைக் குறைத்துப் பொறுமையாகச் செயற்பட வேண்டும். மற்றவர்கள் செய்யும் தவறுகளைக் கண்டு எரிச்சல் அடையாமல் நிதானமாக இருப்பது நல்லது. சகோதரர்கள், பங்காளிகள் விவகாரங்களில் தலையிடாமல் இருப்பது நல்லது. சுக்கிரன் சாதகமாக இருப்பதால், நீண்ட தூரப் பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள், உறவுப் பெண்கள் சந்திப்பு, மனைவி, மக்களின் ஆசைகளை நிறைவேற்றுதல், விருந்தினர்கள் உபசரிப்பு போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். மற்றவர்கள் மத்தியில் பளிச்சென தோன்றுவதில் அக்கறை காட்டுவீர்கள். தைரியம், தன்னம்பிக்கை கூடும். மறதியால் அவதியுண்டு.

### கன்னி

இந்த வாரம் மனதில் நல்ல சிந்தனைகள் தோன்றும். தொழில் ரீதியான பணவரவுகளைப் பெறலாம். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு உண்டாகும். சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்கலாம். சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். குடும்பத்திற்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். பெரிய மனிதர்களின் உதவி கிடைக்கலாம். நண்பர்களால் நன்மை அடையலாம். ஜென்மத்தில் இருக்கும் சனி உங்களின் ஊக்கம், உற்சாகத்தை அவ்வப்போது குறைக்கும் வகையில் செயற்பட்டுக் கொண்டிருப்பார். எந்த வேலையையும் திட்டமிட்டபடி முடிக்க முடியாமல் தடை, தாமதங்களை ஏற்படுத்துவார். கைகொடுப்பதாகச் சொன்ன நண்பர்கள், உறவினர்கள் எல்லாம் கடைசி நேரத்தில் கைவிடலாம். எதிர்பார்த்த அளவுக்கு எதிலும் முன்னேற்றம் காண முடியாமல் தவிக்கலாம். இருந்தாலும், குரு பகவானின் பார்வை சனிக்குக் கிடைப்பதால், அவ்வப்போது ஆறுதலான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். தேவையான பணத்தைப் புரட்டிக் கொள்வீர்கள். சுபகாரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. நல்லவர்கள், பெரிய மனிதர்களின் உதவி கிடைக்கும். விரய ஸ்தானத்தில் செவ்வாய், சுக்கிரன் இருப்பதால், விவசாய பணிகள், வீடு, மனை சீரமைப்பு, தடைபட்ட கட்டட பணிகளை முடுக்கி விடுதல், வாங்கிய கடனுக்கு வட்டி கட்டுதல், சகோதரர்கள், பங்காளிகளின் தேவைகளை நிறைவேற்றுதல், பெண்கள், பொழுது போக்கு விடயங்கள், வாகனப் பராமரிப்பு போன்ற வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். செலவு, அலைச்சல் உண்டு. ஊக்கம், உற்சாகம் கூடும்.

### துலாம்

இந்த வாரம் புதியவர்கள் சிலரின் சந்திப்பு நிகழும். திட்டமிட்டதை விட சில விடயங்களுக்கு அதிகமாக செலவாகலாம். கேளிக்கை, கொண்டாட்டங்களில் நாட்டம் செல்லும். எண்ணிய காரியங்கள் நிறைவேறும். சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். தம்பதியர் இடையே பாசம் கூடும். எதிர்காலம் தொடர்பான விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். விரய ஸ்தானத்தில் சனி இருப்பதால், பணம் எந்த வகையிலாவது கரைந்து கொண்டே இருக்கும். தொழில், உத்தியோகம் போன்றவற்றில் அடிக்கடி இடையூறுகளைச் சந்திக்கலாம். சக ஊழியர்கள் உங்களைப் புரிந்து கொள்ளாமல் நடக்கலாம். இயந்திரங்களை வைத்து தொழில் செய்வோர் அவை அடிக்கடி பழுதாவதால் தண்டச் செலவுகளை எதிர்கொள்ளலாம். வியாபாரிகள் சரியான வேலையாள்கள் கிடைக்காமல் அவதிப்படலாம். குருவும் சாதகமற்ற நிலையில் இருப்பதால், பெரிய மனிதர்களின், நல்லவர்களின் உதவிகள் கிடைப்பது தள்ளிப் போகலாம். பிள்ளைகள் முன்னிட்ட கவலைகள் அவ்வப்போது உங்களை ஆள்கொள்ளும். கடன் பிரச்சினைகளாலும் கவலைப்படலாம். இருந்தாலும், செவ்வாய், சுக்கிரன் சாதகமாக இருப்பதால், சகோதர, சகோதரிகள், பங்காளிகள், உறவுப் பெண்கள், மனைவி வழி உறவுகள் போன்றவர்களின் சந்திப்பால் சந்தோஷம் அடைவீர்கள். சகோதரி களின் நீண்ட நாள் கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். நெடுநாள்களாக வராத மாமன், மைத்துனர் கள் உங்களின் வீட்டிற்கு வரலாம். ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். அலைச்சல், திரிச்சல் உண்டு.

### விருச்சிகம்

இந்த வாரம் சந்திராஷ்டமம் என்பதால், மந்தம், மறதி, தண்டச் செலவு, கவனக் குறைவு, பேராசையால் நஷ்டம் போன்ற பிரச்சினைகளைச் சந்திக்கலாம். வேகமாகச் சில வேலைகளைத் துவக்கி விட்டுப் பாதியில் விட்டு விடலாம். கலகலப்பான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். ஆலய வழிபாடுகளில் நாட்டம் செல்லும். சிறிய விடயங்களை நினைத்து பெரிய அளவில் கவலைப்படுவீர்கள். சனி, குரு சாதகமாக இருப்பதால் தொழிலில் அபிவிருத்தி காணப்படும். வேலையாள்கள் அனுசரணையாக இருப்பர். எதிர்பார்த்த பதவி உயர்வு, சம்பள உயர்வு வாய்ப்புகள் சாதகமாகும். வழக்கு விவகாரங்களில் வெற்றி கிடைக்கும். அடமானமாக வைத்த சொத்துக்களை மீட்பதோடு, புதிய சொத்துக்களும் வாங்குவீர்கள். வருமானத்தை அதிகரித்துக் கொள்ளும் வாய்ப்பு உருவாகும். எதிர்பாராத சில விடயங்கள் நடப்பதன் மூலம் மனதில் சந்தோஷம், மகிழ்ச்சி குடிகொள்ளும். வளர்ந்த பிள்ளைகள் நல்ல வேலைகளைப் பெற்று அவர்கள் வழியில் வருமானம் பெறலாம். விலகிச் சென்ற சொந்தங்கள் எல்லாம் விரும்பி வந்து சேரும். காரிய ஸ்தானத்தில் செவ்வாய் இருப்பதால், உத்தியோக ரீதியான நெருக்கடிகள் அதிகரிக்கலாம். ஓய்வின்றி பரபரப்பாகச் செயற்படலாம். சகோதரர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகிப் பாசம் அதிகரிக்கும். சூரியன் சாதகமற்ற நிலையில் இருப்பதால், அரசியல்வாதிகள், அதிகாரிகள், தந்தை வழியில் பிரச்சினைகளை, சிரமங்களைச் சந்திக்கலாம். அரசியல்வாதிகள் வீண் பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். காரிய வெற்றி உண்டு. நல்ல செய்தி கேட்கலாம். பணவரவுகளைப் பெறலாம்.

### தனுசு

இந்த வாரம் சோர்வு, சோம்பலை விரட்டி புத்துணர்ச்சியுடன் செயற்படுவீர்கள். பொழுது போக்கு விடயங்களால் சந்தோஷம் அடைவீர்கள். அடுக்கடுக்காக வேலைகள் குவிந்தாலும், அனைத்தையும் அசராமல் செய்வீர்கள். சந்திராஷ்டமம் என்பதால், எந்த விடயத்திலும் திடமான முடிவு எடுக்க முடியாமல் குழப்பங்களைச் சந்திக்கலாம். தேவையற்ற செலவுகள், அலைக்கழிப்புகள் நேரும். மறதியால் அவதிப்படலாம். வேலை நெருக்கடிகள் கூடலாம். ஜீவன காரிய விடயங்களில் திருப்தியை விட அதிருப்தியே அதிகம். கடினமாக முயற்சித்தும் சில வேலைகள் நினைத்தபடி முடியாமல் தடைபடலாம். தொழில் ரீதியாக மற்றவர்களின் விமர்சனங்களை எதிர்கொள்ளலாம். பாடுபடும் அளவுக்கு எதிலும் பலன் கிடைக்காது. இருந்தாலும், கடந்த காலத்தில் கைவிட்டுப் போனதாக நினைத்த சில விடயங்கள் எல்லாம் இப்போது நடக்கலாம். ஏழாம் இடத்தில் சூரியனும், கேதுவும் இருப்பதால் கணவன் மனைவி உறவில் இணக்கத்தை விட சலசலப்புகளே அதிகம். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தள்ளிப் போகலாம். அரசாங்கத்திற்குக் கட்டணம் கட்டுவது, வரி செலுத்துவது போன்ற வழிகளில் பணம் கரையலாம். இருந்தாலும், சுக்கிரன், புதன் சாதகமாக இருப்பதால் மனைவி வழி உறவுகள், தாயார், உறவுப் பெண்கள், தோழிகள், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் போன்ற வழிகளில் உதவிகள் கிடைத்து உற்சாகம் பெறுவீர்கள். இவர்களால் சந்தோஷமான அனுபவங்களையும் பெறலாம். உடல் உபாதைகளைச் சந்திக்கலாம். பணவரவுகளைப் பெறலாம்.

### மகரம்

இந்த வாரம் பணவரவுகளைப் பெறலாம். வாங்க நினைத்த பொருள்களை வாங்குவீர்கள். உறவினர்கள் கேட்ட உதவிகளைச் செய்வீர்கள். சில நல்ல விடயங்கள் வீட்டிலோ அல்லது பணிபுரியும் இடத்திலோ நடக்கலாம். பம்பரமாகச் சுழன்று பணியாற்றுவீர்கள். நீண்ட நாள்களாகச் சந்திக்காத உறவினர்கள் சிலரைச் சந்திக்கலாம். திட்டமிட்ட வெளியூர் பயணங்கள் செல்லலாம். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். ஒன்பதாம் இடத்தில் சனி இருப்பதால் தந்தை உடல் நலன் தொடர்பான விடயங்களிலும், உங்களின் உடல் நலனிலும் கவனம் அவசியம். கடந்த கால தவறுகளை நினைத்து அடிக்கடி வருத்தம் அடையும் சூழ்நிலை உருவாகும். மூன்றாம் இடத்தில் குரு இருப்பதால், பிள்ளைகள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். அவர்கள் நீங்கள் சொல்வதைக் கேட்காமல் தங்களின் இஷ்டத்திற்கு செயற்படலாம். சொந்தபந்தங்களுடன் மனஸ்தாபம் வராமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். செவ்வாய் சாதகமற்ற நிலையில் பணிபுரிவோர் அதிகாரிகளின் நெருக்கடிகளுக்கு ஆளாகலாம். நிலம், பூமி தொடர்பான விடயங்களில் நினைத்தது நடப்பது கடினம். வீட்டில் உள்ள சில பொருள்கள் பழுதாகி செலவுகளை உண்டாக்கலாம். அதேநேரத்தில், சூரியன், சுக்கிரன் சாதகமாக இருப்பதால், தந்தை, பெண்கள் வழியில் உதவி கிடைத்து சந்தோஷம் அடைவீர்கள். அரசியல்வாதிகளுக்குச் செல்வாக்கு கூடும். சந்திராஷ்டமம் என்பதால் எதிலும் கவனமாகச் செயற்பட வேண்டும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும்.

### கும்பம்

இந்த வாரம் ஒன்றுக்கு மேற்பட்ட பிரச்சினைகளை நினைத்து குழப்பம் அடைவீர்கள். மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காகச் சில காரியங்களைச் செய்வீர்கள். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். மனதில் இனம்புரியாத சந்தோஷம் குடிகொள்ளும். பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கலாம். தடைபட்ட சில காரியங்களைத் துரிதமாக முடிப்பீர்கள். பணவரவுக்கும், நன்மை தரும் காரியங்கள் நடக்கவும் உகந்த நாள்கள். சனி எட்டாம் இடத்தில் இருப்பதால் உத்தியோகம், விவசாயம், வர்த்தகம் போன்ற ஜீவன காரிய விடயங்களில் ஆதாயத்தைவிட அல்லல், சிரமங்களே அதிகம். திட்டமிட்டபடி எதையும் செய்ய முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். வேலையாள்களின் ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளாலும் எரிச்சல் அடையலாம். உறவினர்களின் விமர்சனங்களுக்கு அடிக்கடி ஆள்படலாம். உங்களின் சொந்த விடயங்களை மற்றவர்களிடம் சொல்வதைத் தவிர்க்க வேண்டும். இருந்தாலும், குரு சாதகமான நிலையில் இருப்பதால் பல நாள்களாக எதிர்பார்த்த, நிலுவையில் இருந்த கடன் மிகுதிகள் வரலாம். பிள்ளைகளின் கல்வி முயற்சிகள், தொழில் முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. குடும்பத்தில் வசதி, வாய்ப்புகளை அதிகரிப்பீர்கள். சுபகாரிய விடயங்களிலும் முன்னேற்றம் உண்டு. செவ்வாய் ஏழாம் இடத்தில் இருப்பதால், கணவன் மனைவி உறவில் கோபதாபங்கள் வராமல், ஒருவருக்கொருவர் ஏட்டிக்குப் போட்டியான பேச்சுக்களைத் தவிர்த்து விட்டுக் கொடுத்து செல்வது நன்மை தரும். ஊக்கம், உற்சாகம் கூடும். கூட்டு முயற்சி பலிக்கும். எதிலும் கவனம் அவசியம்.

### மீனம்

இந்த வாரம் ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். மற்றவர்களுக்காக உங்களின் கைப்பணத்தை செலவிடலாம். ஆறுதலான, மாறுதலான அனுபவங்களைச் சந்திக்கலாம். பொழுதுபோக்கு, உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். உடல் ரீதியான உபாதைகளாலும் உற்சாகம் குறையலாம். ஏழாம் இடத்தில் சனி இருப்பதால், பொறுப்புகளால் போராட்டமான நிலைமையைச் சந்திக்கலாம். கணவன் அல்லது மனைவிக்கு அடிக்கடி உடல் நிலை பாதிப்பு ஏற்படுவதால், அவர்களைக் கவனிப்பதில் அதிக நேரத்தைச் செலவிட வேண்டியிருப்பதால் மன உளைச்சலுக்கு ஆள்படலாம். கடன் விவகாரங்கள், சட்ட விவகாரங்கள் எல்லாம் திருப்தி தரும் வகையில் இருக்காது. செவ்வாய் சாதகமான நிலையில் இருப்பதால், சகோதரர்கள், பங்காளிகள் உதவிகரமாக இருப்பர். பொலிஸ் தொடர்பான விடயங்களில் அனுகூலம் உண்டு. உத்தியோகஸ்தர்கள் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள் போன்ற வழிகளில் தண்டச் செலவுகள் நேரும். சலிப்பு, வெறுப்பு அதிகரிக்கும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் மற்றும் வெளிவட்டாரத் தொடர்புகள் எல்லாம் விரும்பும் வகையில் இருக்காது. தந்தையிடம் ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளாலும் மன அமைதி பாதிக்கப்படலாம். நினைத்த காரியம் நடக்கும். பணவரவுகளைப் பெறலாம். பிரியமானவர்கள் சந்திப்பு நிகழும். சுபச் செலவு கூடும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரச நிர்வாகத்துக்கு அழுத்தம் தரும் உரிமை வெளியாருக்குக் கிடையாது
# ஆயினும் தவறுகள் இருக்குமானால் அவை நேர்சீர் செய்யப்படுவது அவசியமே

**இன்றைய அரசின் செயற்பாடுகள் சர்வதேச சமூகத்தின் மத்தியில் சர்ச்சைகளைத் தோற்றுவிக்கக் காரணமாகி வருகின்றன என்ற விதத்தில் தமது கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார் பிரபல இடதுசாரி அரசியல் வாதியான வாசுதேவ நாணயக்கார.**

**கடந்த 12ஆம் திகதி வெளியான 'லங்காதீப' சிங்கள நாளிதழுக்கு அவர் வழங்கிய பேட்டியின் ஒரு பகுதி இங்கு தொகுத்துத் தரப்படுகின்றது.**

**கேள்வி:** இலங்கையின் இனமோதலை பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்த்துக் கொள்வது போன்றே யுத்தம் தொடர்பாகவும் இந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதிகள் முயன்றுள்ளனர். ஆனாலும் முன்னாள் இராணுவத் தளபதிகளால் அக்கருமத்தை நிறைவேற்ற இயலாது போயுள்ளது. யுத்தத்துக்கு எதிரான யுத்த எதிர்ப்பு அணியின் ஒருவரான தாங்கள் இந்த யுத்த வெற்றியை எவ்விதம் நோக்குகிறீர்கள்?

**பதில்:** யுத்த மோதலொன்றைத் தவிர்த்துப் பிரச்சினைக்குத் தீர்வை எட்டுவதற்கு அனைத்துத் தலைவர்களும் மேற்கொண்ட முயற்சிகளை மதித்துப் பாராட்டும் அதேவேளை,விடுதலைப்புலிகளின் தவறுகள் காரணமாகவே அந்த முயற்சிகளுக்குத் தோல்வி கிட்டியதாக என்னால் கூறமுடியும். அதன் காரணமாகவே இந்த அரசுக்கும் யுத்தமொன்றுக்கு முகம் கொடுக்க வேண்டி நேர்ந்தது. யுத்தமொன்றை முன்னெடுத்துச் சென்றே ஆக வேண்டியுள்ளது என்ற தீர்க்கமான நிலைப்பாடொன்றின் மீதே இந்த யுத்த வெற்றி கிட்டியது. யுத்தம் காரணமாக அழிவுகளும், பாதிப்புக்களும் மனிதாபிமானம் சிதைவுறும் அனர்த்தங்கள் பலவும் நிகழ்ந்த போதிலும் யுத்தத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டி நேர்ந்தது. ஆனாலும், இன்று இனங்களுக்கிடையிலான சிக்கல்களைக் களைந்து நல்லிணக்கத்துக்கு வழிசமைக்கும் விதமாக வடக்குக் கிழக்கில் ஜனநாயகத்தையும், அபிவிருத்தியையும் ஏற்படுத்தவும் வாய்ப்பமைந்துள்ளது.

**கேள்வி:** இந்த யுத்த வெற்றியே வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்கு ஒரே தீர்வாக அமைய முடியுமென்பதாக அரசு கருதுகிறது. ஆனாலும் அரசியல் ரீதியிலான அல்லது அதிகாரப் பகிர்வை மேற்கொள்ளும் எந்தவொரு கருமத்திலும் அரசு ஈடுபடுவதாகத் தென்படவில்லை. அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நேர்சீராக நடைமுறைப்படுத்துவோம் என அரசு தெரிவித்து வந்தாலும் அதுவும் நிறைவேற்றப்படுமா? என்ற சந்தேகம் இன்று தலையெடுத்துள்ளது. இந்த நிலைப்பாட்டோடு தாங்கள் ஒத்துப் போகிறீர்களா?

**பதில்:** யுத்தமென்பது விடுதலைப் புலிகளின் பயங்கரவாதம் தொடர்பாக முகம் கொடுக்குமொரு முறைமை மட்டுமே என்பதே எனது கருத்தாகும். அவ்வாறின்றி யுத்தம் பிரச்சினைக்கு ஒரு தீர்வாகிவிட மாட்டாது. இதற்குப் பரிகாரமாக அமைவது நாட்டில் ஜனநாயகத்தை நிலைப்படுத்தி அதனூடாக அரசியல் தீர்வொன்றை முன்வைப்பதேயாகும். இக்கருமத்துக்கு 13ஆவது திருத்தம் நல்லதொரு அடித்தளமேயாகும். அதைக் கைக்கொண்டு தீர்வுகளை எட்டும் கருமத்தில் தடம்பதிப்போம் என்றே ஜனாதிபதியும் தெரிவித்துள்ளார். விரைவாக அக்கருமத்தில் ஈடுபட வேண்டும் என்பதே அனைத்துத் தரப்புகளினதும் விருப்பாகும். இந்த அரசு தீர்வொன்றை நோக்கிப் பயணிக்க மாட்டாதென என்னால் இன்னமும் சிந்திக்க இயலவில்லை. ஆனால் தீர்வொன்று வழங்கப்படா திருக்குமானால் பிரச்சினை நீண்டு செல்லக் கூடும். மற்றும் இலங்கையிலோ அல்லது அதற்கு வெளியிலோ ஈழ அரசொன்றை உருவாக்குவதில் அவர்கள் முனைப்புடன் ஈடுபடக்கூடும்.

**கேள்வி:** புலம்பெயர்ந்த தமிழர் தரப்பு அல்லது வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் மற்றும் சர்வதேச சமூகம் இன்றைய இலங்கை குறித்து கொண்டுள்ள வெறுப்பான எண்ணக்கருக்களுக்கான காரணியை தாங்கள் ஏற்கனவே தெரிவித்துள்ளீர்கள். சர்வதேசத்துக்கும் அரசுக்குமிடையில் இன்று நிலவும் போட்டியில் அரசு,ராஜதந்திர வழிமுறையை விட மாற்று வழிகள் ஊடாகப் பயணித்துச் செல்வதன் மூலம் இலங்கை பின்னடைவுக்கு உள்ளாகியுள்ளதாக எழும் விமர்சனங்களைப் பற்றித் தங்களது கருத்து?

**பதில்:** உண்மையில் தமிழ் மக்களுக்குச் சார்பாக பல லட்சம் பேர் வெளிநாடுகளில் இருக்கவே செய்கின்றனர். அவர்கள் பொருளாதார ரீதியில் பலம் பெற்றிருப்பதோடு அவர்கள் வாழும் நாடுகளில் வாக்குரிமையையும் பெற்றிருப்பதால் அவர்களால் அவ்வவ் நாடுகளின் அரசுகளுக்கு இலங்கை நிலை தொடர்பாக கடும் அழுத்தங்களை விடுக்கவும் முடிந்துள்ளது. அதற்கமைய, தமிழ் மக்களுக்கு நியாயத்தை வழங்க இலங்கையரசு மேற்கொள்ளும் முயற்சிகளின் குறைந்த மட்ட, கூடிய மட்ட தன்மைகளைப் பொறுத்தே வெளிநாடுகளில் வாழும் தமிழர்களால் அவ்வவ் நாடுகளுக்கு அழுத்தங்களை விடுக்க வாய்ப்பமைகிறது. எனவே இலங்கை வாழ் தமிழ் மக்களுக்குத் தீர்வொன்று வழங்கப்படுமானால் புலம்பெயர் தமிழர் தரப்புகளின் எதிர்ப்புணர்வு நலிவுற்றுப் போகலாம். அவ்வாறின்றேல் அவர்கள் மென்மேலும் பலமடையக்கூடும்.

**கேள்வி:** தீர்வுகளை வழங்குவது எவ்வாறானாலும் இடப்பெயர்வுகளுக்கு உள்ளாகியிருக்கும் தமிழ் மக்களை மீளக் குடியமர்த்தும் கருமமும் கூட மனிதாபிமான அடிப்படையில் முன்னெடுக்கப்படுவதில்லை என்பதாகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன அல்லவா?

**பதில்:** அது தெளிவானதொரு யதார்த்தமேயாகும். முகாம்களிலிருந்து மக்கள் வெளியேறிச் செல்வதற்கு வகை செய்யப்பட்டாலும் கூட, அவர்கள் தங்கியிருப்பதற்கு வாய்ப்பான இருப்பிடம், அவர்களது வாழ்வாதாரத்துக்கான மார்க்கம், பொதுவான அடிப்படை வசதிகள் மற்றும் அவர்களது பிள்ளைகளுக்கான கல்வி வசதிகள் போன்றவை முறையாகச் செய்து கொடுக்கப்படவில்லை.

அந்த மக்கள் தொடர்பாகக் கிட்டியுள்ள வாய்ப்பு வசதிகள் போதுமானவை அல்ல என்பதை அப்பிரதேசங்களுக்குச் செல்வதன் மூலம் புரிந்து கொள்ள முடியும். எமது கட்சிகளைச் சார்ந்தோர் அந்த நிலைப்பாட்டை எமக்குத் தெளிவுபடுத்துகின்றனர். அதற்கமைய, அந்த நிலைப்பாடு வரவேற்கத்தக்கதல்ல என்பதோடு அக்கருமம் உண்மையில் பாரியதொரு சவாலே என்பதை நாம் ஏற்றே ஆக வேண்டியுள்ளது. ஆனாலும் அரசொன்றைப் பற்றி அவ்விதம் இலேசில் குறைகூற இயலாது. பொதுவான அடிப்படை வசதிகள் மற்றும் வாழ்வாதாரத்தை வழங்குதல், நிலக்கண்ணி வெடிகளை அகற்றுதல் போன்ற கருமங்கள் அனைத்தும் பூரணப்படுத்தப்பட வேண்டியுள்ளது. யுத்தம் காரணமாக அவையனைத்துமே அழிவுற்று இல்லாது போயுள்ளன. இவற்றைப் பூரணப்படுத்த அரசு முயற்சித்தே வருகின்றது என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. இருந்தாலும் எந்தளவுக்குக் காத்திரம் காட்டித் திட்டம் வகுத்து யுத்தம் முன்னெடுத்துச் செல்லப்பட்டதோ அந்தளவுக்குக் காத்திரம் காட்டி மக்களை மீளக் குடியமர்த்தும் கருமத்துக்கும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

ஏனெனில், முக்கியமாக ராணுவத் தரப்புக்கள் மற்றும் ஏனைய பலதரப்பட்ட தரப்புக்கள் மத்தியில் இந்த மீளக் குடியமர்த்தல் பற்றி பலதரப்பட்ட கருத்துக்கள் உள்ளன. எனவே இந்த முரண்பட்ட கருத்துக்கள் என்ற பிரச்சினைக்குத் தீர்வுகண்டு அரசு, ஒரே நிலைப்பாட்டில் அந்த மக்களது தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கிச் செயற்பட வேண்டியுள்ளது. அந்த அணுகுமுறை இன்னமும் கைக்கொள்ளப்படாமலே உள்ளது.


**கேள்வி:** மக்களை மீளக் குடியமர்த்தும் கருமத்தில் அரசுக்கு நிதி மற்றும் வளங்கள் என்ற பற்றாக்குறைக்கும் முகம் கொடுக்க வேண்டி நேர்ந்துள்ளது. பெரும்பாலும் இத்தகைய கருமங்களின் போது அனேகமான நாடுகள் சர்வதேசத்திடமிருந்தே உதவி ஒத்தாசைகளைப் பெறுகின்றன. ஆனாலும் இலங்கை, சர்வதேச சமூகத்துடன் ராஜதந்திர ரீதியில் அணுகி உதவிகளைப் பெறுவதைவிட சண்டித்தனப் போக்கில் வாய் வீரியத்தையும் காட்டிச் செயற்படுவது, உண்ணாவிரதமிருப்பது போன்ற இவை குறித்து தங்களது கருத்து வெளிப்பாடு என்ன?

**தமிழில் : சரா**

**பதில்:** நாடொன்றைப் பொறுத்தவரையில் நடுவுநிலை நின்று அனைத்தையும் சீர்தூக்கிப் பார்த்து பெறத்தக்க சர்வதேச உதவிகளைப் பெறுவதே அதன் கடப்பாடாகும். அத்தகைய இலாபங்களை ராஜதந்திர ரீதியிலான அணுகல்கள் மூலமாக அடைவதேயல்லாது உண்ணாவிரதமிருந்தோ அநாகரிக செயல்களைப் புரிந்தோ அடைய இயலாது. இங்கு சர்வதேச சமூகம் என அடையாளப்படுத்தும் போது இந்தியா பெரிதும் முக்கியத்துவம் பெறும் எமது அண்டை நாடாகும். அவர்களோடு இணைந்தே நாம் எமது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது. அரசும் அவ்விதமே செயற்படுகிறது. உலகில் மேற்குலக நாடுகள் மற்றும் ஏனைய வல்லாதிக்க நாடுகள் போன்றே இன்னொரு புறத்தில் சீனா, ரஷ்யா போன்ற நாடுகளும் இருக்கவே செய்கின்றன. இந்த நாடுகளிடம் இலங்கை குறித்து நிலவுவது மாறுபட்ட கருத்தாகும்.

வல்லாதிக்க நாடுகள் ஐ.தே.கட்சி அரசொன்றின் ஆட்சியை விரும்புவதற்கு அத்தகைய அரசொன்றின் ஊடாக இந்த வட்டகையில் தமது ஆதிக்கத்தை வலுப்படுத்திக் கொள்ளும் அவைகளது நோக்கமே காரணமாகிறது. அவர்களது பொருளாதாரத் திட்டங்களுக்கும் இந்த நாட்டில் ஐ.தே.கட்சி அரசொன்றின் நிர்வாகமே பெரிதும் பொருந்தி வருகின்றது. இருந்த போதிலும், எம்மோடு நல்லிணக்கத்தைப் பேணும் நாடுகளும் உலகில் உள்ளன. எவ்வாறான போதிலும் ஆழிப்பேரலை ஏற்படுத்திய அழிவைப் போன்ற யுத்தம் ஏற்படுத்திய அழிவை மீளக் கட்டியெழுப்புவதற்கும் சர்வதேச ஒத்துழைப்பு அவசியப்படுகிறது. அதேபோன்று நாமும் அதிகபட்ச வளங்களை அக்கருமத்துக்காக ஒதுக்க வேண்டியுள்ளது.

இன்று சர்வதேசங்களும் இலங்கையில் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்த எத்தனிக்கின்றன. இந்த எத்தனிப்புக்கு அவதானத்துடன் நாம் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. அந்த வகையில் பைத்தியக்காரத்தனமாக நடந்து கொள்ளாது ராஜதந்திர ரீதியிலேயே நாம் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. கியூபா மீது பொருளாதாரத்தடை விதித்து அந்த நாட்டைத் தமது கட்டுப்பாட்டில்சிக்க வைக்க எத்தனித்ததைப் போன்றதொரு செயற்பாடே இன்று இலங்கை தொடர்பாக முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. எமது அனுபவம், அறிவைப் பயன்படுத்தி விவேக பூர்வமாகச் செயற்படுவதே நாம் இவற்றிலிருந்து மீள்வதற்கு வழி வகுக்கும்.



**கேள்வி:** இருந்த போதிலும் அரசின் சில தரப்பினர் ராஜதந்திர விவேகத்துடனல்லாது, சண்டித்தனத்தாலும் வாய்வீச்சின் மூலமாகவும் இப்பிரச்சினைகளை எதிர்கொள்ள முனைவது பற்றி?

**பதில்:** சர்வதேசத்திடமிருந்து நாம் எதிர்கொள்ளும் சவால்களைச் சமாளித்து வெற்றிகாண இலங்கை இதைவிட விவேக பூர்வமாகச் செயற்படுவது மிக அவசியமானதாகும். வெளிநாடுகளின் அவசரத் தேவை கருதிய குறிக்கோள்களை அவ்வவ் நாடுகளின் மக்களுக்குத் தெளிவுபடுத்தி அவர்கள் மூலமாகவே அவற்றைத் தோல்வியுறச் செய்ய வேண்டியுள்ளது. அந்த மக்களை எமக்கு ஒத்துழைப்பு வழங்குபவர்களாக்கிக் கொள்ளும் செயற்பாடொன்றை நாம் முன்னெடுக்க வேண்டியுள்ளது. அத்தோடு இந்தியா, சீனா, ரஷ்யா உள்ளடங்கும் எமக்கு ஒத்துழைப்பு வழங்கும் நாடுகளிடமிருந்து அதிகபட்ச ஆற்றலை எமக்கு இலாபம் கிட்டும் விதமாகத் திசை திருப்பிக் கொள்வதும் அவசியமாகிறது. இது விடயத்தில் இந்தியா விஷேட இடத்தை வகிக்கின்றது. இந்திய மத்திய அரசைப் போன்றே தமிழ் நாட்டு அரசு உள்ளடங்கும். இந்திய மக்களது மனங்களை வென்றெடுக்கும் விதத்தில் செயற்பட எமது கவனம் திரும்ப வேண்டியுள்ளது.

அதேபோன்று, சர்வதேசத்திலிருந்தும் எமக்கு எதிராக முன் வைக்கப்படும் குற்றச் சாட்டுக்களுடன் சம்பந்தப்படும் எமது நாட்டின் நிலைப்பாடு, அதாவது ஜனநாயகவாதம், மனித உரிமைகள், ஊடகச் சுதந்திரம் போன்றவற்றை மேலும் மேன்மையுறச் செய்யும் பொறுப்பும் கூட எமக்குண்டு. இருந்த போதிலும் இவை தொடர்பாக எமக்கு அழுத்தங்களை விடுப்பதற்கு எத்தரப்புக்கும் உரிமையில்லை. ஆனாலும் எம்மிடம் சிறு அளவில் தானும் தவறுகள் இருக்கும் பட்சத்தில் நாம் அவற்றை நேர்சீர்செய்து கொள்வது அவசியமாகும். இது எமக்கு விடுக்கப்படும் அழுத்தங்கள் குறைவடைய வழிசமைக்கும். அத்துடன் அத்தகைய அழுத்தங்களுக்கு முகம் கொடுப்பதும் எமக்கு இலகுவாகிவிடும். எனவே சர்வதேச அழுத்தங்கள் ராஜ தந்திர ரீதியில் தீர்த்துக் கொள்ளப்பட வேண்டியுள்ளவையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அழிந்துபோகும் தமிழர்.....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆடைக்கட்டுப்பாடு உள்ளே செல்வதற்கு மட்டுமே என்பதால் ஆலய வீதிகளில் அரைகுறை ஆடைகளோடு அலைவதற்கு எவ்வித தடையும் இருக்கப்போவதில்லை. எனவே ஆலயச் சூழலில் குறிப்பாக ஆலயத்தின் நான்கு வீதிகளிலும் இத்தகைய கலாசாரத்துக்கு ஒவ்வாத ஆடைகளோடு கூடி நின்று கும்மாளமிடும் கூட்டத்தை எதுவுமே செய்யமுடியாத நிலையே தோன்றியிருக்கிறது. அத்துடன் யாழ்ப்பாணத்துப் பெண்களின் தற்கால 'தேசிய உடையாக' சுடிதார், பஞ்சாபி என்பனவே மாறியிருக்கின்றன. பெரும்பாலன விஷேட வைபவங்களில் இளம் பெண்கள் சேலைக்குப் பதில் இவற்றையே அணிந்து வருகிறார்கள். ஆனால் அதற்கும் தடை வந்துவிட்டதால் அவர்களும் சேலைக்கே மாறியாக வேண்டிய நிலை நல்லூரில் ஏற்பட்டுள்ளது.

ஆயினும் ஏ9 பாதை திறப்பாலும், யாழ்ப்பாணத்தை வெகு வேகமாக விழுங்கிக் கொண்டிருக்கும் நவீனத்துவத்தாலும் நமது பண்பாடு, கலாசாரம் என்பவெல்லாம் அழிகின்றதே என்று ஆற்றாமையால் துடித்துக் கொண்டிருந்தோர்க்கெல்லாம் நல்லூர்த் திருவிழாவில் கலாசார உடைகளை அணிந்து வருவோருக்கு மட்டுமே அனுமதி என்ற அறிவிப்பு ஒரு நல்ல அறிகுறியை தந்துள்ளது.

"தமிழின் கடவுளாகக் கொள்ளப்படுகின்ற கந்தன், அழிந்து வருகின்ற தமிழ்க் கலாசாரத்தைக் காப்பதற்காக செய்துள்ள ஒரு திருவிளையாடலே இது. இந்த முறை திருவிழாவுக்காக முருகன் தந்த வரமும் இதுதான்" என்று இந்த நடைமுறைபற்றி சொல்கிறார் ஒரு முருகபக்தர். இதுபோலவே ஏனைய கலாசார சீரழிவுகளையும் தடுத்து நிறுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கு நல்லூர் ஒரு ஆரம்பப் புள்ளியாக அமையட்டும்.


### விற்பனைக்கு

4அடி அகலம், 6அடி உயரம், 4கதவுகள் உள்ள முற்றிலும் சில்வர் நல்ல நிலையிலுள்ள குளிர்சாதனப் பெட்டி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 0214903025

### கட்டாக்காலி கால்நடை

நந்தாவில் பகுதியில் (02) இரண்டு பசு மாடுகள் பிடிபட்டுள்ளன. உரிமையாளர்கள் மூன்று நாள்களுக்குள் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்
விவசாய சம்மேளனம்,
கோண்டாவில் மேற்கு.

### EDWARD MAKES

GEM

நோ வாத எண்ணெய்

சகல விதமான நோவு, வீக்கம், கண்டல், சுளுக்கு, நாரி, கழுத்து, கை கால் பிடிப்பு, தீச்சுட்டபுண், பித்தவெடிப்பு, நெகச்சுத்து நீங்கும். மாடுகளுக்குண்டாகும் சகல வீக்கங்களும் குணமாகும். Releives all pain aches and rheumatic inflamation

**பல்வலித் தைலம்:** பல்வலி, பல்லுக்கொதி, பல்லுநோ, வாய் மணம், பல்பூச்சி போன்றவற்றிற்கு உடனடி நிவாரணி. சிறிதளவு பஞ்சில் தைலத்தினை நனைத்து நோ உள்ள இடத்திலிட்டு சிறிது நேரம் கடித்து வைத்திருக்க நோ நீங்கும். சிறிதளவு தைலத்தினை ஆறிய வெந்நீரில் விட்டு வாய் கொப்பளிக்க வாய்மணம், பல்லழற்சி நீங்கும்.

**கோரோசனைக் குளிசை:** குழந்தைகளிற்குண்டாகும் மலபந்தம், முறுக்கு, சளி, சளிக்கட்டு, மேல் கொதி, மண்டைக்கொதி, உடல்சூடு, மலக்கட்டு, சலக்கட்டு ஆகியவையும் வேறு குழந்தை நோயும் தீரும்.

**றெட் ஓயின்மென்ற்:** அவியல், நீர்ச்சிரங்கு, புண், புரை, பருக்கள், பித்தவெடிப்பு, சுட்டு, படுவன், அக்கி,கிரந்தி, தலை அவியல், சிரங்கு, சொறி, படுக்கைப்புண், தீச்சுட்டபுண், வெட்டுக்காயம், உரேஞ்சல், வட்டக்கடி, அரைக்கடி, சகலதையும் குணமாக்க வல்லது.

எட்வேட் தயாரிப்புக்கள் எல்லா மருந்துக்கடைகளிலும் கிடைக்கும்

வைத்திய கலாநிதி கபிரியேல் எட்வேட் (L.A.M.P, R.I.M.P)
ஆலோசகர்: வைத்திய கலாநிதி திருமதி யஸ்ரின் யூட் (B.S.M.S)
63, குருசோ வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
0212228171/0772300510, edwardmakes@yahoo.com

# யாழ்ப்பாணம் ⟷ கொழும்பு

## அதிசொகுசு பஸ்சேவை

இதோ... யாழ்ப்பாணம், கிளிநொச்சிப் பயணிகளுக்காக




★மிகக் குறைந்த கட்டணத்தில் சௌகரியமான பயணம்
★பாதுகாப்பான விரைவான களைப்பற்ற பயணம்
★யாழ்ப்பாணத்திலிருந்தும் கொழும்பிலிருந்தும் தினமும் மாலை 7.45 மணிக்குச் சேவைகள் ஆரம்பம்.
★கிளிநொச்சி மக்களும் சொகுசாகப் பயணிக்க வசதி

ஈஸ்வரன் போக்குவரத்துச் சேவையின் அதிசொகுசுப் பயணத்திற்கு முந்துங்கள்...!

வடமராட்சி மக்களுக்கான நற்செய்தி தங்கள் ஆசன பதிவுகளைப் பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

மருதம் தொலைத்தொடர்பு நிலையம்
மத்திய மகா வித்தியாலய வீதி,
நெல்லியடி. 021 2263210/0212263195

இல.06,
ராம் தொலைத்தொடர்பு நிலையம்
நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

ESWARRAN
Traders & Transport Service

இல.115, 69,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212222813/2224317/077386[illegible]

இல.01, கரடிப்போக்கு,
கிளிநொச்சி. (செலான் வங்கிக்கிளை அருகில்)
தொ.பே: 02122853[illegible]
பக்ஸ்: 0212285307

இல.201B, டாம் வீதி,
கொழும்பு-12
தொ.பே: 0112433889
பக்ஸ்: 0112435247

(சி/569330)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி அமைச்சரவைக் கூட்டத்தினால் அந்தப் பிரதேச மக்களுக்கு ஏதும் கிடைத்ததா?

கடந்த வாரம் (ஜூலை 14 ஆம் திகதி) ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமது அமைச்சரவைக் கூட்டத்தைக் கிளிநொச்சியில் நடத்தி வரலாற்றுச் சாதனை புரிந்திருக்கின்றார். முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு நாட்டின் அரசுத் தலைவர் ஒருவர் கிளிநொச்சி மண்ணிலே காலடி எடுத்து வைத்த சம்பவமும் அன்றுதான் நிகழ்திருக்கின்றது. 'முடியாதது எனப் பலரும் நினைத்த ஒன்றைத் தாம் முடித்து வைத்ததாக' அரசுத் தலைவர் பெருமிதம் கொள்வதில் தவறில்லை. அந்தப் பெருமிதத்தின் வெளிப்பாடே கிளிநொச்சியில் நடைபெற்ற இந்த அமைச்சரவைக் கூட்டமும், அரசுத் தலைவரின் கிளிநொச்சி விஜயமும்.

முன்னர் இந்தப் பிரதேசம் முழுவதும் விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டில் இருந்தது. அவர்களின் நிர்வாகக்கட்டமைப்புக்கள் யாவும் இங்கேதான் அமைந்திருந்தன. அரசாங்கத்தினால் எந்தவிதக் கட்டுப்பாடுகளையும் இந்தப் பிரதேசத்திலே விதிக்க முடியவில்லை. கிட்டத்தட்ட வேறு ஒரு நாட்டைப்போலவே அகன்ற வன்னிப் பிரதேசம் தோற்றமளித்தது. ஆனால் வன்னி இறுதி யுத்தத்தின் பின்னர் நிலைமைகள் தலைகீழாக மாறிவிட்டன.

ஒரு காலத்தில் கிளிநொச்சி என்றாலே பதறித் துடிக்கும் தென்பகுதி ஆளும்வர்க்கத்தினர் இன்று அந்த மண்ணை மிதித்துப் பார்ப்பதில் ஒருவித வெறியுணர்வுடன் செயற்படுகிறார்கள்.



அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல ஒருபடி மேலேபோய் 'கிளிநொச்சியில் நடத்தப்பட்ட அமைச்சரவைக் கூட்டம் தொடர்பான செலவினங்களைக் கணக்கீடு செய்ய வேண்டியதில்லை' என்று கூறியுள்ளார். அமைச்சரவைக் கூட்டங்களை நடத்துவதன் மூலம் பிரதேச மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளை நேரில் கண்டறிந்து கொள்ளமுடியும். புலிகளினால் கடந்த காலங்களில் நிர்வாகத் தலைநகராக அறிவிக்கப்பட்ட கிளிநொச்சியில் அமைச்சரவைக் கூட்டத்தை நடத்துவதன் மூலம் இலங்கையில் தற்போது எந்தவிதமான பிரச்சினைகளும் கிடையாது என்ற செய்தியை உலக சமூகத்திற்கு எடுத்தியம்ப முடிந்ததாகக் குறிப்பிட்டுள்ளார் - அமைச்சர்.

இன்று ஏதோவொரு நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் அமைச்சர்களும், ஆளுங்கட்சியில் உச்ச செல்வாக்குப்பெற்ற பிரமுகர்களும் வடபகுதி நோக்கிப் படையெடுத்த வண்ணம் உள்ளனர்.

யுத்தத்திற்குப் பின்னரான இப்பகுதியின் நிலைபற்றி சாதாரண தென்பகுதி பொதுமக்கள் அறிய விரும்புவது போன்று இவர்களும் அறிய விரும்பியிருக்கலாம். அல்லது விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து வடபகுதி முழுவதையும் அரச கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்ட பெருமிதத்தில் இப்பிரதேசத்தில் உலாவர விரும்பியிருக்கலாம். எது எப்படியிருப்பினும் இவர்களது வருகையை நியாயப்படுத்துவதற்கான காரணங்கள் பல இங்கே தயாராக உள்ளன என்பதுதான் உண்மை.

**மக்களின் மனக்காயம் ஆறுவதற்கு கால நிர்ணயம் செய்யமுடியாது**

மூன்று தசாப்தங்களாக இப்பிரதேசம் வளர்ச்சி ஏதுமின்றி அழிவுகளின் எச்சங்களைத் தாங்கி நிற்கின்றது. கொடிய யுத்தத்தின் வடுக்கள் மறைய ஆண்டுகள் பல தேவைப்படலாம். ஆனால் பாதிக்கப்பட்ட இப்பிரதேச மக்களின் மனக்காயங்கள் ஆறுவதற்கு கால எல்லை நிர்ணயம் செய்ய முடியாது. அவை ஆறாத காயங்களாகவே அவர்களுடன் மண்ணோடு மண்ணாக மறைந்தும் போகலாம்.

வன்னி இறுதி யுத்தம் முடிவடைந்து ஆண்டு ஒன்று கடந்து

## வரிசையாக அடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்ற நிதி ஆதாரங்கள் இருக்கின்றனவா...?

விட்டது. ஆனால் இதன் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்கள் இன்னமும் அவல நிலையிலேயே வாழ்கின்றனர். உறவுகளை இழந்த துயரம் ஒருபுறம், சொத்துச் சுகங்களை இழந்த துன்பம் மறுபுறம் இவர்களை வாட்டிக் கொண்டிருக்கின்றது. சுயமாக உழைத்து, வயிறார உண்டு சொந்த வீட்டில் மகிழ்ச்சியாக வாழ்ந்த இந்த மக்கள் வெட்ட வெளிகளிலும், தகரங்கள், தடிகளுக்குள்ளும் தமது வாழ்க்கையைத் தொலைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் முள்வேலி முகாம்களில் அடைக்கப்பட்டிருந்த கதையும் நீளமானது.

ஆனால் தென்னிலங்கை அரசியல் வாதிகளோ இப்போது இவர்களுக்கு முன்னார் போய் நின்று கொண்டு வெறும் 'வாய்ப்பந்தல்' போட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே 'வன்னியில் அழிக்கப்பட்ட வீடுகளுக்கு மாற்றீடாகப் புதிய வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான நிதிவளம் அரசாங்கத்திடம் இல்லை, வன்னியில் மீள்குடியேறிய மக்களுக்கு விவசாயம் செய்ய உதவிகள் வழங்கப்படும். அவர்கள் பயிர் அறுவடையை முடித்த பின்னர் அதிலிருந்து கிடைக்கும் பணத்திலிருந்து வீடுகளைக் கட்டிக் கொள்ளலாமென அரசாங்கத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டதன் பின்னணியில் புதிய 'வாய்ப்பந்தல்கள்' இந்த மக்கள் மத்தியில் எடுபடுமா என்பது கேள்விக்குரியதல்ல.

**சொந்த இடங்களுக்குச் சென்று சூனியத்தைக் காண நேர்ந்தது**



அரசுக்கெதிரான யுத்தத்தில் ஈடுபட்டவர்கள் என்பதற்காக விடுதலைப் புலிகளை அழித்தமையை அரசாங்கம் நியாயப்படுத்துகிறது. விடுதலைப்புலிகள் ஏன் போராடுவதற்கு உந்தப்பட்டவர்கள் என்பது வேறு விடயம்.

ஆனால் வன்னிப் பிரதேசத்திலே வாழ்ந்த மக்கள் என்ன பாவம் செய்தார்கள்? அவர்கள் ஏன் இவ்வளவு மோசமாகத் தண்டிக்கப்பட வேண்டும்? ஆயிரக்கணக்கான மக்கள் கொன்றொழிக்கப்பட்டனர். எண்ணிக்கைதெரியாதோரைக் காணவில்லை. ஏராளமானோர் தமது அங்கங்களை இழந்து நடைப்பிணங்களாக மாறியுள்ளார்கள். மக்களின் வாழ்விடங்கள் யாவும் அழிக்கப்பட்டுள்ளன. மீளக் குடியேறியவர்கள் தமது சொந்த இடங்களுக்குச் சென்று வெறும் சூனியத்தையே காண முடிகின்றது.

கடந்த தேர்தல் காலங்களின்போது வலி.வடக்கிலுள்ள பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக அரசியல்வாதிகள் அக்கறை காட்டியமையை அவதானிக்க முடிந்தது. ஏதோ தேர்தலுக்கு முன்னரேயே தமது சொந்த இடங்களுக்குச் தாம் செல்ல முடியுமென்ற நம்பிக்கை இடம்பெயர்ந்த மக்களிடம் தோன்றியது. ஆனால் இதற்கும் அரசாங்கத்தின் சார்பில் ஆப்பு வைக்கப்பட்டுள்ளது. அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்றும் பேச்சுக்கே இடமில்லையென்று ஆணித்தரமாக அறிவித்திருக்கிறார். நாட்டின் பாதுகாப்புக்கே முதலிடம், மற்றவையெல்லாம் பிறகுதான் என்று தெளிவாகக் கூறிவிட்டார். இந்த நிலையில் தமது சொந்த இடங்களில் குடியேறும் இடம்பெயர்ந்த மக்களின் கனவுகளும் கனவாகவே முடியப்போகிறது.

இத்தகைய முனைப்பு ஒருபக்கம் இருக்க வீதிக்கு வீதி ஒவ்வொரு இடத்திலும் வங்கிக் கிளைகளும், தனியார் நிறுவனங்களும் புதிதாகப் பல்கிப் பெருகின்றன. ஏதோ வடபகுதி மக்களுக்காகத் தாங்கள் பாடுபடுவதான ஒரு தோற்றப்பாட்டை வெளிப்படுத்துகின்றன. ஆனால் இவையாவும் தமது சொந்த இலாபங்களுக்காகவே கிளைகளை நிறுவுகின்றன என்பதே இங்கு பொதுவாகப் பேசப்படுகிறது.

**அபிவிருத்திக்கான நிதி ஆதாரங்கள் அரசிடம் உண்டா?**

கடந்த 30 வருடங்களாக அழிவுகளைத் தவிர அபிவிருத்தி என்பதைக் காணாத வடபகுதி இன்று நாட்டின் ஏனைய பகுதிகளோடு ஒப்பிடும்போது மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. 1981 ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கையின் இரண்டாவது பெரிய நகரமாகத் திகழ்ந்த யாழ்ப்பாண நகரம் இன்று இரட்டை இலக்கங்களுக்குள் அடக்கப்பட்டுவிட்டது. எங்கு நோக்கினும் அழிவுகளின் எச்சங்கள் தான் மிஞ்சிக் காணப்படுகின்றன. இதற்கிடையில் பல்லாயிரக் கணக்கான கோடி ரூபாக்கள் கொட்டப்பட்டு யாழ்ப்பாண மாநகரை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் தயாரென அண்மையில் அறிவிக்கப்பட்டிருந்தது. அதுவும் 20 வருட காலத் திட்டமெனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதற்கு முன்னாலும் இதைப்போன்ற அறிவுப்புக்கள் வெளியாகியிருந்தன. அவைபோலவே இப்போதைய அறிவிப்பும் அறிவுப்புடனேயே நின்று விட்டாலும் ஆச்சரியம் ஒன்றும் இல்லை! எத்தனை ஆயிரம் கோடிகளுக்கும் திட்டங்கள் தீட்டலாம். ஆனால் அவற்றை நிறைவேற்றி வைப்பதற்கு வேண்டிய நிதி ஆதாரங்களை இந்த நாடு கொண்டுள்ளதா என்பதை முதலில் நோக்க வேண்டும். யுத்தத்தினால் தமது இருப்பிடங்களை இழந்த மக்களுக்கு சிறு வீடுதானும் அமைத்துக் கொடுப்பதற்கு நிதியில்லையெனக் கூறும் அரசாங்கமும் அமைச்சர்களும் இத்தனை கோடிகளுக்கும் எங்கே போவார்கள்? வட பகுதிக்கான ரயில்சேவை, லக்சபானா மின்சாரம், இரணைமடுத் தண்ணீர், காங்கேசன்துறை சிமெந்து ஆலை திறப்பு விழா போன்றவையும் வெறும் அறிவுப்புக்களுடன் அப்படியே நிற்கின்றன. தற்போது இவற்றின் தாமதங்களுக்கு வெவ்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன.

ஆகவே இவையெல்லாவற்றையும் தொகுத்து நோக்கும்போது வடபகுதி மக்களின் அவலங்கள் தீருவதற்கான காலம் இன்னமும் குறைந்த காலப்பகுதியிர் கனியாகாது என்பது வெள்ளிடை மலையாகத் தோன்றுகிறது. எதனை வேண்டி யுத்தநிலை இங்கு உருவானதோ அது

**- ராஜராஜன் -**

இன்று மறக்கப்பட்ட நிலையில் உள்ளது.

ஆகவேதான் யுத்தத்தினால் சீரழிக்கப்பட்ட வன்னிப் பிரதேசத்தில் அமைச்சரவைக் கூட்டத்தை நடத்துவதனாலோ, அமைச்சர்களும் அரச பிரமுகர்களும் அடிக்கடி கால் பதிப்பதனாலோ எவ்வித பயனும் விளையாது என்பதுதான் உண்மை. ஏதிலிகளாக வாழும் இந்த மக்களின் அவல நிலைகளைக் களைவதற்கு மனச் சுத்தியுடன் செயற்படும் மனப்பான்மைதான் இன்றைய தேவை.


இதைவிடுத்து வெறும் வாய் வார்த்தைகளால் அளந்துவிட்டுச் செல்வதில் எவ்வித பயனும் விளையாது. இதை ஆளும் தரப்பினர் உணரும்வரை ஒன்றல்ல பத்து அமைச்சரவைக் கூட்டத்தை கிளிநொச்சியில் நடத்தினாலும் பயனெதுவும் கிடைக்கப்போவதில்லை. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு மக்களது இடப்பெயர்வு வாழ்வு அனுபவத்தை வெளிச்சம் போட்டுக் காட்டும் ஆங்கில நூல் "வேர்ல்ட் விண்ட்"

நூல் பெயர்: "The Whirlwind"
நூல் வகை: நாவல் (ஆங்கிலம்)
ஆசிரியர்: ஐயாத்துரை சாந்தன்
பதிப்பு: V.U.S. பதிப்பகம், சென்னை (2010)
பக்கங்கள்: 179
இந்திய விலை: ரூ. 100

ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் ஆக்க இலக்கியப் படைப்புகளுக்காக சாகித்திய விருது பெற்ற சாந்தன் அவர்களது முதலாவது ஆங்கில நாவல் "The Whirlwind". இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின்னரான காலப்பகுதியில் தமிழர் வாழும் பகுதிகளில் இந்திய அமைதிப் படையினரின் நிலைகொள்ளல் தொடர்பாக ஜுலை மாதம் 1987ஆம் ஆண்டு நான்கைந்து நாள்கள் இடைவெளியினூடு இடம பெற்றவொரு சுற்றிவளைப்பு இராணுவ நடவடிக்கையையும் அதனை ஒட்டிய இடப்பெயர்வு அனுபவத்தையும் கூறும் ஓர் அரசியல் நாவல் இந்த "Whirlwind".




இலங்கை இனப்பிரச்சனையில் இந்தியத் தலையீடு தொடர்பாக (குறிப்பாக 1987 இந்திய இலங்கை ஒப்பந்தம் நிகழ்ந்த காலப்பகுதி தொடர்பிலான) ஆக்க இலக்கியம் சாராத (non-fiction) படைப்புகளும் ஆய்வுகளும் ஏராளமாக வெளிவந்துள்ளன. இவற்றில் பெருமபாலானவை அக் காலப்பகுதியில் கடமையாற்றிய இந்திய இராஜதந்திரிகள் இராணுவ உயரதிகாரிகளது மற்றும் ஊடகவியலாளர்களது நினைவுக் குறிப்புகளாக அமைநதுள்ளன. இது தொடர்பில் தமிழர் தரப்பில் இக்காலப் பகுதி தொடர்பில் ஆய்வு அல்லது ஆவணப்படுத்தும் வகையிலான முயற்சிகள் மிகக் குறைவு அல்லது இல்லை என்றே கூறலாம்.

இக்காலப்பகுதி தொடர்பிலான ஆக்க இலக்கியங்கள் என்று பார்க்கும் பொழுது தமிழ் ஆக்க இலக்கியத்தில் பல படைப்புக்கள் வெளிவந்தமை ஆச்சரியப்படுவதற்கில்லை. 1980 களுக்குப் பின்னரான ஆக்க இலக்கியப் படைப்புகளினது முனைப்பு கூடுதலாகத் தமிழரது போராட்டச் சூழல் பற்றிய பிரதி பலிப்புகளாகவே இருந்துள்ளன. சாந்தன் அவர்களது தமிழ் ஆக்க இலக்கியங்கள் இந்தியப் படையினரது நிலைகொள்ளல் பற்றி அதன் ஆரம்ப காலத்தி லிருந்தே பேசி வந்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

### "Whirlwind" இன் அரசியல்

இயல்பானதொரு மொழிநடையில் சாதாரண மக்களுக்கிடையிலான உரையாடலினூடாக வெளிவருகின்ற அரசியலை, Whirlwind இல் பதிவு செய்யும் சாந்தன் அதேவேளை பல்வேறு பாத்திரங்களினூடு எமது அரசியல் தொடர்பிலான தனது பார்வையையும் முன்வைக்கின்றார். மக்கள் மத்தியில் இந்திராகாந்தி மீதிருந்த ஈர்ப்பு, அவரது இறப்பின் பின்னரான இந்திய அரசியலை அவரது அரசியலோடு ஒப்பிட்டு அங்கலாய்க்குமொரு அரசியல் பார்வை (பக்.31), இந்தியப் படையினரை வரவேற்ற மனநிலையும் அது சொற்ப காலத்தில் வெறுப்பாக மாறிய அரசியல் மனபாங்கும் (பக்.69), இலங்கை இராணுவத்தை இந்திய இராணுவத்தோடு ஒப்பிட்டு பின்னையதை அதிகமாக வெறுத்த மக்களது மனநிலை (பக்.24) போன்ற IPKF காலப்பகுதியில் நடைபெற்றவை பற்றிப் 'பொதுப் புத்தி' (Common sense) மட்டத்தில் சாதாரணமாகப் பேசப்பட்ட அரசியலை சாந்தன் இயல்பாகப் பதிந்து வைத்திருக்கிறார்.

இப் பொதுப்புத்தி அரசியல், பிரதான அரசியல் நீரோட்டத்தின் விவாதத்தில் வெளிப்படுவது மிகக் குறைவு - வெளிபபடுவது இல்லை என்று கூடச் சொல்லலாம். ஆக்க இலக்கியப் படைப்புக்கள் மூலமாக இவை வெளிக்கொணரப் படலாம் என்பதற்கு இந்த நாவல் ஒரு உதாரணம்.

சாந்தனுடைய தனிப்பட்ட கூர்மைப்படுத்தப்பட்ட அரசியல் தத்துவார்த்தமும் நாவலின் பல பாத்திரங்களூடாக மேற்சொன்ன பொதுப்புத்தி அரசியலை

## நூல் வரிசை

நளினம் செய்யாமல் முன்வைக்கப்பட்டிருப்பதை அவதானிக்கலாம். குறிப்பாகச் சாந்தன் அடையாள அரசியல் (Identity politics) தொடர்பாகக் கொண்டிருக்கும் சந்தேகமும் வெளிப்படையாக நாவலில் சொல்லப்படுகின்றது (பக்கங்கள் 93-96). சாந்தனின் உலக இலக்கியப் பரிச்சயமும் (குறிப்பாக இரஷ்ய இலக்கியத்தில் அவர் கொண்டுள்ள நாட்டமும்) இடதுசாரி அரசியலில் அவர் கொண்டுள்ள பரிச்சயமும் ஒரு சர்வதேசியவாதிக்குரிய சிந்தனைகளாக (Internationalist) வெளிப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது.

மற்றுமோர் இடத்தில் 'political behalfism' த்தைச் சாந்தன சாடுகிறார். எமது சார்பில் போராட்டம் நடத்துவதாகக் கூறிக கொள்பவர்களிடமிருந்து நாம் எம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம் என்று சாந்தனின் ஒரு பாத்திரம் பேசுகிறது. தனியே இந்திய அமைதிப் படையினரைப் பற்றியதாக நாம் இவ்வவதானிப்பைச் சுருக்க முடியாது. அரசியல் விளிம்பின் நுனியில் ஒரு பரிதவித்த சமூகமாக மாறியுள்ள நாம் இது பற்றி சிந்திக்க வேண்டும். நல்ல இலக்கியங்களுடைய உண்மையான சேவை இதுதான்.

40 வருடகால சமூக இலக்கியச் செயற்பாட்டைத் தாண்டி வந்துள்ள சாந்தன் அரசியல் "ism" கள் எவற்றுள்ளும் அடைகப்பட விரும்பாதவர் என்பதனைப் பதிவு செய்துள்ளார். ஏலவே இடதுசாரி/சர்வதேசியவாத சிந்தனை மரபின் தாக்கங்கள் இந்நாவலில் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளேன். பின் நவீனத்துவ மரபின் சாயல்களையும் காண லாம் என்பதையும் இங்கு சேர்க்கலாம். (தேவர் என்ற பாத்திரத்தினூடாக 'நிலையான உண்மை' என்றொன் றில்லை என்ற சாந்தனின் வாதத்தை உதாரணமாகப் பார்க்கலாம் (பக்.33).

### 'Whirldwind' இல் இடம்பெயர் வாழ்வியல் தொடர்பாக

இது தொடர்பில் 'Whirldwind' முன்வைக்கும் மூன்று விடயங்களை முன்னிலைப்படுத்த விரும்புகின்றேன்.

முதலாவது, இடப்பெயர்வு வாழ்வு அனுபவமானது அது உருவாக்கித்தரும் ஒரு இறுக்கமான சமூக வெளி காரணமாகத் தமிழர் சமூகத்தில் நிலவிவரும் சாதிக் கட்டுமானங்களை உடைக்கின்றதா அல்லது நெகிழ்வடையவோ அன்றி உறுதி செய்யவோ பங்களிக்கின்றதா என்பது தொடர்பானதாக. 'Whirldwind' இல் முத்து என்ற பாத்திரத்தினூடாக (பக்கங்கள் 162-165) இந்தக் கேள்வியை சாந்தன் எம்முன் நிறுத்துகிறார். சாந்தனைப் பொறுத்த வரையில் வாழ்வா சாவா என்ற நிலை வரும போது (existential threat) இந்த வேறுபாடுகள் தளர்வடைகின்றன. இந்த அனுபவத்தைப் பொதுமைப்படுத்த என்ன செய்ய வேண்டும் என நாம் சிந்திக்க வேண்டும்.

இரண்டாவது, எமது சமூகம் பெண்களது நிலை தொடர்பாகக் கொண்டிருக்கும் பார்வை பற்றியது. மற்றவர்களோடு இடம்பெயராது சற்றுக் காலம் தாழ்த்தி வரும் கலா (எனும் பாத்திரம்) பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டிருக்கக் கூடுமோ என்று ஏனைய சில பெண பாத்திரங்கள் சந்தேகப்படுவதும் அது பற்றிக் கலாவுடன் கலந்துரையாட முற்படுவதையும் சாந்தன் கவனமாக எடுத்துக் காட்டியுள்ளார். போர்ச் சூழலில் பெண்கள் எதிர்நோக்கும் சவால்களை தனக்கேயுரிய சுருக்க நேர்த்தியோடு சாந்தன் சொல்லியிருக்கிறார்.

மூன்றாவது, சமூகத் தலைமைத்துவம் தொடர்பாக எமது சமூகத்தில் மாறிவரும் பெறுமான மதிப்பீடு தொடர்பாக. தேவி (மனைவி) மற்றும் ராஜு (கணவன்) என்ற கதாபாத்திரங்களுடான கலந்துரையாடலை முன்னறுத்தி சாந்தன் சொல்வதை ப.133 இல் காண்க.

தொடர்ந்தேர்ச்சியாக எமது சமூகத்தில நிலவி வரும் பாதுகாப்பற்ற சூழல் காரணமாக சமூகப் பிரச்சினைகளில் அக்கறை கொள்வது என்பது விரும்பப்படுவதில்லை என்ற செய்தியை சாந்தன் பதிவு செய்கிறார். "ஏன் நமக்கு இந்த சோலி" என்ற சமூக மனநிலை எம்மத்தியில் ஆழ ஊடுருவியுள்ளது. எமது சமூகத்தில் எதிர்காலம் பற்றிக கவலைப்பட வைக்கும் மனநிலை இது. இதிலிருந்து நாம் எப்படி வெளிவரப் போகின்றோம் என்பதனைப் பற்றிய சிநதனையும் விவாதமும் இன்றைய அவசரத் தேவைகள்.

### Whirldwind இன் மொழி நடை

பின்காலனித்துவ ஆங்கில மொழிப் பாவனையில் ஆங்கிலத்தை அதன் பிரித்தானிய வடிவில் (British English) தான் உபயோகிக்க வேண்டும் என்ற தூய்மை வாதம் உடைக்கப்பட்டுள்ளது. ஆங்கிலத்தை அதன் பல்வேறு சமூகத்திற்காட்பட்ட பல்வகைப் பாவனையை "World Englishes" என்று அழைக்கின்றனர். தமிழ்ப் பழமொழிகள் பலவற்றையும் ஆங்கிலத்தில் எழுத்துப் பெயர்ப்பு (transliterate) செய்து நாவலின் பல இடங்களில் பயன்படுத்தியுள்ளார். சாந்தனுடைய தமிழ் மொழி நடையில் நான் அதிகம் இரசித்தது அவரது 'economy of language' – மொழியைக் கவனமாகவும் சுருக்கமாகவும் பாவிக்கும் ஆற்றல். அதனை அவர் ஆங்கிலத்திலும் காட்டியுள்ளார்.

– குமாரவடிவேல் குருபரன்.

# அமரர் மணியம் கணபதிப்பிள்ளை

## அவர்களின்

## மூன்றாம் ஆண்டு நினைவு தினம்



அன்புகொண்ட திருவுருவம் மறைந்து
ஆண்டுகள் மூன்று ஆனாலும்
பாசமுடன் காட்டிய அன்பை
பார் அழிந்தாலும் நாம் மறவோம்
அறிவு ஊட்டி ஆழவேர் பதிக்க வைத்த
உம் அடி தொழுவோம்.

சாந்தி, நெல்லண்டை,
பருத்தித்துறை.

மணியம் கணபதிப்பிள்ளை
ஞாபகார்த்த நிதியம்

# நம் வாழ்வு மார்த்தா போன்றதா? மரியா போன்றதா?

இன்றைய நற்செய்தியில் மார்த்தா, மரியா சகோதரிகளின் வீட்டிற்கு இயேசு சென்றபோது மார்த்தா இயேசுவை வரவேற்பதையும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் நிகழ்வுகளையும் நாம் [லூக் 10:38-42] தியானிக்கிறோம்.

இதில் மார்த்தாவின் செயற்பாடுகளை நாம் பார்க் கின்றோம். அவள் இயேசுவை வரவேற்பதுடன் மட்டுமன்றி அவருக்கும் சீடர்களுக்கும் உணவு தயாரிப்பது உட்பட பற்பல வீட்டு வேலைகளைத் தனியாகப் பரபரப்புடன் ஈடுபட்டுக் கொண்டிருந்த நிலையில் தனக்கு உதவி செய்ய முன்வராமல் இயேசுவின் காலடியில் அமர்ந்து அவர் சொல்வதைக் கேட்டு கொண்டிருந்த மரியா மீது சினங்கொண்டு " ஆண்டவரே நான் பணிவிடை செய்ய என் சகோதரி என்னைத் தனியேவிட்டு விட்டாளே. எனக்கு உதவி புரியும்படி அவளிடம்கூறும்" என்று இயேசுவிடம் முறையிடுகிறார். இதிலிருந்து நாம் விளங்கிக் கொள்ளக்கூடியது என்னவென்றால், மார்த்தா உலகு சார்ந்த காரியங்களுக்குத்தான்முன்னுரிமை கொடுக்கிறாளே தவிர, தேவ வார்த்தைக்கு செவி மடுத்து விண்ணக தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுகின்ற வழிமுறைகளை அறிவதில் நாட்டம் குறைந்தவளாகக் காணப்படுகின்றாள். இதனால்தான் பிற்காலத்தில் தேவ வார்த்தையும் தேவ சித்தத்தையும் அவளால் அறிந்து கொள்ள முடியவில்லை. ஏனெனில் மார்த்தா, மரியாவின் சகோதரர்ரான இலாசர் மரித்த நான்காம் நாள் இயேசு இவர்களது வீட்டிற்கு வந்து கொண்டிருந்த பொழுது அவரை எதிர்கொண்ட மார்த்தாவிடம் " உன் சகோதரன் உயிர்த்தெழுவான்" என்று இயேசு கூறுகின்ற அந்த தேவ வார்த்தையைப் புரிந்து கொள்ளாத மார்த்தா " இறுதிநாளில் உயிர்த்தெழும் போது அவனும் உயிர்த் தெழுவான்" [யோவா11:23-24]என்று கூறுகின் றாள்.பின்பு இராசரின் கல்லறைக்குச் சென்ற இயேசு " கல்லை அகற்றுங்கள்" என்று கூறியபோது அதன் மூலம் நிகழப் போகின்ற தேவ சித்தத்தை புரிய முடியாத மார்த்தா " ஆண்டவரே நான்கு நாள் ஆகி விட்டது. நாற்றமடிக்குமே"[யோவா11:39] என்று கூறுகின்றாள். மார்த்தா தேவ வார்த்தைக்குச் செவிமடுத்து விண்ணக தந்தையின் திருவுளத்தை நிறைவேற்ற விரும்பியிருந்தால் மனித சிந்தனைக்குரிய பதில்கள் அவளி டமிருந்து வந்திருக்காது.




அதேவேளை மரியாவின் செயற்பாடுகளைப் பற்றி நாம் பார்க்கின்ற போது அவள் முற்றும் முழுதாக தேவ வார்த்தைக்கு செவிமடுத்து விண்ணக தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றும் வழிமுறைகளை அறிவதில் ஆர்வம் கொண்டவளாக இருக்கின்றாள். இதனால்தான் மரியாவைப் பற்றி முறையிட்ட மார்த்தாவிடம் இயேசு நீ பலவற்றைப் பற்றி கவலைப்படுகிறாய். ஆனால் தேவையானது ஒன்றே. மரியா நல்ல பங்கைத் தேர்ந்து கொண்டாள். அது அவளிடமிருந்து எடுக்கப்படாது என்று கூறுகின்றார். இந்த நல்ல பங்கை மரியா தேர்ந்து கொண்டதனால் அவள் ஆண்டவரின் அன்புக்குப் பாத்திரமாகின் றாள். இதனால்தான் இயேசுவின் தலையில் மரியா நறுமணத் தைலத்தை ஊற்றிய சம்பவத்தின் போது " உலகம் முழுவதும் எங்கெல்லாம் இந் நற்செய்தி அறிவிக்கப்படுமோ அங்கெல்லாம் இப்பெண் செய்ததும் எடுத்துக் கூறப்படும். இவரும் நினைவு கூரப்படுவார் [மத் 26:6-13] என்று உறுதிபட தம் சீடர்களுக்கு இயேசு எடுத்துரைக்கிறார். மேலும் இயேசு மரித்து உயிர்தெழுந்த பின்பு முதலில் மரியாவுக்குத் தோன்றி அவளைத் தமது உயிர்ப்பின் முதல் சாட்சியாக மாற்றுவதுடன் அவள் மூலமாகச் சீடர்களும் தமது உயிர்ப்பின் செய்தியை அறிந்துக் கொள்ளச் செய்கிறார்.[மாற் 16:9-11] இன்று எமது கிறிஸ்தவ வாழ்க்கை மார்த்தா போன்று உலகு சார்ந்த வாழ்வாக இருக்கின்றதா? அல்லது மரியா போன்று தேவ வார்த்தைக்குச் செவிமடுத்து விண்ணக தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுகின்ற வாழ்வாக இருக்கின்றதா? என்று எம்மை நாமே பரிசோதித்து முடிவெடுப்போம்.

-க. அருள்நேசன், புதுமை மாதா ஆலயம், குருநகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அச்சுவேலியில் மேற்கொள்ளப்படவிருக்கும் அபிவிருத்தி முதலீடு குறித்து ஆராய்வதற்காக நேற்று யாழ்.வந்த முதலீட்டுக் குழு இலங்கை முதலீட்டுச்சபையின் வடலைய அலுவலகத்தில் கலந்துரையாடல் நடத்திய வேளை எடுக்கப்பட்ட படங்கள்.

முதலீட்டுக் குழுவினர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அமைச்சின் செயலாளர் எஸ்.சிவஞானசோதி, கைத்தொழில் சபையின் தலைவர் ஜெயம்பதி பண்டாரநாயக்க ஆகியோர் அமர்ந்திருப்பதை முதலாம் இரண்டாம் படங்களிலும் -

நிகழ்வில் பங்கேற்ற துறைசார் பிரதிநிதிகளில் ஒரு பகுதியினரை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள்: உமா)

# அச்சுவேலியில் முதலீட்டு ஊக்குவிப்பு வலயம்; ஆராய்வதற்கு முதலீட்டாளர் குழு யாழ். வந்தது

## உட்கட்டமைப்பு வசதிகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை18

அச்சுவேலியில் மேற்கொள்ளப்படவிருக்கும் அபிவிருத்தி முதலீட்டில் பங்கேற்பதற்குரிய சாதக பாதக நிலைமைகளை ஆராய்வதற்காக முதலீட்டாளர்கள் குழு நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தது.

இலங்கை முதலீட்டுச் சபையும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையும் இணைந்து மேற்கொள்ளும் இந்த முதலீட்டு அபிவிருத்தியில் பங்கேற்பதற்கென மாஸ் ஹோல்டிங், டிமெக்ஸ் கார்மன்ட்ஸ், ஒமேகாலைன், ஒஷிக் அப்பிரல்ஸ், பிரான்டெக்ஸ் ஆகிய ஐந்து நிறுவனங்களின் முதலீட்டாளர்களே வருகைதந்துள்ளனர்.

இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் ஜெயம்பதி பண்டாரநாயக்க தலைமையில் இந்தக் குழுவினர் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சகிதம் அச்சுவேலியில் அமைக்கப்படவிருக்கும் அபிவிருத்தி முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்துக்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்திற்கு நேரில் சென்று ஆராய்ந்தனர்.

அங்குள்ள உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பாக விரிவாக அவர்கள் ஆராய்ந்தனர்.

அதனைத் தொடர்ந்து இலங்கை முதலீட்டுச் சபையின் வடவலய அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலிலும் இந்தக் குழுவினர் பங்கேற்றனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் நீர்விநியோகம், மின்வசதி, வீதிப் போக்குவரத்து போன்றவை தொடர்பாக விரிவாக துறைசார் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடப்பட்டது.

முதலீட்டுச் சந்தர்ப்பத்தில் வேலைவாய்ப்பு, அவர்களது நலன்குறித்தும் கலந்துரையாடப்பட்டதுடன் தற்போதுள்ள உட்கட்டமைப்பு வசதிகள் மேலும் விருத்தி செய்யப்படவேண்டுமெனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தக் குழுவினருடன் இலங்கை முதலீட்டுச் சபையின் வடவலய அலுவலகத்தின் சிரேஷ்ட பிரதித் தலைவர் ஆர்.ஜெயமேனன், இலங்கைக் கைத்தொழில் சபையின் பிரதித் தலைவர் குலசேகரா, பொது முகாமையாளர் ஜஸ்மின் மன்னபெரும, பாரம்பரிய மற்றும் சிறுகைத்தொழில் அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

இவர்களுடன் இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய பொதுமுகாமையாளர் எஸ்.முத்துரட்ணானந்தம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை யாழ்.அலுவலக பிரதம பொறியியலாளர் சுதாகரன், நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பிரதம பொறியியலாளர் உள்ளிட்ட இன்னும் பலர் அதில் கலந்துகொண்டனர். (ஒ-14)

# உடுவிலில் நாளை ஆங்கில தினப் போட்டிகள்

வலி.வடக்கு,ஜூலை18

யாழ்.மாவட்டக் கல்வி வலயங்களின் பாடசாலைகளுக்கு இடையேயான மாவட்ட மட்ட ஆங்கில தினப் போட்டிகள் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

தரம் 6 தொடக்கம் 11 வரையான மாணவர்களுக்கு பாத்திரமேற்று நடித்தலும் தரம் 10 தொடக்கம் 13 வரையான மாணவர்களுக்கு தனி நடிப்பும் நடைபெறவுள்ளன. (ஒ-86)

# உதைபந்தாட்டம்; இன்று அரையிறுதி ஆட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை18

தியாகிகள் தினத்தை முன்னிட்டு பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பு நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.15 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள அரை இறுதியாட்டத்தில் -

பாடும்மீன் வி.க. அணி எதிர் சென். மேரிஸ் வி.க. அணி மோதுகின்றன.(ஒ-23)

# புதிதாக தெரிவாகியுள்ள இ.போ.ச. சாரதிகள் காப்பாளருக்கான பயிற்சிப் பட்டறை

## நாளை கோண்டாவில் அலுவலகத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை18

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்டுள்ள சாரதிகள், காப்பாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை நாளை திங்கள் தொடக்கம் இ.போ.ச. கோண்டாவில் காரியலயத்தில் நடைபெறும்.

கடந்த நவம்பர் மாதம் 5ஆம் திகதி நடைபெற்ற நேர்முகப்பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட எட்டு சாரதிகளுக்கும் ஆறு காப்பாளர்களுக்குமே இந்தப் பயிற்சிப் பட்டறை நடைபெறவுள்ளது.

தெரிவுசெய்யப்பட்டோரின் விவரம் வருமாறு:-

ந.சிவரூபன், சி.சுதாகரன், கு.றொபேட், கி.ஜயந்தராஜன், கு.பகீரதன், நா.சசீவகுமார், செ.மணிவண்ணன், செ.கணேசமூர்த்தி, கு.கஜீபன், சி.நவநீதன், இ.புவிதரன், ரா.பகீரதன், ரா.கபில்தாஸ், வ.நவசீலன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் சிபார்சு செய்யப்பட்ட பிரஸ்தாப 14 பேரையும் உரிய பயிற்சிக் கட்டணம் மற்றும் ஆவணங்களுடன் நாளை சமுகமளிக்குமாறு இ.போ.ச.(வடக்கு) பிராந்திய முகாமையாளர் க.கணேசபிள்ளை அறிவித்துள்ளார். (ஒ-323)

# கூட்டுறவு தின விழா

மூளாய்,ஜூலை18

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கான சங்கானைப் பிராந்திய சபையின் ஏற்பாட்டில் சர்வதேசக் கூட்டுறவுத் தின விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

வட்டு.மூளாய் வீதியில் உள்ள சிறி கணேச சனசமூக நிலைய கேட்போர் கூடத்தில் சபையின் தலைவர் வி.செல்வரத்தினம் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக கூட்டுறவு அவிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் கலந்துகொள்வார். (ஒ-99)

# வயாவிளான் புனித யாகப்பர் திருவிழாவுக்கு 20 வருடங்களின் பின் படையினர் அனுமதி

## அடுத்த ஞாயிறு திருச்சொரூப பவனி

கொழும்புத்துறை,ஜூலை18

அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள வயாவியான் புனித யாகப்பர் ஆலயத்திற்கு மக்கள் சென்று வருடாந்த திருவிழாவைக் கொண்டாட பாதுகாப்புப் படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

கடந்த 20 வருடங்களான இடம்பெயர்ந்த நிலையில் வாழும் இப்பகுதி மக்கள் தமது ஆலய விழாவைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளையும் ஒழுங்குபடுத்தலையும் யாழ்.மறைமாவட்ட குரு முதல்வர் அருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகள் மேற்கொண்டுள்ளார்.

திருவிழாத் திருப்பலி எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெற்று திருச்சொரூப பவனியும் இடம்பெறும்.

ஆலயத்திற்கு அச்சுவேலிச் சந்தியூடாகச் செல்ல ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை, விசேட வாகன வசதி ஒழுங்குகள் குறிப்பிட்ட இடங்களில் இருந்து அன்றைய தினம் காலை 7.30 மணிக்கு புறப்படும் என்றும் -

யாழ்ப்பாணம் சென்.சாள்ஸ் மகா வித்தியாலயம் முன்பாகவும் கோப்பாய் புனித மரியாளர் ஆலயத்திலும் பருத்தித்துறை புனித அந்தோனியார் ஆலயத்திலும் இருந்து பஸ்கள் புறப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-135)

# புலிகள் மீள அணிதிரளுகின்றனரென வெளிவரும் தகவல்கள் பொய்யானவை

## அப்துல் காதர் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை18

தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் அணி திரளுகின்றனரென வெளியாகும் தகவல்களில் உண்மையில்லை - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் அரசு சார்ந்த கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல் காதர் தெரிவித்துள்ளார்.

கனடா, இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் வாழும் புலி ஆதரவாளர்கள் நிதி திரட்டி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படும் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த கால நடவடிக்கைகளால் தமிழ் - முஸ்லிம் மக்கள் பெரும் அதிருப்தியுடன் காணப்பட்டனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அபிவிருத்தித் திட்டங்களால் தற்போது மறுமலர்ச்சி ஏற்பட்டு வருகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் பெரும் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளன எனவும், சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் இந்தப் பணிகளில் கூடுதல் பங் களிப்பை வழங்கும் எனவும் - அவர் கூறினார்.(அ-சி)

# கந்தவனக் கடவையில் ஒலிப்பேழை வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜூலை18

பொலிகண்டி கந்தவனக் கடவை முருகன் ஆலயத்தில் இன்று முற்பகல் 10 மணிக்கு கல்யாண வேலவரின் புகழ் கூறும் ஒலிப்பேழை வெளியிட்டு வைக்கபடவிருக்கின்றது.

'ஆசைகொண்டேன் கந்தவனக் குமர' என்ற ஒலிப்பேழையே வெளியிட்டு வைக்கப்படுகின்றது. (1)

# நாகை மீனவர்கள் ஆர்ப்பாட்டம்

சென்னை,ஜூன்18

தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையினரின் தாக்குதலைக் கண்டித்து நாகை மீனவர்கள் நேற்று கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாகையைச் சேர்ந்த மீனவர் செல்லவன் கடந்த 7ஆம் திகதி இலங்கைக கடற்படையினரின் தாக்குதலில் பலியானார். இதைக் கண்டித்து நேற்று பத்தாவது நாளாகவும் வெள்ளப்பள்ளம் மீனவர்கள் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடலில் மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்காத மத்திய, மாநில அரசுகளைக் கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் கோஷங்கள் எழுப்பப்பட்டன. (ஒ)

# ஜனாதிபதி தங்கக் கேடய கரபந்தாட்டம்

கைதடி,ஜூலை18

ஜனாதிபதி தங்கக் கேடயத்திற்கான கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்று விரைவில் நடைபெற்றவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட கழகங்கள் தமது பதிவுகளை பகுதி கிராம சேவையாளர் அல்லது தம்மிடம் மேற்கொள்ளுமாறு தென்மராட்சிப் பிரதேச விளையாட்டு அலுவலர் எஸ். முகுந்தன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இப்போட்டிகள் யாவும் யாழ்.மாவட்டத்திலுள்ள சகலபிரதேச செயலர் பிரிவுகளிலும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். (ஒ-க-288)

# லயன்ஸ் உறுப்பினர்களின் பதவியேற்பு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூலை18

தீவக லயன்ஸ் கழகத்தின் 12 ஆவது புதிய உறுப்பினர் சபையின் பதவியேற்பு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் லயன்ஸ் கழகத்தின் 306 பி 1 வலயத்தின் உப ஆளுநர் லயன் எஸ்.எஸ்.தங்கராஜா, லயன் ஜேயசோதி ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்வர். (ஒ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

சுன்னாகம் ஜெட் மோட்டோஸ்க்கு அருகாமையில் கே.கே.எஸ் வீதியில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 011-2365822



## WANTED

WATERFRONT LAND

Any size, up to 100 acres, in areas like MANNAR, JAFFNA (under developed areas)

Plase E-MAIL details to :SamSriLanka@Gmail.com or FAX to: (011) 273-11-77 or POST to: Mr. Sam, 65A, Hotel Road, Mount Lavinia. or PHONE: 0773-629-111

FLEX Graphic


## கைத்தொழிற் கடன்; கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 18

கைத்தொழிற்கடன் பெற்றுக்கொள்வது சம்பந்தமான கலந்து ரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கைத்தொழில் அபிவிருத்திச் சபையில் பதிவு செய்தவர்களும், வங்கி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டு பயன் பெறலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இக்கலந்துரையாடலில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், யாழ். அரச அதிபர் இமெல்டாசுகுமாரும் பங்கேற்கவுள்ளனர். (ஒ-311-312)




A/L இல் 3 pass உள்ளதா?

2014ல் நீங்களும் ஒரு பொறியியலாளர்

இந்தியாவில் பட்டப்படிப்பு

அரிய வாய்ப்பு

இறுதிச் சந்தர்ப்பம்

ஏழ்மூடாக மட்டுமே

உடனடியாக தொடர்பு கொண்டு உங்கள் அனுமதியை உறுதிப்படுத்துங்கள்

SRI VENKATESWARA COLLEGE OF ENGINEERING AND TECHNOLOGY

Chittoor.

Affiliated to Jawaharlal Nehru Technological University, Anantapur and Recognized by AICTE, New Delhi.

V4 Educational Consultancy (Pvt) Ltd

"Catalyst for your higher studies"

Head Office- #7-1/1,W.A.Silva mawatha, Wellawatte, Colombo-06, 0773867257

Branch- #10, Palaly Road, Jaffna. 0217200999

Web: http://www.v4edu.com Email: mail@v4edu.com


## அறிவித்தல்

### மானிப்பாய் கிராம உப அலுவலகம்

ஆதனப் பெயர் மாற்றம்
வட்டாரம் 01
அண்ணாமலை வீதி,
ஆதன இல.51

வட்டாரம் 01, அண்ணாமலை வீதி, ஆதன இலக்கம் 51இல் அமைந்துள்ள ஆதனமானது பொன்னர் சுப்பையாவும் பெண் இராசாத்தியும் என்பவர்களால் நன்கொடையாக வழங்கப்பட்டு பிரான்சிஸ் இராசதுரை சந்திரகுமார் பெண் பிரேமரதி என்பவர்களால் குறித்த ஆதனம் - 1979 / 11.11.1997ஆம் திகதி எழுதப்பட்ட உறுதிமூலம் தமக்குச் சொந்தம் என்பதைத் தெரியப்படுத்தி, எமது ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை மாற்றம் செய்வதற்காக பெயர் மாற்றத்துக்கு விண்ணப்பித்துள்ளனர். இவ்வாதனத்துக்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால், அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள், ஆவணங்களுடன் எழுத்துமூலமாக 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு எவராலும் எவ்வித உரிமையும் கோரப்படாதவிடத்து பிரான்சிஸ் இராசதுரை சந்திரகுமார் பெண் பிரேமரதி எனும் பெயருக்கு மேற்குறித்த ஆதனம் பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

செயலாளர்,
வலி.தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.

(101131)


உங்களை உணருங்கள் "ஜெய்குருதேவ்" அன்பில் மலருங்கள்



ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்

அவர்களின்

வாழும் கலைப் பயிற்சி

THE ART OF LIVING

மானிப்பாயில் மீண்டும் ஆரம்பமாகிறது, உடல், உள ஆரோக்கியத்துக்கான

★ சுதர்சனக்கிரியா ★ தியானம்
★ மூச்சுப்பயிற்சி ★ எளிய யோகா ஆகியவை உள்ளடக்கியது

அறிமுக உரை

இடம் : மஸ்கன்ஸ் வீடு, கல்லக் ஒழுங்கை, மானிப்பாய். (செலான் வங்கி எதிர் ஒழுங்கை)

காலம் : நாளை (19.07.2010) திங்கட்கிழமை

நேரம் : மாலை 5.15 மணி

தொ.பே : 0777740593

(101133)


யாழ். மாவட்ட சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ-து)

### வருடாந்தப் பொதுச்சபைக்கூட்டம் - 25.07.2010

மேற்படி கூட்டம் 25.07.2010ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10 மணிக்குக் கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் சமாசத்தலைவர் சு.சிவசுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது. கூட்ட அறிவித்தலும் பொதுச் சபைக் கூட்ட பிரதிநிதிக்கான அதிகாரக் கடிதமும் தொடர்புள்ள அங்கத்துவ சங்கங்களுக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தற்போது ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்ட சங்கங்களுக்குக் கூட்ட நிகழ்ச்சிநிரல், 01.01.2009-31.12.2009 காலப்பகுதிக்கான கணக்காய்வு அறிக்கைகள் யாவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எம்முடன் தொடர்பு இல்லாத அங்கத்துவ சங்கங்கள் இவற்றை சமாசக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

637, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (சி/569317)

செயலாளர், யாம்.மாவ.சி.க.கூ.ச.சமாசம்.


## பதவி வெற்றிடம்

நாட்டின் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப துறையில் முன்னணியில் திகழ்கின்ற நிறுவனமொன்று தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்துறையில் இலக்கினை அடைவதில் கைகோர்ப்பதற்கு ஆர்வமுள்ளவர்களை தேடுகின்றது.

### விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் நிறைவேற்று உத்தியோகத்தர் – வட மாகாணம் (நெல்லியடி, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார்)

- திருப்திகரமான ஆளுமைமிக்க, சிறந்த பொதுத்தொடர்பு ஆற்றலுடைய இளமையான சுறுசுறுப்புமிக்கவர்கள்.
- தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தேர்ச்சியுடையவர்கள்
- விற்பனைத் துறையிலான அனுபவம் மற்றும் பிராந்தியத்திலுள்ள கூட்டு நிறுவனங்களுடனான நெருக்கமான உறவு என்பன மேலதிக தகைமைகளாகும்

தெரிவு செய்யப்படுபவர்களுக்கு காப்புறுதி மற்றும் சந்தைப் போட்டித் தரகு (Commission) உள்ளடங்கிய கவர்ச்சிகரமான சம்பளப்பொதி காத்திருக்கின்றது.

### கணனி வன்பொருள் தொழிநுட்பவியலாளர் – வட மாகாணம் (நெல்லியடி, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார்)

- கணனி மற்றும் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத் துறையில் சிறந்த அறிவுள்ளவர்கள்.
- இதற்கு சமமான பதவியில் 1-2 வருட அனுபவமிக்கவர்கள்.
- அனைத்து உள்ளகப் பகுதியினருடனும் வாடிக்கையாளர்களுடனும் திறன்மிக்க உறவை பேணக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.
- வேலைப்பளுவுக்கு மத்தியிலும் குறைந்தளவு மேற்பார்வையின் கீழும் பணியாற்றக்கூடியவர்களாகவிருத்தல்.

உங்களது சுயவிவரத்தினை hanif@pchouse.lk இற்கு அனுப்பவும் அல்லது யாழ்ப்பாண அல்லது வவுனியா கிளை முகாமையாளரிடம் கையளிக்கவும்



PCH

Benchmark ICT

# 1,K- Stanly Road, Jaffna. Tel: 021 4920572

# 210, Kandy Road, Vavunia. Tel: 024 4589572


## மரண அறிவித்தல்

### கிருஷ்ணமணி மாரிமுத்து



புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 780, ஆஸ்பத்திரி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணமணி மாரிமுத்து நேற்று (17.07.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் மாரிமுத்துவின் அன்பு மனைவியும், வனிதாவின் அன்புத் தாயாரும், S.இராஜதுரையின் (கணக்காளர்) மாமியாரும், மயூரன் (Lewis Browns), சிந்துஜா (Ginasena & Co.), சுகன்ஜா (Union Bank, Colombo), சிவஜா (bcbs - Colombo), ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

780, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (101122)

தகவல்: S.இராஜதுரை (கணக்காளர்- S.Rajathurai & Co.)


THE HALO TRUST

The HALO Trust is a British Mine clearance NGO and has been wor king in Sri Lanka since 2002 clearing mines and other explosive remnants of war. We are currently looking to recruit a workshop manager for our Kilinochchi location.

This role will involve management of all workshop staff and distribution of workload, liaising with Fleet Manager and Office Manager in Jaffna headquarters, management and control of vehicle spare parts, admini stration of documents for all vehicles and machinery.

You will be working with national and international staff and will be required to report to our Kilinochchi expatriate manager.

Good spoken English required. Experience in management and admini stration.

Computer literate in MS Word, Excel and Outlook.

Salary is dependent on experience and ability.

Interested candidates should submit their bio-data, contact details and a brief summary of relevant experience to:

**The HALO Trust**
**12 Nallur Cross Road**
**Nallur, Jaffna**
Email: 4ail@halosrilank-a.org

**All applications must be submitted no later than Saturday 31st July 2010**

**HALO Trust believes in equal opportunities, both sexes and all backgrounds are encouraged to apply. Please note that only short listed candidates will be contacted and invited for the interview.**


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# கருணாநிதி தமக்குரிய கடமையை சரிவரச் செய்ய முன்வருவாரா?

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு உகந்த அரசியல் தீர்வு ஒன்று கிடைக்குமா என்ற தற்போதைய இருண்ட சூழ்நிலையில், ஒரு மெல்லிய மின்னற் கீற்று உள்ளடங்கிய காட்சி தென்படுகிறது. இந்தியாவின் பக்கத்திலிலிருந்து அது தெரிகிறது.

எங்கள் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதில் அந்த நாட்டின் மத்திய அரசு ஏதோ ஒரு வகையில், ஏதோ ஒரு காரணத்தை முன்னிறுத்திச் செயற்பட முனைந்திருக்கிறது.

இந்திய அரசுத் தலைவர்கள், அவர்களின் அதிகாரிகள் இலங்கை அரசுத் தலைவரையும் ஏனைய அமைச்சர்களையும் சந்திக்கும் போதெல்லாம் இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துவது வழக்கம்.

அண்மைக் காலமாக இனப்பிரச்சினைக்கான தீர்வு எவ்வாறு அமையவேண்டும் என்பதனை இலங்கைத் தலைவர்களிடம் இந்தியா உச்சரித்து உரைத்து வருவதையும் அவதானிக்கமுடிகிறது. இலங்கை அரசுத் தலைவர்கள் அவற்றை உள்வாங்குகிறார்களா, இந்தியத் தலைவர்களின் கருத்துடன் ஒத்துப்போகிறார்களா என்பதற்கான அறிகுறி எதுவும் இல்லை.

இந்தியா அவசரப்படுவதுபோன்று இனப்பிரச்சினைக் குத் தீர்வுகாணமுடியாது. அது 'நூடில்ஸ்' தயாரிப்பது போன்றதல்ல என்று ஜனாதிபதி மஹிந்த இந்தியப் பத்திரிகையாளர் ஒருவருக்குச் 'சூடு' போட்டிருந்தார். அது மறைமுகமாக இந்தியாவைச் சாடுவதாக அமைந்தது.

அதாவது இனப்பிரச்சினைத் தீர்வை விட, தாம் முன்னுரிமை கொடுத்துச் செய்யவேண்டிய பல அலுவல்கள் உள்ளன என்ற தோரணையில் ஜனாதிபதி மஹிந்த கருத்துத் தெரிவித்திருந்தார்.

அதேபேட்டியில் வடக்கு - கிழக்கு மாகாணங்களை மீண்டும் இணைக்குமாறு யார் சொன்னாலும் - குறிப்பாக இந்தியா சொன்னாலும் கூட - அதற்கு இடமளிக்கப்போவதில்லை என்று மஹிந்த உரத்து உறுக்கிக் கூறியிருந்தார்.

இவற்றின் மத்தியிலும் ஈழத்தமிழர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதில் இந்தியா பங்களிக்க விரும்புகிறது என்பதனை அந்நாட்டின் பிரதமர் மன்மோகன் சிங் செயலளவில் காட்டியிருக்கிறார். அதற்கு முன்னோடியாக, ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்கு, நிரந்தரமான தீர்வு காண்பதற் குத் தக்க ஆலோசனைகளைத் தருமாறு தமிழக முதல்வர் மு.கருணாநிதியிடம் கேட்டிருக்கிறார் மன்மோகன் சிங்.

இலங்கைத் தமிழர்கள் கௌரவத்துடனும் சுயமரியாதையுடனும் அங்கு வாழ்வதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளையும் எனது அரசு உறுதியாக மேற்கொள்ளும். அதன்பொருட்டு - இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காண்பதற்குரிய நடைமுறைகளையும் தங்களின் ஆலோசனைகளையும் பயன்படுத்திக் கொள்வேன் - என்று பிரதமர் மன்மோகன் சிங் கருணாநிதியிடம் தெரிவித்திருக்கிறார்.

இலங்கை விடயத்தில், இனப்பிரச்சினைத் தீர்வில் ஏதாவது செய்தாகவேண்டும் என்று இந்திய அரசு - இந்தியப் பிரதமர், மனதார நினைத்திருக்கிறார் என்பது ஓரளவு புலப்படுகிறது. நல்லது. இந்தியா இப்போதும் தனது நலனை நாடி இலங்கையுடன் கூட்டுச் சேர்ந்து தமிழர்மீது எதனை யும் திணித்துவிட முயலலாகாது. 1987ஆம் ஆண்டு ராஜீவ் - ஜே.ஆர். ஒப்பந்தம் போன்ற, தமிழ் மக்களுக்கு அரைகுறைத் தீர்வுத் திட்டம் எதனையும் இப்போதைய இந்திய அரசு கையிலெடுக்காது என நம்புகிறோம். முன்னரைப் போன்று தனது விரலைச் சுட்டுக்கொள்ள முனையாது என்றும் கருதலாம்.

இலங்கைத் தமிழர் பிரசினைக்குரிய தீர்வுக்கு - நிரந்தர அரசியல் தீர்வுக்கு - தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதியிடம் ஆலோசனைகளைக் கேட்டிருப்பது வரவேற்கத்தக்கதும், மிகவும் பொருத்தமானதும் ஆகும்.

ஆனால்-

முதல்வர் கருணாநிதி இந்தச் சந்தர்பத்தில், ஈழத்தமிழருக்கு அரசியலில், வாழ்வியலில் விடிவைத் தரவல்ல ஆலோசனைகளைப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் வழங்க வேண்டும், வழங்குவார் என்றே இங்கு வாழும் தமிழர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

கடந்த ஜூன் மாதத்தில் கோவையில் நடைபெற்ற உலகச் செம்மொழி மாநாட்டில் முதலமைச்சர் மு.கருணா நிதியால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்த ஒன்றும் அடங்கும்.

இலங்கைத் தமிழர்கள் தமது மொழி - இன உரிமையை நிலை நாட்டிக் கொள்வதற்கு நீண்ட நெடுங்காலமாகக் கோரி வரும் அரசியல் தீர்வு காணப்படாதமை யும், அவர்களுக்கு அவ்வப்போது அளிக்கப்படும் உறுதிமொழிகள் முறையாக நிறைவேற்றப்படாதமையும் கோவையில் நடைபெறும் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் திரண்டுள்ள லட்சோப லட்சம் உலகத் தமிழர்களுக்கு வேதனையைத் தருகிறது -

எனவே, இலங்கைத் தமிழர்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும், உடனடியாகத் தீர்வு காண்பதற்கேற்ற முனைப்பான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு இலங்கை அரசை இந்திய மத்திய அரசு வலியுறுத்த வேண்டு மென்று இந்த மாநாடு கேட்டுக் கொள்கிறது - என்பதாகும்

அதன் தொடர்பாக இம்மாதம் முற்பகுதியில்(ஜூலை 3ஆம் திகதி) இந்தியப் பிரதமருக்கு எழுதிய கடிதம் ஒன்றிலும் ஈழத்தமிழர்களுக்கு நியாயமான தீர்வு ஒன்றைத் காண்பதற்கு இந்திய அரசு முனைப்புடன் செயற்படவேண்டும் என்று முதல்வர் கருணாநிதி கேட்டிருந்தார்.

ஈழத்தமிழரின் அரசியல் உரிமைகள் தக்க வகையில் கிடைப்பதற்கு, நடைமுறைப்படுத்த வேண்டியன என்று கருதும் அரசியல் வழிமுறைகளின் அடிப்படைகளை, விதிமுறைகளை விரிவாகவும் விளக்கமாகவும் முதல்வர் கருணாநிதியிடம் இருந்து பிரதமர் மன்மோகன் சிங் எதிர்பார்க்கிறார் என்பது புலப்படுகிறது.

இலங்கை அரசிடம் தாம் முன்வைக்கும் யோசனைக ளில் தமிழக அரசின் பங்கும் இருக்கவேண்டும் என்று கருதியும் பிரதமர் மன்மோகன் முதல்வரின் ஆலோனைகளை கேட்டிருக்கக்கூடும்.

ஆகையால் ஈழத்தமிழர்கள் தமக்குரிய அரசியல் உரிமைகளை அனுபவிக்கக்கூடியதான சிபார்சுகளை - விதிமுறைகளை - பிரதமர் மன்மோகன் சிங்குக்குச் சிபார்சு செய்வது கருணாநிதியின் பொறுப்பும் கடமையாகும். அந்தப் பொறுப்பை முதல்வர் கருணாநிதி முழு அளவில் நிறைவேற்றுவாரா? தயக்கமும் குழப்பமும் இன்றி இந்த நல்ல சந்தர்ப்பத்தை அவர் தவறவிடமாட்டார் என்று எதிர்ப்பார்க்கலாமா?

## போர்க்குற்றங்கள் அம்பலமாகிவிடும் என்ற அச்சத்தில்

# ஆஸி.வரும் ஈழத்தமிழர்களை புலிகளுடன் தொடர்புடையோர் எனப் பொய்ப் பிரசாரம்

## ஐ.நாவில் இலங்கைக்கான முன்னாள் பேச்சாளர் கோர்டன் வைஸ் கூறுகிறார்

கன்பரா,ஜூலை18

அவுஸ்திரேலியாவுக்கு அகதிகளாகச் செல்லும் ஈழத்தமிழர்கள் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்று கூறுவது பொய்யான தகவல் என ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் பேச்சாளர் கோர்டன் வைஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட யுத்தக் குற்றச்சாட்டுகளுக்கு சாட்சிகளாக மாறிவிடுவார்கள் என்ற அச்சத்திலேயே திட்டமிட்டு அரசாங்கம் அவர்கள் மீது குற்றஞ்சுமத்துவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இலங்கையின் பயங்கரவாத தடுப்புப் பிரிவின் அதிகாரி ஒருவர் அவுஸ்ரேலியா செல்கின்ற இலங்கைத் தமிழர்களுள் அனேகமானவர்க் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டைத் தெரிவித்திருந்தார்.

எனினும் இந்தக் குற்றச்சாட்டை நிராகரித்துள்ள கோர்டன் வைஸ், அவர்கள் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் அல்லர் என்று கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கும் அல்குவைதா அமைப்புக்கும் தொடர்பு இருப்பதாக அவுஸ்ரேலியாவுக்கான இலங்கைத் தூதுவர் சேனக வலகம்பாயவினால் கூறப்படுகின்ற குற்றச்சாட்டுகளும் ஆதாரமற்றவை என்றும் கோர்டன் வைஸ் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் அரசாங்கம் ஏன் இலங்கைத் தமிழர்கள் அவுஸ்ரேலியாவின் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானவர்கள் என்ற நிலைப்பாட்டை வலியுறுத்துகிறது என அவரிடம் கேட்டபோது -

யுத்த காலத்தின் போது வடக்கில் மேற்கொள்ளப்பட்ட மோசமான இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு சாட்சிகளை இல்லாது செய்ய அரசாங்கம் முனைப்புக்காட்டி வருகிறது. அதற்காகவே இவ்வாறான குற்றச்சாட்டை முன்வைக்கிறது என்று அவர் பதிலளித்தார்.

இறுதியுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் வடக்கில் சுமார் 40ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டதாகவும் அவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

கோர்டன் வைஸ் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதி விடப் பேச்சாளராக இருந்தவர். தமது 14 வருட ஐக்கிய நாடுகள் சபையின் பணியாளராக இருந்த சேவையை நிறைவு செய்துகொண்டு, கடந்த வருடம் தமது சொந்த நாடான அவுஸ்திரேலியாவில் சென்று குடியேறினார்.

இலங்கை அரசாங்கத்தின் அழுத்தம் காரணமாகவே கோர்டன் வைஸ் பதவி விலகியதாகவும் முன்னர் தகவல் வெளியாகியிருந்தமை தெரிந்ததே. (ஓ-1)

# இலங்கைத் தூதரகம் மூடப்படும் வரை போராட்டம் தொடரும் என்கிறார் வைகோ

சென்னை,ஜூலை18

சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகம் இழுத்து மூடப்படும் வரை போராட்டம் தொட ரும்

சிறைமீண்ட வைகோ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கொலை செய்யப்படுவதைக் கண்டித்தும், இலங்கைத் தூதரகத்தை அப்புறப்படுத்தவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தியும் சென்னையில் கடந்த புதன் கிழமை நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கைதான வைகோ, பழ.நெடுமாறன், விடுதலை ராஜேந்திரன், நடராஜன் ஆகியோருக்கு பிணை வழங்கப்பட்டது.

இதயைடுத்து கடலூர் மத்திய சிறையில் இருந்து விடுதலையான வைகோ செய்தியாளர்களிடம் பேசுகையில், இலங்கையில் தமிழர்கள் தொடர்ந்து துன்புறுத்தப்பட்டு வருகின்றனர். தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் அடிக்கடி தாக்கி வருகின்றனர்.

தமிழக மீனவர்களை இந்திய எல்லையிலேயே நுழைந்து, இலங்கைக் கடற்படையினர் தாக்குவதும் கொல்லுவதும் கண்டனத்துக்குரியவை. இதற்கெல்லாம் இந்திய அரசு உடந்தையாக இருக்கிறது. இதற்குக் காரணமான சிங்கள அரசின் தூதரகம் இந்தியாவில் இருக்கக்கூடாது. தமிழகத்தில் இருக்கவே கூடாது. அது அகற்றப்பட வேண்டும் அதுவரை போராட்டம் ஓயாது - என்றார்.

(ஓ-1)

# ஐ.நா. செயலாளரின் குழு தொடர்பான எமது நிலையை வெளியிட காலஅவகாசம் தேவை

## அணிசேரா நாடுகள் தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை18

ஐ.நா. செயலரால் நியமிக்கப்பட்டுள்ள ஆலோசனைக் குழு தொடர்பிலான தமது நிலைப்பாட்டை வெளியிட, மேலும் கால அவகாசம் எடுத்துக்கொள்ளப்படும் என அணிசேரா நாடுகள் தெரிவித்துள்ளன.

அதன் தலைவராக எகிப்தின் ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக் இன்னர் சிற்றி பிரஸ் செய்திச் சேவைக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் தமது நிலைப்பாட்டை ஐ.நா. செயலாளர் பான் கீ மூனுக்கு வெளிப்படுத்துவதற்கான ஏதுநிலைகள் குறித்து தாம் சிந்திப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை இந்தக் குழு தொடர்பில் தமது உறுப்பு நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்துக்கு எதிராக பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், அணிசேரா நாடுகளின் நிரந்தர அங்கத்துவம் வகிக்கின்ற ஐந்து நாடுகளின் பிரதிநிதிகள், இலங்கைக் கட்டுப்பாடுகளை மீறி வெகுதூரத்தில் சென்று விட்டனர் என்றும் அவர் இன்னர் சிற்றி பிரஸுக்குத் தெரிவித்துள்ளனர்.

# யுத்த அபாயம் காணப்படும் நாடுகள் பட்டியலிலிருந்து இலங்கை நீக்கம்

கொழும்பு,ஜூலை18

யுத்த அபாயம் காணப்படும் நாடுகளின் பட்டியலிலிருந்து இலங்கையின் பெயர் நீக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் கடற்பரப்பில் எந்த விதமான தாக்குதல் அச்சுறுத்தல்களோ யுத்த அபாயமோ கிடையாதென உலகின் முன்னணி காப்புறுதி நிறுவனமான லொயிட்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

யுத்த அபாயம் காணப்படும் நாட்டின் கடற்பரப்பிற்குள் பிரவேசிக்கும் கப்பல்களுக்கு விசேட கட்டணம் அறவீடு செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் காலங்களில் இலங்கைக் கடற்பரப்பிற்குள் பிரவேசிக்கும் கப்பல்களிடமிருந்து குறித்த யுத்த அபாய மேலதிகக் காப்புறுதிக் கட்டணம் அறவீடு செய்யப்பட மாட்டாது என காப்புறுதி நிறுவனம் அறிவித்துள்ளது.

எவ்வாறெனினும், வவுனியா முதல் யாழ்ப்பாணம் வரையிலான ஏ - 9 வீதியில் தரைவழித் தாக்குதல் அபாயம் காணப்படுகிறது என அந்தக் காப்புறுதி நிறுவனம் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. (சி)

## நாளை

| | |
|---|---|
| ஆடி3 | 19.07.2010 திங்கட்கிழமை |
| திதி: | : அட்டமி மு.ப.07.59 வரை |
| நட்சத்திரம் | : சுவாதி பி.இ. 04.50 வரை |
| சுபநேரம் | : 12.01 - 1.31 வரை |
| ராகுகாலம் | : 07.31 - 09.01 வரை |

# அறிவின் கேந்திர நிலையமாக இலங்கையை மாற்றவேண்டும்

## ஜனாதிபதி மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை18

நாம் இந்நாட்டை ஆசியாவிலேயே ஆச்சரியமிக்க நாடாக மாற்றும் போது இலங்கையை அறிவின் கேந்திர நிலையமாகவும் மாற்றவேண்டும்.

- இப்படி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் கொழும்பு றோயல் கல்லூரியின் 175 ஆவது ஆண்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசும்போது தெரிவித்தார்.

ஜனாதிபதி தொடர்ந்து பேசும் போது கூறியவை வருமாறு:-

நாம் அறிவை மறந்துவிட்டு ஆசியாவின் ஆச்சரியமிக்க நாடாக இலங்கையை மாற்ற முடியாது. நாம் இதுவரை கணினியை சர்வதேச அறிவைப் பெற்றுக்கொள்வதற்காக மாத்திரமே பயன்படுத்தினோம்.

இருந்தும் இப்போது எமது நாடு அறிவின் கேந்திரமாக மாறும்போது அதன் மறுபக்கத்தையும் பார்க்கவேண்டும். நாம் கணினியில் அறிவைப் பெற்றுக்கொள்வது மட்டுமல்லாமல், கணினியின் மூலம் எமது அறிவை உலகத்துக்கும் வழங்கவேண்டும். எமது தேரவாத பௌத்த நெறி, ஆயுர்வேதம், தேசிய வைத்தியம், தேசிய கைத்தொழில், எமது நாட்டின் சரித்திரம், கலை போன்றவற்றை கணினி மூலம் உலகத்துக்கு வழங்க வேண்டும்.

இந்நாட்டு பாடசாலைகளுக்கு வரும் சகல பிள்ளைகளும் ஞாபகம் வைத்துக் கொள்ளவேண்டிய முக்கிய விடயமொன்றுள்ளது. புத்தக அறிவு மாத்திரம ஒரு மனிதனைப் பூரணப் படுத்துவதில்லை. மனிதனாகவிருந்தால் சவால்களை எதிர்நோக்கும் சக்தி அவனுக்கு இருக்க வேண்டும்.

இந்த உலகத்தில் கல்வி கற்றுத் தேர்ந்த ஒவ்வொருவரும் கல்வி கற்க பெரும் துன்பங்களைத் தாம் அனுபவிக்கிறார்கள் என்று கூறுவதை நான் கேட்டிருக்கின்றேன். இருக்கும் வசதிகள் இருந்தால் கல்வி கற்கத் துன்பப் படத் தேவையில்லை எனச் சிலர் நினைக்கலாம். இல்லை. அது தவறு. எவ்வளவுதான் வசதிகள் இருந்தாலும், கல்வி கற்கத் துன்பப்படத்தான்வேண்டும். விழித்திருந்து, கல்வி கற்க முயற்சி எடுக்க வேண்டும். எவ்வளவு தனவந்தராக இருந்தாலும், கல்வி கற்க சிரமப் படத்தான் வேண்டும்.

- இவ்வாறு ஜனாதிபதி தெரிவித் தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்க ஆணைக்குழு மாத இறுதியில் கிளிநொச்சி வருகிறது

கொழும்பு,ஜூலை18

அரசாங்கம் நியமித்துள்ள தேசிய நல்லிணக்க ஆணைக்குழு உறுப்பினர்கள் இந்த மாத இறுதியில் கிளிநொச்சியில் அரச அதிகாரிகளைச் சந்திக்கவிருக்கின்றனர்.

ஓகஸ்ட் மாத இறுதியில், கிளிநொச்சியில் போரால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கான அமர்வுகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு முன்னோடியாக அந்தப் பிரதேச அரச அதிகாரிகளை ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் சந்திப்பர்.

இந்த மாத இறுதியில் கிளிநெச்சியில் பிரதேச செயலர்கள், அரச அதிகாரிகள் ஆகியோரைச் ஆணைக்குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடுவர்.

ஓகஸ்ட் மாத இறுதியில் அல்லது செப்ரெம்பர் முதல் வாரத்தில் ஆணைக்குழு உறுப்பினர்கள் பொதுமக்களிடம் இருந்து சாட்சியங்களைப் பதிவு செய்வர் என அக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (1)

## களுவாஞ்சிக்குடியில் ரூ.30 லட்சம் கொள்ளைச் சம்பவம்

# வங்கி அலுவலர்கள் விசாரணைக்கு சென்றவேளை பொலிஸ் நிலையத்தின் அருகே கடத்தித் தாக்கப்பட்டனர்

## படுகாயமடைந்த இருவரும் ஆஸ்பத்திரியில்

மட்டக்களப்பு, ஜூலை 18

களுவாஞ்சிக்குடியில் உள்ள தேசிய சேமிப்பு வங்கியின் 30 இலட்சம் ரூபா பணம் கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பாக பொலிஸ் நிலையத்துக்கு விசாரணைக்குச் சென்ற இரு வங்கி அலுவலர்கள் இனந்தெரியாதவர்களின் தாக்குதலுக்கு இலக்காகிப் படுகாயமடைந்தனர்.

இலங்கை வங்கிக்கிளையில் இருந்து தேசிய சேமிப்பு வங்கியின் இரு அலுவலர்கள் எடுத்துச்சென்ற 30 லட்சம் ரூபா பணம் கடந்த வியாழக்கிழமை இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளால் கொள்ளையிடப்பட்டது தெரிந்த்தே .

இச்சம்பவம் தொடர்பான விசாரணைக்காக நேற்றுமுன்தினம் இரு வங்கி அலுவலர்களும் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று கொண்டிருந்தவேளை, அவர்களைப் பொலிஸ் நிலையத்துக்கு அருகில் வழிமறித்த இனந்தெரியாதவர்கள் கடத்திச் சென்றனர்.

மிக மோசமாகத் தாக்கப்பட்ட அந்த இருவரையும் பின்னர் வெவ்வேறு இடங்களில் வீதியில் தள்ளிவிட்டு அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

வீதியில் சென்றவர்கள் படுகாயங்களுடன் காணப்பட்ட இருவரையும் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர்.

இச்சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஒ-1)

# முன்னாள் எம்.பி. பத்மினி விபத்தில் காயம்

கொடிகாமம், ஜூலை 18

கொடிகாமம் இராமாவில் கந்தசுவாமி கோயிலுக்கு அருகில் நேற்றுப்பிற்பகல் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதனும் மற்றும் அவரது கணவரும் காயமடைந்தனர்.

பத்மினி சிதம்பரநாதன் (வயது 56), எஸ்.சிதம்பரநாதன் (வயது 63) ஆகியோரும் மற்றும் இருவரும் இந்த விபத்தில் காயமடைந்தனர்.

யாழ்ப்பாணம் நோக்கி அவர்கள் வந்து கொண்டிருந்த 'ஹைஏஸ்' எதிரே வந்த லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானது எனத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த நால்வரும் முதலில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டனர். (ஒ-1)

## டெங்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கம் அறிவித்துள்ளது.

கடந்த ஆறு மாதங்களில் டெங்கு நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகி 700 பேர் மரணமாகியுள்ளனர் என்றும் சுமார் 10 ஆயிரம் பேர் நோய்பாதிப்புக்குள்ளாகி இருப்பது புள்ளிவிவரங்கள் மூலம் தெரிய வந்துள்ளன என்றும் சுகாதார அமைச்சுத் தெரிவித்துள்ளது. (ஒ-1)

## லங்கா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஞாயிற்றுக்கிழமை பதிப்பில் வெளியான கட்டுரை ஒன்று தொடர்பாக விசாரணை செய்யப்பட்டதாகப் பத்திரிகை நிர்வாகி ஒருவர் தெரிவித்தார். (ஒ-1)

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் மேற்கொண்ட பேச்சுவார்த் தைகளைத் தொடர்ந்து நியமனம் செய்யப்பட்டுள்ள குழு இவ்வாரத்தில் கூடி அரசமைப்பின் 17 ஆவது திருத்தம் தொடர்பாக ஆராயவுள்ள தோடு மேற்படி திருத்தத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள ஆணைக்குழுக்களில் நிலவும் குறைபாடுகள் பற்றியும் கலந்துரையாடப்படவுள்ளது. அக்குறைபாடுகளை விரைவில் நேர்சீர் செய்து இரண்டு மாத காலத்திற்குள் ஆணைக்குழுக்களை நிறுவுவதும் இக்குழுவின் நோக்கமாகும்.

அரசினதும் ஐக்கிய தேசியக் கட்சியினதும் பிரதிநிதிகள் விரைவில் கூடி இது தொடர்பாக ஆராயவுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக தேர்தல் தொகுதி களின் எல்லைகளை நிர்ணயம் செய்யும் ஆணைக்குழு ஒன்றும் லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவும் செயற்படுவது குறித்து முதல் சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் போதே பெரும்பாலும் நிறுவப்படக்கூடும் எனத் தெரியவருகிறது.

தேர்தல் ஆணைக்குழு நிறுவப்படு வதன் மூலம் ஓய்வுபெறும் வயதைக் கடந்துள்ள தேர்தல் ஆணையாளர் ஓய்வில் செல்வதற்கு வாய்ப்பு ஏற்படலாம் என்று அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஒ-206)

## நாடாளுமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை மீறப்பட்டமை தொடர்பாக மன்றின் கவனத்துக்குக் கொண்டுவரவுள்ளோம் என்றும் அவர் கூறினார்.

## பான்-கீ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிய நியமங்களின் பிரகாரம் விரைந்து மீளக்குடியமர்த்த வேண்டும் என்றும் -

* அரசியல் நல்லிணக்கத்தை விரைந்து உருவாக்கிச் செயற்பட வேண்டும் என்றும் -
* போர்க் காலத்தில் இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்த குற்றச் செயல்களுக்குப் பொறுப்புக் கூறவேண்டும் -

என்பனவற்றில் உடனடி நடவடிக்கை எடுத்து நிலைமையை மேம்படுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அவற்றை அடைவதற்கு இலங்கை அரசு பற்றுறுதியுடன் செயற்பட்டு முன்னேற்றம் காணவேண்டும் என ஒப்புக்கொள்ளப் பட்டது.

அவற்றை இனியும் தாமதியாது செயற்பட்டு முன்னேற்றம் காட்டவேண்டும் என்று செயலாளர் நாயகம் அழுத்திக் கூறுவார் - என்றும் இணைப் பேச்சாளர் பர்ஹான் கூறினார். (அ-1)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வுப் பணிகளை அவர்கள் திருப்தி அடையக்கூடியதாகச் செய்வதற்கு எவ்வளவு காலம் செல்லும் என்பதனையும் சிறப்புத் தூதுவர் மூலம் அறிந்துகொள்ள வேண்டும்.

அவ்வாறு கண்டறிந்துகொள்வதன் மூலமே பாதிப்புக்குள்ளான தமிழர்கள், இடம்பெயர்ந்த தமிழர்கள் திருப்தியான, அமைதியான வாழ்க்கைக்கு நாம் வருங்காலதில் எந்த வகையில் உதவலாம் என்பதனைத் தெரிந்துகொள்ள முடியும் - என்றும் முதல்வர் கருணாநிதி தமது நேற்றைய கடிதத்தில் பிரதமரிடம் கேட்டுள்ளார். (அ)


MCITP
Certification & Training Courses
Microsoft CERTIFIED courses Now @ e.com



BIT
சர்வதேச தரம் வாய்ந்த
Microsoft Certified கற்கைநெறிகளும்
BIT கற்கை நெறிக்கான
பதிவுகளும் வகுப்புக்களும் தற்போது
எமது நிறுவனத்தில் நடைபெறுகின்றன.
Call : 0217429005
No.95A Temple Road, Nallur, Jaffna.
No.95 Thavady South, Kokuvil, Jaffna



**இறைச்சிக்கோழி விற்பனை**

நிறை கூடிய புறோயிலர், கல்பேட்ஸ் என்பன மிக மலிவான விலையில் சுத்தம் செய்து தினமும் எந்நேரமும் பெற்றுக்கொள்ளலாம்.

மொத்தமாகவும் விற்பனை செய்யப்படும்.

தொடர்பு : மல்ரி பாம் சென்ரர்,
61, சேர் பொன். இராமநாதன் வீதி, கலட்டி. T.P. 0217912783



**வீடு வாடகைக்குத் தேவை**

யாழ். மாநகரசபை எல்லைக்குள் சிறிய குடும்பத்துக்கு வீடொன்று வாடகைக்குத் தேவை.
தொடர்பு : T.P.:0773620969



**Deutsch, Dutch, French, Italian**

கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ்.கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

Vivekananda Academy
(Centre for International language Studies)
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna.(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்
குறிப்பு: ஒக்ரோபர் மாத ஜேர்மன் எம்பஸி பரீட்சைகளுக்கான Deutsch புதிய வகுப்புக்கள் தற்பொழுது ஆரம்பமாகின்றன.
GOV. Reg. No W/A 76795
T.P : 077 4842464, 021 3216928, 0779927117



**Rotaract Club of Jaffna**

யாழ்ப்பாணம் றோட்டறக்ட் கழகத்தினரால் நடத்தப்படும் க.பொ.த.உயர்தர மாணவர்களுக்கான முற்றிலும் எதிர்பார்க்கை பரீட்சை வழிகாட்டலும்

**மாபெரும் இலவசக் கருத்தரங்கும்**

A/L 2010

காலம்: 19.07.2010 - 30.07.2010 வரை

இடம்: புதிய உயர் கல்லூரி மண்டபம் (ஆரியகுளம்)

கலைப்பிரிவு

| | | |
|---|---|---|
| அளவையியல் : திரு.S.S.மனோகரன் 19.07.2010 காலை 9 மணி | தமிழ்: திரு.குழந்தை 20.07.2010 காலை 9 மணி திரு.A.K.கீர்த்திராஜன் (பகுதி II) மாலை 12 மணி திரு.A.K.கீர்த்திராஜன் (பகுதி I) 21.07.2010 காலை 9மணி | புவியியல் : திரு.பாபு 23.07.2010 காலை 9 மணி |

வர்த்தகப்பிரிவு

| | | |
|---|---|---|
| வணிகக்கல்வி: திரு.P.S.பஸில் (DMI) 23.07.2010, 26.07.2010 காலை 9மணி | பொருளியல்: திரு.S.S.சிறி (DMI) 27.07.2010 28.07.2010 காலை 9மணி | கணக்கீடு : திரு.D.Sam (DMI) 29.07.2010 30.07.2010 காலை 9மணி |

கீழ்வரும் பாடங்களின் கருத்தரங்குகள் நடைபெறும் இடம் பின்னர் அறிவிக்கப்படும்.

| | | |
|---|---|---|
| அளவையியல்: திரு.A.விக்னேஸ்வரன் (கொழும்பு) 25.07.2010 காலை 9 மணி | இணைந்த கணிதம்: திரு.S.சிவகுமார் (BSc.Dip.Ed) (கொழும்பு) 25.07.2010 காலை 9 மணி | அரசறிவியல்: திரு.V.K.செல்வா (கொழும்பு) 24.07.2010 காலை 9 மணி |

பிரதான அனுசரணையாளர்கள்
கல்விப் பாரம்பரியம் மிக்க யாழ்ப்பாணத்தின் ஓர் கல்விச் சாம்ராஜ்யம்
IIS CITY CAMPUS
NSB National Savings Bank Hospital Road, Jaffna.



300 பேருக்கு மட்டுமே
**A/L தமிழ் இறுதிக்கருத்தரங்கு**

இன்று - ஞாயிறு 1.00 - 4.00
நாளை - திங்கள் 2.15 - 5.00
வெள்ளி - 8.00 - 11.00

சகல முழுமையான விடைகளுடன் இலக்கணம் தெளிவாக, சுட்டிப்பாக (யாழ்-கொழும்பு)
இடம் :- SCIENCE HALL கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
நா.க.தமிழ்ந்திரன் | முன்னாள் விரிவுரையாளர்



**வேலையாள்கள் தேவை**

எமது வியாபார நிறுவனத்துக்கு மூன்று வருட அனுபவமுள்ள வேலையாள்கள் தேவை.
I) சிட்டை எழுதுநர்.
II) விற்பனையாளர், சேல்ஸ்மன்.
இம்மாத இறுதிக்குள் தொடர்புகொள்ளவும்.
T.P.: 0777222532
(101130)



**SM Consultant services**

இத்தாலி, ஜேர்மனி ஆகிய நாடுகளுக்குச் செல்ல விரும்புவோர் உடன் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

இலண்டனில் உயர்கல்வி கற்க ஓர் அரிய வாய்ப்பு.

GCE O/L English: B அல்லது IELTS உடன் இலகுவாக உடனடியாக விசாக்கள் பெற்றுத்தரப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் உடனடியாக எம்முடன் தொடர்பு கொண்டு தேவையான விபரங்களைச் சமர்ப்பித்து விசாக்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

STUDY IN UKRAINE

வேறு எங்கும் இல்லாதவாறு மிகக்குறைந்த கட்டணத்தில் Lugansk & Crimea State Medical University-(Ukraine)இல் இணைந்து சிறீலங்கா Medical Council இனால் அங்கீகரிக்கப்பட்ட டாக்டராக வர விரும்பினால் உடன் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

STUDY IN INDIA

இந்தியாவின் பிரபலமாக SRM University, Bangalore University , Madras University என்னும் இது போன்ற பிரபலமான கல்லூரிகளில் கற்பதற்கு உடன் அனுமதிகள் பெற்றுத்தரப்படும். விண்ணப்பிக்கவிரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

பாடநெறிகள்: B.E, B.Sc, B.Ed, BBM, B.Com, B.PT, BA, LL.B, M.SC, MBBS, MBA

அனைத்து விபரங்கட்கும் தினமும் (ஞாயிறு உட்பட) காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை அலுவலகத்தில் நேரடியாகச் சந்தித்துக்கொள்ளலாம்.
அனைத்துச் சேவைகளும் நம்பிக்கைக்குரியவை என்பதை உத்தரவாதத்துடன் உறுதிப்படுத்துகின்றோம்.

SM Consultant services
148, கோவில் வீதி, (யுனிசெவ் முன்பாக) யாழ்ப்பாணம்.
Mobile: 0774528818, Tel: 0215673818, Fax: 0212223818.
E-mail: mg1404_2009@yahoo.com



புதியபிரிவுகள் ஆரம்பம்

Advanced Dip. in Video mixing (Morph, Cool3d, Project, Premiere, Soundfroge, Combustion, Power director, Vcd and convertor, Editing using Photoshop)
Auto CAD
ICT(O/L) (தரம் 10 & 11)
ICT(A/L) (தரம் 12 & 13)
GIT(A/L) (தரம் 12 & 13)
Ms Office2007 & DTP
Internet & Email
BIT, AAT, ACBF
Accounting Package
Computer Hardware
Programming Languages
Kids Programme (தரம் 01→09வரை)
Group Classes

முழுமையான கணனிக் கல்விக்கு இன்றே எம்முடன் இணையுங்கள்...

CBCA
CB Computer Academy Station Road Kondavil. T.P: 021-3217903


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.07.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Spoken English & Diploma in English

City & Guilds

**Opening the Door to the Modern world**

International English Language Qualifications

City Guilds Offers a wide range of Engilsh Language Qualifications suitable for students and people of all ages engaged in work & business. They develop Speaking , Writing, Reading and Listening skills using real - life examples and tasks from entry to advanced level.



குறுகிய காலத்தில் பூரண ஆங்கில அறிவினைப் பெற: சரளமாக எந்த சூழ்நிலையிலும் ஆங்கிலத்தில் பேச, இலக்கணப்பிழைகள் இல்லாமல் எழுத, எந்த ஆங்கிலப் பத்திரிகையையும் இலகுவாகப் படிக்க ஏற்ற ஓர் பாடநெறி.

வங்கிகள், தனியார் நிறுவனங்கள், I.N.G.Os மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள், அரசாங்க நிறுவனங்கள் போன்றவற்றிலும் வெளிநாடுகளிலும் வேலை வாய்ப்பினைப் பெற அரியதோர் பாடநெறி.City & Guilds இன் சான்றிதழ்கள் உலகம் முழுவதும் அங்கீகாரம் பெற்றவையாகும்.

அடிப்படையில் இருந்து ஆங்கிலம் போதிக்கப்படும் IELTS பரீட்சை எடுப்பதற்கு முன் City & Guilds இன் Diploma in English பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தினால் IELTS பாடநெறியை மிகவும் இலகுவாகப் பின் பற்றமுடியும்.

The International ESOL Diploma Covers all Four Language Skills, Reading, Writing, Listening and Speaking

| Course Schedule | Non - Tue - Wed- Thu - Fri | Saturday & Sunday |
|---|---|---|
| Duration | 3 Months (100 Hours) | 3 Months (100 Hours) |
| Time | 11.00 a.m. - 1.00 p.m | 11.00 a.m. - 2.00 p.m |
| Commencement | 26.07.2010 | 31.07.2010 |

புதிய வகுப்புக்கள் 26.07.2010 இல் ஆரம்பம்

## BRITISH COLLEGE OF ENGLISH

City & Guilds Approved Centre

143, Adiyapatham Road, Thirunelvely. T.P:0213216027 - 0778803887



# தேவை

இலங்கையில் முன்னணி வகிக்கும் ஆடை தயாரிப்பு நிறுவனம் ஒன்றிற்கு யாழ்.குடாநாட்டிற்கு இத்துறையில் கணிசமான முன் அனுபவம் உள்ள விற்பனைப் பிரதிநிதி தேவை. தமிழ் மொழிமற்றும் ஆங்கில, சிங்கள மொழிகளில் சரளமான பரிச்சயம் இருக்கவேண்டும்.

மாத வருமானம் 40,000/- க்கு மேல் பெறக்கூடிய வாய்ப்பு உண்டு.

மேலதிக விவரங்களுக்கு : 0772683344

*DG Fashion Garments (Pvt) Ltd*

Ashokarama Rd, Koondeniya, Dickwella.

Tel: 0412255954/9 , Fax: 041-2255955

E-mail : info@newdgfashions.com




## காணி விற்பனைக்கு

நுணாவில் சந்தியில் இருந்து கனகம்புளியடிச் சந்திக்குச் செல்லும் பிரதான பேருந்துப் பாதையில் மடத்தடிச் சந்திக்கு அருகில் விவசாயம் மற்றும் தொழில்நிலையம் ஆரம்பிப்பதற்கு ஏற்ற காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0114879430, திருமதி சோமாஸ்கந்தசர்மா சுந்தராம்பாள்.



# நீங்கள் ஏமாற வேண்டாம்.!!

நீங்கள் வாங்கும் நீர் குழாய்களிலும் பொருத்துக்களிலும் எஸ் லோன் இலட்சினை இல்லையெனில் அவை எஸ் லோன் அல்ல.




எஸ் லோன் இலட்சினை பொறிக்கப்பட்டுள்ளதா என்று சரி பார்த்து வாங்குங்கள்

S-lon

என்றும் முன்னணியில்

எஸ்-லோன் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்,
148, வொக்சோல் வீதி, கொழும்பு 02.



## வேலையாள்கள் தேவை

கடைச்சல் வேலையில் (லேத்) அனுபவமுள்ள வேலையாள்கள் தேவை. (கப்ளின், வாட்டப்பம், பம் கடைச்சல்)

**செல்வா காட்வெயர்ஸ்**

தொடர்பு: இல.120, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 0212222873



## வீடு விற்பனைக்கு

நெல்லியடி நகருக்கு அண்மையில் 3 அறைகள், சமையல் அறை, ஹோல் மற்றும் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0112387091
0213217931



## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்யப்பட்டது ஒரு கிலோகிராம் 450/=. வியாபாரிகளுக்கு கழிவு வழங்கப்படும்.

**விஜயகுமார்,**
குளப்பிட்டி வீதி,
ஆனைக்கோட்டை:



## சேவை

குறைந்த செலவில் குறுகிய காலத்தில் உயர்ந்த தரத்தில் நினைவு மலர் மற்றும் நினைவு மலர்களுக்கான படங்கள் அச்சிட்டுக் கொடுக்கப்படும்.

**பிள்ளையார் அச்சகம்**
நல்லூர்.



## புறொயிலர் விற்பனைக்கு

நிறைகூடிய புறொயிலர் உடன் சுத்தம் செய்யப்பட்டது 1 kg 480/= திங்கள், புதன், சனி, ஞாயிறுகளில் 12 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

**குமரன் பாம்**
227, பிறவுண் வீதி (கலட்டிச் சந்தி அருகில்), யாழ்ப்பாணம்.



## சேவல் குஞ்சுகள் விற்பனைக்கு

ஒரு மாதம் வளர்க்கப்பட்ட சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. ரூபா 60/= மட்டுமே. மொத்தக் கொள்வனவிற்கு விசேட கழிவு.

தொ.பே: 0217200616, 0773530996



## சேல்ஸ்மன் தேவை

செல்லமுத்தூஸ் புடைவை மாளிகைக்கு சேல்ஸ்மன் (ஆண்கள், பெண்கள்) தேவை.

தொடர்பு:
செல்லமுத்தூஸ் புடைவை மாளிகை
நெல்லியடி,
2263238



## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் தினமும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்**
*19, முருகேசர் வீதி, நல்லூர்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசீகரத் தோற்றத்திற்கு!

# சந்தனாலேப



(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)

[illegible]

'சிவா நறுமணப் பூங்கா'

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சகல பார்மசிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்).

MANUFACTURED BY: SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250.


## இசை வகுப்புகள்

கர்நாடக இசை வகுப்புகள்,
நடத்துபவர் A.K.கருணாகரன்
தொடர்பு:- 0774239303

## விற்பனைக்கு

புத்தூர் சந்தி, மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாசாலைக்கு ஒரே வேலி கொண்டதும் A-9 பாதையிலிருந்து செல்வதற்குப் பாதையும் உடைய ஏழு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. காணியுள் பலா, வேம்பு, சிறியவீடு, கற்கிணறு உண்டு. குடியிருப்புக்கு உகந்த நிலம்.

தொடர்பு:- கா.பூபாலபிள்ளை, காசித்தம்பி வளவு, மீசாலை மேற்கு, மீசாலை. தொ.பே: 0778089602


# VISA - வீசா
Consultancy Service

UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND, SWITZERLAND, FRANCE, GERMANY, NORWAY, DENMARK,

Visit / Tourist, Business, Family Students, Migration, Medical Visas

Call : 0776 209 887

SIC, 734, Hospital Road, Jaffna.



# Nelly Travels & Tours

SUPER LUXURY BUS SERVICE

## JAFFNA - COLOMBO

DEPARTURE DAILY

| | |
|---|---|
| COLOMBO 8.00 P.M. | FROM NEAR RAMAKRISHNA MISSION NO. 53/1 E, WELLAWATTE. |
| JAFFNA 6.00 P.M. | FROM NEAR JEGAN PHARMACY |




Hotline : 07777 50308 / 011 2721118

SEAT RESERVATION (BOOKINGS)

Kajarams Communications

Sithankerny. Tel: 021 7210307, 021 3213155



# AGS SHARMA & CO.
## (Chartered Accountants)

G. S. Swaminathan Sharma
MBA (UK), FCA (SL), FCMA (UK), CMA (AUS), FSCMA (SL)

நாங்கள் பின்வரும் சேவைகளை உங்களுக்காக வழங்குகிறோம்

காசேடு, பேரேடு தயாரித்தல்
கணக்காய்வு அறிக்கை, வருமான வரி,
பெறுமதி சேர்க்கப்பட்ட வரி,
மொத்த விற்பனை வரி, பொருளாதார சேவைகள் வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி,
நிறுத்தி வைத்தல் வரி, சமூகப்பொறுப்பு வரி,
ஏனைய வரிச் சேவைகள்.

வியாபாரப் பதிவு (வரையறுக்கப்பட்ட கம்பனிகள், பங்குடமை, தனிநபர் வியாபாரம்)
வியாபார இலட்சனைப் பதிவு,
பதிவு செய்யப்பட்ட செயலாளர்,
(பதிவு இல:-SEC/(02)2005/173)
முதலீட்டு சபை பதிவு ஆலோசனை,
முகாமைத்துவ ஆலோசனைகள்,
ஆரம்பிக்கும் தொழிலுக்குரிய ஆலோசனைகள்,
கற்கை நெறி அமைப்பு, விரிவாக்கம்.

Address :-


139, Hospital Road,
Hospital Junction,
Jaffna.

Tel: 021-222 4589, 0777802900
021-222 8258
E-mail: agsjaffna@gmail.com
swaminathan@agsarma.com

BRANCH: #155/18-1/1, Messenger Street,
Colombo-12,
Sri Lanka.

E-mail: audit@agsarma.com
Tel: 011-3133044, 3158480, 2435666.






நவீன சாம்ராச்சியம்!

## தலைநகரில்.........

முழுக்குடும்பத்திற்கான
நவீன டிசைன் ஆடைகளின்
சாம்ராட்சியம்!

## KAMALESWARY TEX

No. 214, Main Street, Colombo - 11.
Tel : 2452878, 2345936, Fax : 2473778

இன்று! யாழ். மண்ணில்........



நேரடி இறக்குமதி !

நிதான விலை !

## கமலேஸ்வரி புடவையகம்

25, பெரியகடை வீதி
யாழ்ப்பாணம்.

Web : kamaleswary.com E-mail : info@kamaleswary.com


# முதலாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு: 06.03.1962 உதிர்வு: 29.07.2009

திருமதி
## இராஜேஸ்வரன் டெய்சிராணி

திதி: 18.07.2010 அட்டமி

ஐயிரு கண்கள் சுற்றி- எங்கள்
அகல் ஒளி அம்மாவுன்னை....
தேடியே..... நொந்து... நொந்து....
தேவியே...... காணாவுள்ளம்.....
வாடுதே அம்மா இன்னும்
வந்திடாத் தூரம் நீபோய்....

கணமதும் நிமிடமாகி....
கடந்தது மணியதாகி......
நாளதும் வாரமாகி.... அது
நடந்து மெல் மாதமாகி.....
ஓதிட வருடமாகி.....
ஒப்பிலாத் தாயே எம்மை.....

காணுற வாரா வேளை
காணுவோம் என்றே நாமும்....
ஓர்சிறு கனவுதானும்
ஓர்பொழுதறிந்தோமில்லை....

மாளுதே அம்மா.... ஐந்து
மலரதாம் உள்ளம் இங்கே.....
தேறிட வழியுமின்றி- எம்மைத்
தேற்றிட வகையுமின்றி....
போகுதே அம்மா தெய்வ
பொற்பதம் பெற்ற அம்மா....
ஆறுதல் தந்து அங்கண்
அமைதி கொள் தாயே.... அம்மா......
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் உங்கள் நினைவுடன்:
கணவன் - வே. இராஜேஸ்வரன்
பிள்ளைகள் - சாமினி, சாளினி, சாரங்கா, பிரசாந்தி.

16, கல்லூரி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org